பக்கங்கள்: முப்பத்து இரண்டு

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 சித்திரை 12 திங்கட்கிழமை (25.04.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 150


02 வென்றது மும்பை வீழ்ந்தது டெக்கான்


03 சச்சின் சோகத்தில்


16 பொறிக்குள் சிக்க வைத்தது யார்...?


18 மலையேறும் வரதட்சணை


24 இலங்கை அரசுக்கு தண்டனை கொடுக்க வேண்டும்

## சத்ய சாயிபாபா மகா சமாதியானார்

### பிரசாந்தி நிலையத்தில் திருவுடல்



புட்டபர்த்தி, ஏப்.25

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா நேற்றுக் காலை 7.40 மணிக்கு மகா சமாதியானார் என்று சாயி வைத்தியசாலைப் பணிப்பாளர் என்.சபாயா அறிவித்தார்.

ஸ்ரீ சத்ய சாயி பாபா உடல்நலம்குன்றி மார்ச் 28 ஆம் திகதி புட்டபர்த்தி சாயி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இவர் நலம் பெற வேண்டுமென உலகம் முழுவதுமுள்ள இவரது பக்தர்கள் பிரார்த்தனை நடத்தி வந்தனர்.

பகவான் மகா சமாதி அடைந்த செய்தி பரவியவுடன் புட்டபர்த்தியில் பதற்றம் ஏற்பட்டது. இங்கு ஏற்கனவே பெருமளவில் பொலிஸார் குவிக்கப்பட்டிருந்தனர்.

பகவானின் திருவுடல் நேற்று மாலை பிரசாந்தி நிலையத்துக்குக் கொண்டுவரப்பட்டு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டது. மக்கள் அஞ்சலிக்குப் பின்னர் புதன்கிழமை (32 ஆம் பக்கம் பார்க்க)

# இணங்கி வராவிட்டால் ஐ.நாவில் இலங்கையை கைவிடும் இந்தியா

### நெருக்கடிக்குள் கொழும்பு

புதுடில்லி, ஏப்ரல் 25

தமிழர்களுடனான பிரச்சினைக்கு விரைந்து அரசியல் தீர்வு காணுதல் மற்றும் சீனாவுடனான உறவு ஆகிய விவகாரங்களில் தமது போக்குக்குக் கொழும்பு இணங்கி வராவிட்டால், ஐக்கிய நாடுகள் சபை பொதுச் செயலாளர் நியமித்த நிபுணர் குழுவின் போர்க் குற்ற அறிக்கை விவகாரத்தில் உதவ முடியாத நிலையை - இலங்கையைக் கைவிடும் நிலையை - புதுடில்லி எடுக்கும் என்ற எச்சரிக்கை கொழும்புக்கு வழங்கப்பட்டுள்ளது.

இதன் முதற்கட்டமாக, தற்போதைய அரசியல் சூழல் குறித்துக் கலந்துரையாடுவதற்காக இலங்கையிலிருந்து உயர் மட்டக் குழு புதுடில்லி வருவதற்கு விடுக்கப்பட்ட அழைப்பை இந்தியா நிராகரித்துள்ளது. போர்க் காலத்தில் இந்திய - இலங்கை விவகாரங்களைக் கையாள்வதற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவால் நியமிக்கப்பட்ட, அமைச்சர் பஸில், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் லலித் வீரதுங்க ஆகியோர் அடங்கிய உயர் மட்டக் குழுவுக்கே உடனடியாகப் புதுடில்லி வருவதற்கான அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. மே மாத இறுதிவரை இலங்கைக் குழுவைச் சந்திப்பதற்கு நேரம் ஒதுக்கமுடியாது என்று புதுடில்லி ஆணித்தரமாகக் கூறிவிட்டது என்று இங்கு புதுடில்லியில் ராஜதந்திரிகள் தெரிவித்தனர். (32 ஆம் பக்கம் பார்க்க)

## இராஜதந்திரிகளின் முக்கிய சந்திப்பில் சீனத் தூதுவர் பங்குபற்றாதது ஏன்?

கொழும்பு,ஏப்.25

ஐ.நாவின் நிபுணர் குழு அறிக்கை தொடர்பான இலங்கையின் நிலைப்பாட்டை வெளிநாட்டு ராஜதந்திரிகளுக்கு விளக்குவதற்காக இலங்கை அரசு ஏற்பாடு செய்த சந்திப்பில் சீனத் தூதுவர் யங் சேயுபிங் கலந்து கொள்ளவில்லை.

வெளிவிவகார அமைச்சு ஏற்பாடு செய்திருந்த இந்தச் சந்திப்பு வியாழக்கிழமை இடம்பெற்றது. (32 ஆம் பக்கம் பார்க்க)

### ஐ.நா. அறிக்கைக்கு எதிராக

## 10 லட்சம் விவசாயிகள் ஒன்றுதிரண்டு கொழும்பில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஏப்.25

ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழுவின் இலங்கை தொடர்பான அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் நாடெங்கிலும் 10 லட்சம் விவசாயிகளை ஒன்றுதிரட்டி கொழும்பில் பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தப்படவுள்ளதாக அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன தெரிவித்துள்ளார். (32 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைக்கு எதிராகப் பிரேரணை வந்தால் ரஷ்யா, சீனா 'வீட்டோ'வைப் பிரயோகிக்கும்

கொழும்பு, ஏப்.25

ஐ.நா.நிபுணர் குழுவின் அறிக்கைக்கு எதிராக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் நான்கு நாடுகள் இலங்கைக்கு ஆதரவு தெரிவிக்க முன்வந்துள்ளன.

சீனா, ரஷ்யா, இந்தியா, போர்த்துக்கல் ஆகிய நாடுகளே இலங்கைக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ள நாடுகளாகும். சீனா, ரஷ்யா ஆகிய இரு நாடுகளும் பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகள். எந்தவொரு பிரேரணையையும் செல்லுபடியற்றதாக்கக்கூடிய வீட்டோ அதிகாரத்தை இந்த இரு நாடுகளும் கொண்டுள்ளன.

பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் 15 நாடுகளில் ஐந்து நாடுகள் வீட்டோ அதிகாரம் கொண்டவை. ஏனைய பத்து நாடுகளும் சுழற்சி முறையில் தற்காலிகமாகத் தலா இரண்டு வருடங்கள் அங்கம் வகிக்கும் நாடுகளாகும்.

இலங்கைக்கு எதிராக ஐ.நா. பாதுகாப்புச் சபையில் முன்வைக்கப்படும் (32 ஆம் பக்கம் பார்க்க)

## நிபுணர்குழு அறிக்கை இன்று வெளியாகிறது

கொழும்பு,ஏப்.25

இங்கையின் யுத்தக்குற்றச்சாட்டுகள் தொடர்பான ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையை வெளியிட வேண்டாம் என இலங்கை அரசு ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ - மூனிடம் கேட்டுக் கொண்ட போதிலும் அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. இன்று அந்த அறிக்கையை வெளியிடவுள்ளதாக ஐ.நாவின் பதில் (32 ஆம் பக்கம் பார்க்க)





பகவான் ஸ்ரீசத்ய சாயிபாபாவின் திருவுடலைத் தாங்கிய அம்புலன்ஸ் பிரஷாந்தி நிலையத்தை நோக்கி வருவதையும், பிரஷாந்தி நிலைய வாயிலில் லட்சக்கணக்கான பக்தர்கள் பாபாவின் திருவுடலை எதிர்பார்த்துக் காத்திருப்பதையும் படங்களில் காண்க.

## ஐ.பி.எல் இருபத்தி ஏழாவது ஆட்டம்

ஆட்டம்: மும்பை இந்தியன்ஸ் எதிர் டெக்கான் சார்ஜஸ் நாணயச் சுழற்சி: டெக்கான் சார்ஜஸ்
முடிவு: 37 ஓட்டங்களால் மும்பை இந்தியன்ஸ் வெற்றி ஆட்டநாயகன்: மலிங்க

**மும்பை இந்தியன்ஸ்**

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| ஜேக்கப்ஸ் | c பிரக்கன் ஓஜா b இசாந் சர்மா | 32 | 20 | 05 | 1 |
| டெண்டுல்கார் | c ஸ்ரெய்ன் b மிஷ்ரா | 28 | 24 | 04 | 0 |
| ராயுடு | c தவான் b மிஷ்ரா | 07 | 08 | 00 | 0 |
| பொலார்ட் | c சங்கக்கார b பிரக்கன் ஓஜா | 00 | 01 | 00 | 0 |
| ரோகித் சர்மா | ஆட்டமிழப்பில்லை | 56 | 34 | 05 | 3 |
| சைமன்ஸ் | ஆட்டமிழப்பில்லை | 44 | 33 | 04 | 1 |
| சர்ரிஷ் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| ஹர்பஜன்சிங் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| அஹமட் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| முனாப் பட்டேல் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| மலிங்க | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (w 2, lb 3) | 05 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| மிஷ்ரா | 04 | 14 | 2 | 0 |
| ஸ்ரெய்ன் | 04 | 39 | 0 | 0 |
| பிரக்கன் ஓஜா | 04 | 29 | 1 | 0 |
| இசாந் சர்மா | 04 | 39 | 1 | 0 |
| கிறிஸ்ரெய்ன் | 04 | 48 | 0 | 0 |

TOTAL - 172/4 (20)
1-47 (ஜேக்கப்ஸ்), 2-70 (டெண்டுல்கார்), 3-70 (ராயுடு), 4-70 (பொலார்ட்),

**டெக்கான் சார்ஜஸ்**

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| சொஹால் | run out(பொலார்ட்/ஜேக்கப்ஸ்) | 05 | 03 | 00 | 0 |
| தவான் | b மலிங்க | 25 | 22 | 05 | 0 |
| சங்கக்கார | b மலிங்க | 34 | 28 | 03 | 0 |
| வைட் | run out (மலிங்க) | 01 | 07 | 00 | 0 |
| சிப்லி | c சர்ரிஷ் b பொலார்ட் | 06 | 08 | 01 | 0 |
| கிறிஸ்ரெய்ன் | st ஜேக்கப்ஸ் b முனாப் பட்டேல் | 21 | 18 | 01 | 1 |
| ரவி ரேஜா | c & b மலிங்க | 01 | 04 | 00 | 0 |
| மிஷ்ரா | ஆட்டமிழப்பில்லை | 25 | 19 | 04 | 0 |
| ஸ்ரெய்ன் | run out (ஸ்ரெய்ன்/அஹமட்) | 04 | 09 | 00 | 0 |
| இசாந் சர்மா | ஆட்டமிழப்பில்லை | 01 | 02 | 00 | 0 |
| பிரக்கன் ஓஜா | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (w 7, lb 5) | 12 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| முனாப் பட்டேல் | 04 | 35 | 1 | 0 |
| ஹர்பஜன் சிங் | 04 | 27 | 0 | 0 |
| அஹமட் | 04 | 27 | 0 | 0 |
| மலிங்க | 04 | 09 | 3 | 0 |
| பொலார்ட் | 02 | 20 | 1 | 0 |
| சர்ரிஷ் | 02 | 12 | 0 | 0 |

TOTAL - 135/8 (20)
1-14 (சொஹால்), 2-41 (தவான்), 3-54 (வைட்), 4-70 (சிப்லி), 5-93 (சங்கக்கார), 6-99 (கிறிஸ்ரெய்ன்), 7-101 (ரவி ரேஜா), 8-128 (ஸ்ரெய்ன்)

c - பிடியெடுப்பு b - பந்துவீசியவர் st - ஸ்ரொம்

## ஐ.பி.எல் இருபத்துஎட்டாவது ஆட்டம்

ஆட்டம்: கொச்சி டஸ்கேர்ஸ் எதிர் ராஜஸ்தான் றோயல்ஸ் நாணயச் சுழற்சி: ராஜஸ்தான் றோயல்ஸ்
முடிவு: 08 விக்கெட்டுக்களால் ராஜஸ்தான் வெற்றி ஆட்டநாயகன்: வோர்ன்

**கொச்சி டஸ்கேர்ஸ்**

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| ஜெயவர்த்தன | b போத்தா | 13 | 13 | 02 | 0 |
| லக்ஸ்மன் | run out (ராவிட்) | 08 | 10 | 01 | 0 |
| பார்திவ் பட்டேல் | st யங்நிக் b வோர்ன் | 32 | 34 | 02 | 0 |
| பிரட் ஹொஜ் | b வோர்ன் | 08 | 14 | 00 | 0 |
| ஜடேஜா | c & b வோர்ன் | 22 | 23 | 02 | 0 |
| கொமிஷ் | c வொட்ஸன் b திரிவேடி | 00 | 01 | 00 | 0 |
| திஸ்ஸர பெரேரா | c பின்னி b திரிவேடி | 01 | 04 | 00 | 0 |
| ஜாதவ் | c யங்நிக் b திரிவேடி | 05 | 09 | 00 | 0 |
| வினய்க் குமார் | c வொட்ஸன் b அமிர்சிங் | 05 | 04 | 01 | 0 |
| முரளிதரன் | ஆட்டமிழப்பில்லை | 05 | 08 | 00 | 0 |
| ஆர்.பி.சிங் | run out (போத்தா/யங்நிக்) | 01 | 01 | 00 | 0 |
| உதிரிகள் | (w 2, lb 4, nb 1, b 2) | 09 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| அமிர் சிங் | 04 | 26 | 1 | 0 |
| வொட்ஸன் | 04 | 23 | 0 | 0 |
| போத்தா | 04 | 19 | 1 | 0 |
| வோர்ன் | 04 | 16 | 3 | 0 |
| திரிவேடி | 04 | 19 | 3 | 0 |

TOTAL - 109/10 (20)
1-26 (லக்ஸ்மன்), 2-28 (ஜெயவர்த்தன), 3-42 (ஹொஜ்), 4-90 (ஜடேஜா), 5-90 (பட்டேல்), 6-90 (கொமிஷ்), 7-92 (பெரேரா), 8-98 (வினய்க்குமார்), 9-108 (ஜாதவ்), 10-109 (அமிர் சிங்)

**ராஜஸ்தான் றோயல்ஸ்**

| பெயர் | ஆட்டமிழப்பு முறை | R | B | 4s | 6s |
|---|---|---|---|---|---|
| வொட்ஸன் | b ஜடேஜா | 49 | 40 | 04 | 2 |
| ராவிட் | run out(ஜாதவ்/பட்டேல்) | 44 | 37 | 04 | 1 |
| போத்தா | ஆட்டமிழப்பில்லை | 14 | 07 | 03 | 0 |
| ரெயிலர் | ஆட்டமிழப்பில்லை | 02 | 01 | 00 | 0 |
| மெனேரியா | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| ரஹானி | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| அமிர் சிங் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| யங்நிக் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| வோர்ன் | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| பின்னி | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| திரிவேடி | துடுப்பெடுத்தாடவில்லை | | | | |
| உதிரிகள் | (w 1, lb 1) | 02 | | | |

| பெயர் | O | R | W | M |
|---|---|---|---|---|
| ஆர்.பி. சிங் | 02 | 11 | 0 | 0 |
| வினய்க்குமார் | 03 | 27 | 0 | 0 |
| முரளிதரன் | 3.1 | 28 | 0 | 0 |
| திஸ்ஸர பெரேரா | 02 | 11 | 0 | 0 |
| ஜடேஜா | 03 | 24 | 1 | 0 |
| கொமிஷ் | 01 | 09 | 0 | 0 |

TOTAL - 111/2 (14.1)
1-71 (ராவிட்), 2-105 (வொட்ஸன்)

c - பிடியெடுப்பு b - பந்துவீசியவர் st - ஸ்ரொம்

# வென்றது மும்பை; வீழ்ந்தது டெக்கான்



மலிங்க அசத்தல் பந்து வீச்சு. அதிரடியான துடுப்பாட்டம் ரோகித் சர்மா. வெற்றி கிடைத்தது மும்பைக்கு. சச்சினின் 38 ஆவது பிறந்தநாள் நேற்று. மும்பைக்கு வெற்றி 37 ஓட்டங்களால். சங்காவின் டெக்கான், மும்பையிடம் சரிந்தது.

ஹைதரபாத்தில் ஐ.பி.எல்லின் 27 ஆவது ஆட்டம். சுழற்றப்பட்டது நாணயம். பெறப்பட்டது வெற்றி சங்காவுக்கு. களத்தடுப்பு அவரது முடிவு.

ஜேக்கப்ஸ் - டெண்டுல்கார் துடுப்பெடுத்தாட வருகை. மிஷ்ரா பந்து வீச அழைப்பு. அடக்கமாய் தொடங்கியது மும்பை ஆட்டம். ஸ்ரெய்ன் வீசினார் இரண்டாவது ஓவர். சச்சின் அடித்தது இரண்டு பவுண்டரிகள். தொடங்கியது மும்பையின் அதிரடி. அடுத்த ஓவரில் பறந்தது சிக்ஸர். மீண்டும் பவுண்டரிகள் விரைந்தன எல்லைக்கு. 31 பந்துகளில் முதலாவது விக்கெட்டுக்காய் இணைப்பு 47 ஓட்டங்கள். இசாந் சர்மாவின் வேகத்தில் வெளியேறினார் ஜேக்கப்ஸ்.

ராயுடு நுழைந்தார் அடுத்து. இணைந்தார் சச்சினுடன். மெதுவாக நகர்ந்தது ஆட்டம். டெக்கான் அடக்கியது மும்பையின் அதிரடியை. மும்பை எட்டியது 70 ஓட்டங்கள். வீழத் தொடங்கியது விக்கெட்டுக்கள். மிஷ்ராவின் பந்து சரித்தது டெண்டுல்காரின் விக்கெட்டை. 38 ஆவது வயதில் 28 ஓட்டங்களுடன் வெளியேற்றம். அடுத்துச் சரிந்தது ராயுடு விக்கெட். அடுத்து வந்தார் பொலாட். முடிந்தது வந்த வேகத்தில் அவரது ஆட்டம்.

ரோகித் சர்மா- சைமன்ஸ் இணைந்தனர் புதிய இணைப்பைத் தொடங்க. நிதானத்துடன் ஆட்டம் தொடங்கியது. ஓட்டங்கள் ஒற்றை இலக்கத்துடன் நகர்ந்தது. தேவைக்கு இரண்டு ஓட்டங்கள். பவுண்டரிகள், சிக்ஸர்கள் வெளியேறவில்லை. அதிரடிக்கும் முனையவில்லை. சிறப்பாக இடப்பட்டது அடித்தளம்.

16 ஆவது ஓவரில் தொடங்கியது அதிரடி. பவுண்டரிகள் அடிக்கப்பட்டன. டெக்கானுக்கு தலையிடி ஆரம்பம். சிக்கியது மும்பையின் அதிரடியில். வீழ்த்த முடியவில்லை விக்கெட்டை. இறுதி இரு ஓவர்களில் விளாசப்பட்டன 40 ஓட்டங்கள். பிரிக்கப்பட முடியாத இணைப்பாட்டமாய் பெறப்பட்டது 102 ஓட்டங்கள். ரோகித் அதிரடியில் அடித்தார் அரைச்சதம். 34 பந்துகளில் பெற்றுக் கொடுத்தார் 56 ஓட்டங்கள்.

மும்பை இருபது ஓவர்களில் பெற்றது 172 ஓட்டங்கள். இழந்தது 4 விக்கெட்டுக்கள்.

பதிலாட்டம் டெக்கான் தொடக்கம். ஏமாற்றம் ஆரம்பம். வீழத் தொடங்கியது விக்கெட்டுக்கள். அவசரம் ஓட்டங்கள் பெறுவதில். சாத்தியமில்லை மும்பையின் களத்தடுப்பின் முன்னால். ரன் அவுட்டில் மூன்று விக்கெட்டுக்கள் வீழ்ந்தன. சங்கா, தவான் மட்டும் மீட்புக்காய் போராட்டம். இருந்தும் மலிங்கவின் வேகம் விட்டு வைக்கவில்லை இருவரையும். பின் வரிசையில் மிஷ்ரா சாதித்தார். ஏனையோர் சோபிப்பில்லை. இறுதியில் ஆட்டம் 135 ஓட்டங்களுடன் முடிவு. கலக்கியது மும்பை. மலிங்க ஆட்ட நாய்கன்.

# பழி தீர்த்தது பாகிஸ்தான்; வாங்கிக் கட்டியது தீவுகள்



பாகிஸ்தானுக்கும் - மேற்கிந்தியத்தீவுகளுக்கும் இடையிலான முதலாவது ஒரு நாள் ஆட்டத்தில் பாகிஸ்தான் அணி எட்டு விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றிருக்கின்றது. நேற்று முன்தினம் சென் லூசியாவில் ஆட்டம் இடம்பெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி டரன் பிராவோவின் அரைச்சதத்தின் உதவியுடன் 221 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது. அத்துடன் பாகிஸ்தான் அணி 30 ஓட்டங்களை உதிரிகளாக வாரி வழங்கியிருந்தது.

மேற்கிந்தியத்தீவுகள் அணித் தலைவர் சமி இறுதியில் அபாரமாகத் துடுப்பெடுத்தாடி 17 பந்துகளில் 30 ஓட்டங்கள் பெற்றுக் கொடுத்தார். இதில் இரண்டு சிக்ஸர்களும், மூன்று பவுண்டரிகளும் அடங்கும்.

பந்து வீச்சில் பாகிஸ்தான் அணியின் சார்பாக வகாப் றியாஸ் இரண்டு விக்கெட்டுக்களையும், மொஹமட் ஹபீஸ், சயிட் அஜ்மல் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த பாகிஸ்தான் அணி அந்த அணியின் மூன்று வீரர்களின் சிறப்பான அரைச்சதத்தின் உதவியுடன் 41.3 ஓவர்களிலேயே குறித்த வெற்றி இலக்கை இரண்டு விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து அடைந்தது.

துடுப்பாட்டத்தில் மிஷ்பா - உல் ஹக் ஆட்டமிழக்காமல் 73 ஓட்டங்களையும், அஷாட் சபிக் ஆட்டமிழக்கமால் 61 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். மொஹமட் ஹபீஸ் 45 பந்துகளில் 54 ஓட்டங்களை அதிரடியாகப் பெற்றுக் கொடுத்தார்.

இறுதியில் பாகிஸ்தான் அணி 41.3 ஓவர்களில் இரண்டு விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து குறித்த வெற்றியிலக்கை அடைந்தது. பந்து வீச்சில் மேற்கிந்தியத் தீவுகள் சார்பாக பிஸ்ஸூ இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினார். பந்து வீச்சு துடுப்பாட்டம் இரண்டிலும் சாதித்த மொஹமட் ஹபீஸ் ஆட்ட நாயகனாகத் தேர்வானார்.

இதன் மூலம் ஐந்து ஆட்டங்கள் கொண்ட தொடரில் 1-0 என்ற கணக்கில் பாகிஸ்தான் அணி முன்னிலை வகிக்கின்றது. இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது சர்வதேச ஒரு நாள் ஆட்டம் இன்று இரவு 7 மணிக்கு (இலங்கை நேரம்) ஆரம்பமாகின்றது.

(15)

# ராஜஸ்தான் அபாரம்; பணிந்தது கொச்சி



ராஜஸ்தான் றோயல்ஸின் சிறப்பான பந்து வீச்சில் கொச்சி அணி 109 ஓட்டங்களுக்குள் சுருண்டது.

ஐ.பி.எல்லின் 28 ஆவது ஆட்டம் நேற்று ஜெய்ப்பூரில் இடம் பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ராஜஸ்தான் ரோயல்ஸ் அணித்தலைவர் ஷேன் வோர்ன் கொச்சி அணியை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தார்.

அதன்படி களமிறங்கிய கொச்சி அணி வோர்ன், திரிவேடியின் பந்து வீச்சைச் சமாளிக்க முடியாமல் திணறியது. அந்த அணியின் முன்னணி நட்சத்திரமான பிரண்டன் மக்கலம் இல்லாதது பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது.

கொச்சி அணி 20 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 109 ஓட்டங்களை மாத்திரம் பெற்றுக்கொண்டது. அந்த அணி சார்பில் அதிகபட்சமாக பார்த்திவ் பட்டேல் 32 ஓட்டங்களையும் ஜடேஜா 22 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்துவீச்சில் வோர்ன் 16 ஓட்டங்கள் கொடுத்து 3 விக்கெட்டுகளையும் திரிவேடி 19 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

இலகுவாக்க இலக்கை விரட்டிய ராஜஸ்தான் அணிக்கு வொட்ஸன் - ராவிட் ஜோடி சிறப்பான அடித்தளத்தை அமைத்துக் கொடுத்தது. 14.1 ஓவர்களில் இரண்டு விக்கெட்டுகளை மாத்திரம் இழ்ந்து வெற்றி இலக்கை அடைந்தது. வொட்ஸன் 49 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். ஆட்ட நாயகனாக வோர்ன் தெரிவானார்.

(15)

# மலிங்கவுக்குப் பெருகும் ஆதரவு



இலங்கை அணியின் வேகப்பந்துவீச்சாளர் லசித் மலிங்க டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றமைக்கு முன்னாள் அணித்தலைவர்களான மஹேல ஜெயவர்தன, குமார் சங்கக்கார ஆகியோர் ஆதரவு தெரிவித்துள்ளனர்.

மலிங்க சிறிது காலமாக காயத்தினால் பாதிக்கப்பட்டிருந்ததாகவும் டெஸ்ட் போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றதால் 2015 ஆம் ஆண்டின் உலகக் கிண்ணப் போட்டிகளில் பங்குபற்றும் அவரின் கனவு நனவாகக்கூடும் எனவும் மஹேல ஜெயவர்தன தெரிவித் துள்ளார்.

காயம் காரணமாக மலிங்க 16 மாதங்கள் போட்டிகளில் பங்குபற்ற முடியாதிருந்ததை சுட்டிக்காட்டியுள்ள மஹேல, மலிங்கவின் கிரிக்கெட் வாழ்க்கை காலத்தை நீடிப்பதற்காக டெஸ்ட் கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெற்றமை சரியானது எனத் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, நாட்டிற்காக விளையாடுவதைவிட ஐ.பி.எல். போட்டிகளில் விளையாடுவதை மலிங்க தெரிவு செய்தார் என்ற விமர்சனம் தவறானது என்று முன்னாள் அணித்தலைவர் குமார் சங்கக்கார கூறியுள்ளார்.

மலிங்க நாட்டைவிட ஐ.பி.எல். போட்டிகளை தெரிவு செய்திருக்க வாய்ப்பில்லை. அவர் மிக அர்ப்பணிப்புள்ள வீரர். நான் அவர் டெஸ்ட் போட்டிகளில் விளையாட விரும்பாமலிருக்கவும் இல்லை. அவர் 3 வகையான போட்டிளிலும் விளையாடுவதற்கு ஆர்வம் கொண்டிருந்தார் என்று சங்கக்கார தெரிவித்துள்ளார்.

ஆனால் துரதிஷ்டவசமாக அவரின் உடல் டெஸ்ட் போட்டிகளுக்கு தாக்குப் பிடிக்கவில்லை. டெஸ்ட் போட்டிகளில் விளையாடுமாறு அவரை கிரிக்கெட் சபை நிர்ப்பந்தித்திருந்தால் பல வருடங்களுக்கு முன் னரே இந்த வேகப்பந்துவீச்சாளரை நாடு இழந்திருக்கும் எனவும் சங்கக்கார கூறியுள்ளார். (15)

# முழுநேரம் பணியாற்ற விரும்பவில்லை



கிரிக்கெட்டில் முழுநேரப் பயிற்சியாளராக மாறுவது குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை என்று நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் முன்னாள் அணித்தலைவர் ஸ்டீபன் பிளம்மிங் தெரிவித்தார்.


இந்தியக் கிரிக்கெட் அணியின் புதிய பயிற்சியாளரைத் தெரிவு செய்வதற்காக பி.சி.சி.ஐ தயாரித்துள்ள பட்டியலில் ஸ்டீபன் பிளம்மிங் பெயரும் இடம் பெற்றுள்ளது.

இவ்வாறு இவர் தெரிவித்த கருத்து இந்திய அணியின் பயிற்சியாளராக பணியாற்றுவதற்கு தனக்கு விருப்பம் இல்லை என்பதையே வெளிப்படுத்துவதாக உள்ளது.

இதுகுறித்து பிளம்மிங் மேலும் கூறியதாவது:

சென்னை அணியின் பயிற்சியாளர் பணியை மிகவும் மகிழ்ச்சியாக செய்து வருகிறேன். இது மிகச்சிறந்த அனுபவம். முழு நேர பயிற்சியாளராவது குறித்து முடிவு செய்வதற்கு கால அவகாசம் வேண்டும். ஒரு பயிற்சியாளராக ஐ.பி.எல் போட்டி நடக்கும் இரண்டு மாதங்களில் நிறைய பாடங்களைக் கற்றுக் கொண்டுள்ளேன். இவ்வாறு பிளம்மிங் கூறினார். (15)

# பிறந்தநாளில் சோகத்தில் ஆழ்ந்தார் சச்சின்



இந்திய கிரிக்கெட் வீரர் சச்சின் டெண்டுல்கருக்கு நேற்று 38 ஆவது பிறந்தநாள். ஆனல் தனது ஆன்மீக குருவான சத்ய சாய்பாபா நேற்றுக் காலை காலமானதால் சோகத்தில் ஆழ்ந்துவிட்டார் சச்சின்.

நேற்று முன்தினம் இரவு மனைவி மற்றும் இரு பிள்ளைகளுடன் ஹைதராபாத் வந்த டெண்டுல்கார், தான் தங்கியுள்ள ஹொட்டலின் அறையைவிட்டு வெளியே வரவில்லை.

காலை உணவுகூட அவர் சாப்பிடவில்லை. அவரது அறைக்கும் யாரும் அனுமதிக்கப்படவில்லை என்று அவர் தங்கியுள்ள ஹோட்டலின் மேலாளர் தெரிவித்தார். பாபாவின் உடல்நிலை காரணமாக டெண்டுல்கார் அவரது பிறந்தநாளைக் கொண்டாட மாட்டார் என்று நேற்று முன்தினமே தகவல்கள் வெளியாயின.

நேற்று பாபாவின் மறைவு குறித்து தெரியவந்ததும் டெண்டுல்கார் அதிர்ச்சி அடைந்தார்.

பாபாவின் மறைவு குறித்த செய்தி வெளியானதில் இருந்து அவரது அறைக்கு வெளியே தொந்தரவு செய்யாதீர்கள் என்ற வாசகம் அடங்கிய பலகை தொங்கிக் கொண்டிருக்கிறது. சக கிரிக்கெட் வீரர்களைக்கூட அவர் சந்திக்கவில்லை என ஹோட்டலின் மேலாளர் தெரிவித்தார். (15)

# எங்கள் வெற்றி இனித் தொடரும்



4 ஆவது ஐ.பி.எல் 20 ஓவர் கிரிக்கெட் போட்டியின் 26 ஆவது லீக் ஆட்டம் டெல்லி பெரோசா கோட்லா மைதானத்தில் நேற்று முன்தினம் நடந்தது.

இதில் சேவாக் தலைமையிலான டெல்லி டெயா டெவில்ஸ் 29 ஓட்டங்களில் கில்கிறிஸ்ட் தலைமையிலான கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியைத் தோற்கடித்தது.

முதலில் விளையாடிய டெல்லி டெயா டெவில்ஸ் 4 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 231 ஓட்டங்கள் குவித்தது. இந்த ஐ.பி.எல். போட்டியில் இதுதான் அதிகபட்ச 'ஸ்கோர்' ஆகும். அணித்தலைவர் சேவாக் 35 பந்தில் 77 ஓட்டங்களும் (8 பவுண்டரிகள், 4 சிக்சர்கள்), வோர்னர் 48 பந்துகளில் 77 ஓட்டங்களும் (7 பவுண்டரிகள், 4 சிக்சர்கள்) எடுத்தனர். இருவரும் முதலாவது விக்கெட்டுக்கு 11.4 ஓவரில் 146 ஓட்டங்கள் குவித்து முத்திரை பதித்தனர்.

பின்னர் ஆடிய கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியால் 6 விக்கெட்டுக்கள் இழப்புக்கு 202 ஓட்டங்களே எடுக்க முடிந்தது. மார்ஷ் 46 பந்துகளில் 95 ஓட்டங்களும் (9 பவுண்டரிகள், 6 சிக்சர்கள்) எடுத்தார். டெல்லி அணி பெற்ற 2 ஆவது வெற்றியாகும். இதற்கு முன்பு புனே அணியை வென்று இருந்தது. மும்பை, ராஜஸ்தான், டெக்கான் அணிகளிடம் தோற்று இருந்தது. கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி 2 ஆவது தோல்வியை தழுவியது. ஏற்கனவே புனேயிடம் தோற்று இருந்தது. சென்னை, டெக்கான், ராஜஸ்தான் அணிகளை வென்று இருந்தது.

இந்த வெற்றி குறித்து டெல்லி அணித் தலைவர் சேவாக் செய்தியாளர்களிடம் கூறியதாவது:-

ஆடுகளம் முழுக்க முழுக்க துடுப்பாட்ட வீரர்களுக்கு சாதகமானதாக இருந்தது. பந்து வீச்சாளர்கள் திறமையுடன் வீசுவது மிகவும் கடினம். 20 ஓவர் போட்டியை பொறுத்தவரை பந்து வீச்சாளர்களின் நிலைமை திண்டாட்டம்தான். எனது ஆட்டம் சிறப்பாக இருந்தது மகிழ்ச்சி அளிக்கிறது. எங்கள் அணியில் சிறந்த வேகப்பந்து வீரர்கள் இருந்தனர். அவர்களை அடிக்கடி மாற்றி வீச வைத்தேன். உள்ளூரில் சிறப்பாக விளையாடி இருக்கிறோம். வருண் அரோன் சிறப்பாக பந்துவீசி கில்கிறிஸ்ட் விக்கெட்டை கைப்பற்றினார். ஒரு சிறந்த பந்து வீச்சாளரால்தான் யோர்க்கர் வீச இயலும். இந்த வெற்றி மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. இனிவரும் ஆட்டங்களிலும் வெற்றி தொடரும் என்ற நம்பிக்கை உள்ளது. இவ்வாறு சேவாக் கூறினார்.

டெல்லி ஆடுகளம் குறித்து பஞ்சாப் அணித் தலைவர் கில்கிறிஸ்ட் விமர்சனம் செய்து உள்ளார். அவர் கூறியதாவது:-

பவுண்டரி எல்லை மிகவும் குறைக்கப்பட்டது. ரசிகர்களை மகிழ்விப்பதற்காக இப்படி செய்யப்பட்டது. சிக்சர் அடிப்பதற்கான போட்டி போல் இருந்தது. நாங்கள் 200 ஓட்டங்களை தாண்டி விட்டோம். 29 ஓட்டங்கள் தான் குறைவாக எடுத்துவிட்டோம்.

மார்ஷ் இன்னும் சில ஓவர் களத்தில் இருந்து இருந்தால் ஆட்டத்தின் முடிவு வேறு பட்டு இருக்கும். சேவாக்கும், வோர்னரும் தொடக்கத்திலேயே மிகவும் அதிரடியாக விளையாடி ஆட்டத்தை அவர்கள் பக்கம் தக்க வைத்துக்கொண்டனர் - என்றார். (15)





ஐ.பி.எல் போட்டிகளில் பெங்களூர் அணி சார்பில் விளையாடிவரும், மேற்கிந்தியத் தீவுகளின் வீரர் கிறிஸ் கெய்ல், 333 எண் கொண்ட 'ஜேர்சி' அணிந்து பங்கேற்று வருகிறார்.

மேற்கிந்தியத்தீவுகள். அணியின் அதிரடி ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் கிறிஸ் கெய்ல். கடந்த மூன்று தொடர்களில் கொல்கத்தா அணி சார்பில் பங்கேற்ற இவரை, நான்காவது ஐ.பி.எல் தொடரில், எந்த அணி நிர்வாகமும் தேர்வு செய்யவில்லை. தவிர, மோசமான 'போர்ம்', உடற் தகுதியின்மையை காரணம் காட்டி, தற்போது சொந்த மண்ணில் நடக்கும் பாகிஸ்தானுக்கு எதிரான தொடரில் இவர் தேர்வு செய்யப்படவில்லை.

இந்த நிலையில், பெங்களூரின் நனிஸ்ற்குப் பதிலாக கெய்ல் மீண்டும் வாய்ப்பு பெற்றார். முதல் ஆட்டத் தில் கொல்கத்தாவை எதிர்த்து களமிறங்கி சதமடித்து அசத் தினார். இந்த ஆட்டத்தின் போது புதிய முறையில் அதாவது '333' என்ற எண் கொண்ட 'ஜேர்சியை' அணிந்து விளையாடியுள்ளார்.

இதற்கு முன் டெஸ்ட் கிரிக்கெட்டில் 800 விக்கெட்டுக்கள் வீழ்த்திய இலங்கையின் முரளிதரன், அடுத்த நடந்த சாம்பியன்ஸ் லீக் தொடரில் '800' என்ற எண் கொண்ட 'ஜேர்சி' அணிந்து விளையாடினார். அது போல டெஸ்ட் போட்டிகளில் தனது அதிகபட்ச ஓட்டங்களான, 333 ஓட்டங்கள் (எதிரணி-இலங்கை) எடுத்திருந்தார். இதை நினைவுபடுத்தும் வகையில் கெய்ல், '333' என்ற கொண்ட 'ஜேர்சியுடன்' விளையாடி, சதம் அடித்து அசத்தியுள்ளார். (15)

# ஒரு யுக அவதாரம் மறைந்து விட்டது
# கோடிக்கணக்கான பக்தர்கள் சோகத்தில்

இந்தியாவிலே ஆந்திரப் பிரதேசத்தில் அனந்தபுரி மாவட்டத்திலே ஒரு குக்கிராமமாக விளங்கிய புட்டபர்த்தியில் மிகச் சாதாரண வாழ்வு வாழ்ந்து வந்த பெற்றோருக்கு மகனாக 1926ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 23ஆம் திகதி சத்திய நாராயணன் என்னும் பெயரில் சாயிபாபா பிறந்தார்.

அவர் பிறப்பிலேயே அதிசயம்





நிகழ்ந்தது. அவர் பிறந்த போது நாடகக் கலைஞர்களாகிய அவரது பெற்றோரின் வீட்டிலிருந்த இசைக்கருவிகள் தாமாகவே இசை மீட்டின.

ஒரு நாகபாம்பு அவரது படுக்கைக்குக் கீழே மெத்தை போல் தாங்கிக் கொண்டிருந்தது. படுக்கை அசைவதைப் பெற்றோர் பார்த்த போது அது எங்கேயோ ஓடி மறைந்து விட்டது.

ஒரு முறை பல பத்திரிகையாளர்களுக்கு முன்பாகப் பாபா தாயாரை அழைத்துத் தனது பிறப்பு பிரசவமா? பிரவேசமா? என்று கூறும் படி கேட்டபோது தாயார் ஈஸ்வரம்மா பாபாவின் தோற்றத்தை கூறினார்.

அதாவது தான் ஒருநாள் கிணற்றில் தண்ணீர் அள்ளிக் கொண்டிருந்த போது ஒரு நீல ஒளி வட்டம் ஒன்று தன்னை நோக்கி வந்ததாகவும் அது தன் வயிற்றினுள் புகுந்தவுடன் தான் மயங்கி வீழ்ந்து விட்டார் எனவும் கூறினார்.

கிருஸ்ண அவதாரத்திலும் யேசுபிரான் அவதாரத்திலும் இந்த நீல ஒளி வட்டம் உடலினுள் புகுந்ததை வாசித்திருப்பீர்கள். இது நேரடியான ஓர் அனுபவப்பகிர்வு.

சிறுவன் சத்தியா பாடசாலையிலே முதல் மாணாக்கராகவும், மாணவத் தலைவராகவும் விளங்கினார். சிறுவயதிலேயே 'பண்டாரி பஜனைக் கோஷ்டி' என்ற பெயரில் ஒரு பஜனைக் கோஷ்டியை உருவாக்கிக் கிராமத்தின் வீதிகளூடாக பஜனை பாடிக்கொண்டு கிராமத்துச் சிறுவர்களுடன் செல்வான். சிறுவனாக இருக்கும் போதே பாடல்கள் இயற்றிப் பாடக்கூடிய திறமை இவரிடம் இருந்தது. கிராமத்தில் யாராவது அநீதியாக நடந்தால் அவர்களின் அநீதியைக் கண்டித்துப் பாடல்கள் இயற்றி ஏனைய சிறுவர்களுடன் வீதி வீதியாக பாடிவருவான். அநீதி செய்தவர்கள் திருந்திக் கொள்வார்கள்.

### கேட்கும் பழம் கிடைக்கும்

சிறுவர்களுடன் விளையாடும் போது மலைக் குன்றுகளில் ஏறி விளையாடுவது வழக்கம். அங்கு ஒரு புளியமரத்தில் ஏறி நின்று 'யாருக்கு என்ன பழம் வேண்டும்?' என்று கேட்பான். அவர்கள் கேட்கும் பழத்தை அந்தப் புளிய மரத்தில் இருந்து பறித்துக் கொடுப்பான். மாம்பழம், கொய்யாப்பழம், தோடம் பழம், அப்பிள்பழம் இப்படி எத்தனையோ.

அதுமட்டுமல்ல இனிப்பு வகைகள், பாடசாலை உபகரணங்களும் புளிய மரத்தில் கிடைத்தன. இன்றும் அந்தப் புளியமரம் புட்டபர்த்தியில் புனித மரமாக வணங்கப்பட்டு வருகின்றது.

அவருடைய இளமைக்காலம் மிகவும் ஏழ்மை மிகுந்தது. அவருக்குப் பாடசாலை செல்வதற்கு ஒரு சோடி உடுப்புகளே இருந்தன. அது கிழிந்ததால் தைப்பதற்கு ஊசி கூட இல்லாமல் முட்களைக் கொண்டு தைத்து அணிந்தார். நண்பர்கள் உடுப்புக் கொடுக்க முற்பட்டால் அவற்றை வாங்கி உடுத்திக் கொள்ளமாட்டார்.

### ஆன்மீகப் பயணம் ஆரம்பம்

தமது 14 வயதில் ''நான் உங்களுக்குச் சொந்தமானவன் இல்லை'' என்று கூறி புத்தகங்களை வீசிவிட்டு வீட்டை விட்டு வெளியேறினார். அருகிலிருந்த ஒரு குன்றின் மீது அமர்ந்து தனது முதலாவது பஜனைப் பாடலைப் பாடினார். ''மானச பஜநே...'' என்ற அந்தப் பாடல் மிகவும் பிரபல்யமானது. அன்றிலிருந்து அவரது ஆன்மீகப் பயணம் ஆரம்பமாகியது.

கையிலிருந்து விபூதி எடுத்து அதன் மூலம் நோய்களைக் குணமாக்குவதன் மூலம் அவர் பிரபல்யம் அடையத் தொடங்கினார். அயல் ஊர்களிலிருந்தும் மக்கள் வரத் தொடங்கினர். மகனுக்குப் பேய் பிடித்துவிட்டது என்று பேயோட்டும் வைத்தியமும் நடைபெற்றது. தலையில் காயம் ஏற்படுத்தி அதனுள் தேசிப்பழச் சாற்றைப் பிழிந்துவிட்டும் கூட அவர் அசையாமல் இருந்தார். பேயோட்டி அவரின் நோயைக் கண்டுபிடிக்க முடியாமல் சோர்ந்துபோனார்.

அவருடைய தந்தையார் கையில் பிரம்புடன் ''நீ யார்?'' என்று கேட்க, அவர் அருகிலிருந்த மல்லிகைப் பூக்களைக் கைநிறைய எடுத்து வீசினார். அவை ஒழுங்கு படுத்தப்பட்ட முறையில் ''சாயி பாபா'' என்று தெலுங்கு எழுத்தில் வீழ்ந்தன. அன்று முதல் அவர் சாயிபாபா என்று அழைக்கப்பட்டார்.

இலங்கையில் சாயிபாபா வழிபாடு 1960 ஆம் ஆண்டில் ஆரம்பமாகியது. முதலில் கொழும்பிலும் பின்னர் யாழ்ப்பாணத்தில் க.சோமசுந்தரம் அவர்களின் இல்லத்திலும் ஆரம்பமாகியது.

### 172 நாடுகளில் சாயி வழிபாடு

இன்று சுமார் 172 நாடுகளில் சாயி பாபா வழிபாட்டு நிலையங்கள் அமைக்கப்பட்டுப் பிரார்த்தனைகள் நடைபெற்று வருகின்றன. இந்தியாவுக்கு வெளியே சுமார் 1200 சாயி நிலையங்கள் இயங்குகின்றன. இந்தியாவில் சுமார் 6,000 நிலையங்கள் உள்ளன. இது ஓர் ஆன்மீகப் புரட்சி என்றே கூறவேண்டும். உலகில் பல்வேறுபட்ட மதங்கள் இருந்தாலும் அனைவரும் இறைவன் ஒருவரே என்று வணங்கும் முறை மத ஒற்றுமைக்கு வழிகோலியது.

பாபா அமைத்துள்ள தனது சின்னத்திலும் முக்கிய மதங்கள் அனைத்தினது சின்னங்களைப் பொறித்து சர்வமத ஒற்றுமையை நிலைநாட்டியுள்ளார்.

அவர் செய்துவரும் சேவைகள் பிரமிப்பூட்டுபவையாக உள்ளன. இரண்டு பல்கலைக்கழகங்கள், ஆண்களுக்கு வேறாகவும் பெண்களுக்கு அனந்தப்பூரிலும் அமைத்து எவ்விதக் கட்டணமும் இன்றி இலவசமாக நிர்வகித்து வருகின்றார். இரண்டு அதிநவீன வைத்தியசாலைகளை நிறுவி -


ஒன்று புட்டபர்த்தியிலும் மற்றையது பெங்களூரிலும் உள்ளது. இதய மாற்று சிகிச்சை போன்ற அதிக செலவு ஏற்படக்கூடிய சிகிச்சையும் இலவசமாகச் செய்து ஏழை மக்களுக்குத் தொண்டாற்றி வருகிறார். மிகவும் வரட்சியான 720 கிராமங்களுக்குக் குடிதண்ணீர் வசதி செய்து கொடுத்துள்ளார். சென்னை மக்களின் குடி தண்ணீர்த் தட்டுப்பாட்டை நீக்க கிருஷ்ணா நதியிலிருந்து 'சாயி கங்கா' என்ற குடிதண்ணீர் சேவையை சுமார் 200 கோடி ரூபா செலவில் அமைத்துக் கொடுத்துள்ளார்.

இவை தவிர இசைக்கல்லூரி, ஏழைப் பிள்ளைகளைப் பராமரிக்கும் நிலையங்கள், அநாதைப் பெண்களுக்கு வழிகாட்டும் நிலையங்கள் என அவருடைய சேவைகள் ஏராளம். 'சாயிபாபா' என்ற ஒரு தனிமனிதரால் இவ்வளவு சேவைகளும் நடைபெற்றுவருவது அதிசயமே! பணத்தைக் கைகளிலே தொடாமல் இருந்து கொண்டு இவ்வளவு நிறுவனங்களையும் நிர்வகிப்பது அவருடைய நிர்வாகத்திறமையாக இருந்தது.

## சத்திய சாயி பாபாவின் அவதாரச் செய்தி

''என்றும் நான் உங்களுடன் இருக்கிறேன். இப்பொழுது மிகவும் மிகவும்
நெருக்கமாகி விட்டேன். கலியுக அவதாரத் தொடரில் முதலாவது சீரடி சாயி
பாபா, இரண்டாவது சத்திய சாயி பாபா, மூன்றாவது பிரேம சாயி பாபா''
பல வருடங்களின் முன் பாபா அருள் வாக்கில் கூறியுள்ளார்: ''எண்பத்தாறு
வயதின் பின் என்னை ஒரு பொட்டாகத் தான் காண்பீர்கள். முனிவர்கள், தேவர்
கள் வந்து செல்வார்கள்.''
''தெய்வீகச் சாதனைகள் மனதை மகிழ்விக்கும். சாந்தி பிறக்கும். ஒவ்
வொருவர் உள்ளே உள்ளுறையும் தெய்வீகத்தை உணர்வீர்கள். சாதனைகளைக்
கூட்டுங்கள். எல்லோரிடமும் அன்பாயிருங்கள். எல்லோருக்கும் உதவி செய்
யுங்கள். விரும்பிய கடவுளை வணங்குங்கள். கடவுள் ஒருவரே. போதனை
களைக் கடைப்பிடித்து சாதனைகள் செய்யுங்கள்.''

எல்லாவற்றுக்கும் மேலாக உலகத்துக்கு நீண்டகாலத்துக்குப் பயன் தரப் போவது அவர் அறிமுகப்படுத்தியுள்ள ''சத்தியசாயி கல்வி முறை''யே. இந்தக் கல்வி முறை இன்று உலகில் 33 நாடுகளில் பின்பற்றப்பட்டுவருகிறது. இலங்கையிலும் ஒரேஒரு ''சத்தியசாயி



பாடசாலை'' மானிப்பாயில் அமைந்துள்ளது.

இன்றைய கல்வி, சான்றிதழ்பெற்று ஓர் உத்தியோகம் பெறுவதற்கு உதவுகிறதே தவிர, வாழ்க்கையின் நடைமுறைக்கு உதவவில்லை. இதன்மூலம் கல்வி என்பது பணம் சம்பாதிக்க உதவும் ஒரு சாதனமாகக் கருதப்படுகிறதே தவிர, வாழ்க்கையை நல்ல முறையில் வாழ உதவவில்லை என்பதே அவரது போதனையாகும். இது தான் இன்றைய உலகில் போட்டி, பொறாமை ஏற்பட்டு உலக சீரழிவுக்குக் காரணமாக உள்ளது.

கல்வியின் மேம்பாடுகளை மாணவர்களுக்குப் போதிப்பதன் மூலம் இனி வரும் சமுதாயத்தைப் போட்டி, பொறாமையற்ற சமுதாயமாக, உலகமயமாக மாற்றலாம் என்பது பாபாவின் போதனை: இதுவே மனித மேம்பாட்டுக் கல்வியாகும். 'கல்வியின் நோக்கம் ஒழுக்கம்' என்பதே அவரது தாரக மந்திரம்.

**எஸ்.ஆர்.சரவணபவன்,**
**தாவடி**

இதுவே இன்றைய உலகம் முழுவதும் பிரபல்யமாகிக் கல்வியுலகில் ஒரு புரட்சியை ஏற்படுத்தி வருகிறது.

ஒரு யுக அவதாரம் மறைந்துவிட்டது. அவரது காலத்தில் வாழ நாம் கொடுத்து வைத்தவர்கள். அவருடன் சேவையாற்றியவர்கள் பாக்கியசாலிகள்.

அவரின் உடல் சமாதியில் செவ்வாய் அன்று வைக்கவுள்ளனர். அன்று வரை எல்லா சாயி நிலையங்களிலும் பிரார்த்தனைகள் நடைபெறும். பிரார்த்தித்து எம்மை நாமே உயர்த்திக் கொள்வோம்.

'வாழ்க சாயி நாமம்'

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# இந்தியாவின் ராஜதந்திர சூட்சுமம்

இலங்கையில் - வன்னியில் - நடைபெற்ற இறுதிப் போரின் போது இழைக்கப்பட்ட மனித உரிமை மீறல்கள், போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக் கூறுவது குறித்த விவகாரம் இப்போது சர்வதேச மட்டத்தில் பிரதான பேசு பொருள்களில் ஒன்றாக உருவெடுத்துள்ளது. ஐ.நாவின் பொதுச் செயலாளர் பான் கீ - மூன் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கை அனேகமாக இன்று உத்தியோக பூர்வமாக வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்படும் சூழலில் இவ்விவகாரம் சூடு பிடித்துள்ளது.

மரியாதையின் நிமித்தம் இலங்கை அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கையின் பிரதி, கொழும்பில் கசிந்ததால், சர்வதேச மட்டத்தில் அந்த அறிக்கையின் சர்ச்சைக்குரிய விடயங்கள், அம்சங்கள் குறித்த வாதப் பிரதிவாதங்கள் பெருகி வருகின்றன.

இலங்கை அரசாங்கம் தனக்குள்ள சகல வளங்களையும், சக்தியையும் பயன்படுத்தி அறிக்கையிலுள்ள விடயங்களுக்குப் பொறுப்புக் கூறவோ அல்லது நடவடிக்கை எடுக்கவோ எதிர்ப்புக் காட்டி வருகிறது. மொத்தத்தில் அந்த அறிக்கை ஐக்கிய நாடுகள் சபையில் விவாதத்துக்கு எடுக்கப்படுவதைத் தடுப்பதற்கான உள்ளரங்கமான அலுவல்களில் அதிவேகமாகச் செயற்படுகிறது. உலக நாடுகளில் பலவற்றைத் தனது பக்கத்துக்குச் சேர்த்துக் கொள்ளத் துடியாகத் துடிக்கிறது.

அது ஒரு புறமிருக்க, இலங்கை அரசு போரில் வெல்வதற்கு இணைந்திருந்து உதவிய இந்தியாவில், குறிப்பாகத் தமிழகத்தில் ஐ.நா. நிபுணர்கள் குழுவின் அறிக்கை அதிர்வலைகளைத் தோற்றுவித்துள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பைத் தோற்கடித்து வன்னியை மீட்க வேண்டும் என்ற குறிக்கோளுக்கும் அப்பால், அதனைப் பூண்டோடு அழித்துவிட வேண்டும் என்ற இலங்கை ஜனாதிபதியின் இலக்குக்கு, குறிக்கோளுக்கு பிரதானமாக இந்தியாவே உர மூட்டி உதவியது என்பதும், பழிக்குப் பழி வாங்கும் வினாச புத்தியுடன் தீவிரமாக ஆனால் மறைபொருளாக பின்னால் இருந்து செயற்பட்டது சோனியா காந்தி அரசு என்பதும் இப்போது தெரிந்த, உல கறிந்த விடயமாகி விட்டன.

இதனைத் தெரியாதவர் போன்று, தமிழகத்தில் தமது அரசியல் இருப்புக்காகவும், தமது குடும்ப வாரிசுகளின் அரசியல் இருப்புக்காகவும் இரட்டை வேடம் போட்டவர், நன்றாக நாடகம் ஆடியவர் ''அறளை பேர்ந்த'' கலைஞர் கருணாநிதி. ஈழத் தமிழர்கள் தனது இரத்தத்தின் இரத்தம் என்று ஆவேச வசனம் பேசிய அவர், ஆயிரம் ஆயிரம் வன்னிப் பொதுமக்களின் அழிவுக்குத் துணை போனவர் என்பது எப்போதே வெளிச்சத்துக்கு வந்த சங்கதி.

சந்தர்ப்பத்துக்கு ஏற்றவாறு, அறிக்கைகள் விடுவதிலும், தெரிந்தும் தெரியாதவர் போன்று வேடம் போட்டவருமான கருணாநிதி இப்போது, பெயருக்காக, பதிவுக்காக -

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையில் இலங்கை அரசு மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து இந்திய மத்திய அரசு தாமதம் இன்றி பொருத்தமான நடவடிக்கையை மேற்கொள்ளும் என நம்புகிறேன் - என்றும்

அறிக்கை உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டவுடன் பொருத்தமான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு மத்திய அரசைக் கோருகிறேன்- என்றும் கருத்து வெளியிட்டேன் என்ற பெயரெடுப்பதற்காகக் கூறியுள்ளார்.

நடைபெற்று முடிந்த தமிழகத் தேர்தல் வாக்களிப்பு முடிவுகள் அடுத்த மாத மத்தியில் - இன்னும் மூன்று வாரங்களில் - வெளிவரவிருக்கும் நிலையில், முடிவுகள் குறித்து அவருக்குப் பாதகமான எதிர்வுகூறல்கள் வெளிவந்து கொண்டிருக்கும் சூழலில், அவர் வெளியிட்ட கருத்து சூம்பியதாகவே உள்ளது.

ஈழத்தமிழர் பிரச்சினையைத் தீர்க்க இதய சுத்தியுடன் தாம் பதவியிலிருந்த போது மத்திய அரசை வலியுறுத்த மறந்துபோயிருந்த முன்னாள் முதல்வர் செல்வி ஜெயலலிதாவும் இப்போது கருணாநிதியை நோக்கி உள்வீட்டுச் சண்டையைத் தொடங்கியுள்ளார்.

ஈழத்தமிழர்களுக்கு எதிரான இனப்படுகொலைக்கு ஆதரவாகவும் உடந்தையாகவும் இருந்து வேடிக்கை பார்த்த கருணாநிதி பொதுமன்னிப்புக் கோர வேண்டும் என்று தமிழக மக்கள் சார்பில் கேட்டுள்ளார்.

இதுவும் வேடிக்கையான தமிழக அரசியல் போட்டியே. தாம் தமிழகத்தின் முதல் அமைச்சராக இருந்தவேளை ஈழத் தமிழர்களின் உரிமைக் குரலுக்கு துணிந்து ஆதரவு வழங்கத் தவறியவர் ஜெயலலிதா. அந்த வேளையில் எத்தனையோ வகையான ''குல்மால்களை'' நடத்தியவர் இதே ஜெயலலிதா தான்!

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை குறித்து, இந்திய மத்திய அரசு எத்தகைய நிலைப்பாட்டை எடுப்பதற்கும், வெறுவாய் சப்பும் தமிழகத் தலைவர்களின் கருத்துக்கள் கணக்கில் எடுக்கப்பட மாட்டா என்பது நிச்சயத்திலும், நிச்சயம்!

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையை ஆராய்வதற்கு பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன் தலைமையில் குழு ஒன்று நியமிக்கப்பட்ட போதிலும் கூட -

நிபுணர் குழுவின் அறிக்கைக்கு ஆதரவாகவோ அன்றி இலங்கை அரசின் நிலைப்பாட்டுக்கு கைகொடுத்து உதவும் பாங்கிலோ இந்திய மத்திய அரசு செயற்படமாட்டாது என்று ராஜீக வட்டாரங்களில் அமர்க்களமாகப் பேசப்படுகிறது! சீனாவின் ஆதரவை இலங்கை கோரவுள்ள பின்புலத்தில், செய்வதைச் சொல்லேன், சொன்னதைச் செய்யேன் என்ற தனது வழமையான அரசியல், இராஜதந்திர வாய்ப்பாட்டை ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை விவகாரத்தில் இந்திய மத்திய அரசு மாற்றிக் கொள்ளும் என எதிர்பார்க்கலாம்!

# சர்வதேச மேடைகளில் இலங்கையை இந்தியா ஆதரிக்கும் நிலைமை இல்லை

**நேற்று 24-04-2011 அன்று 'சண்டேரைம்ஸ்' பத்திரிகை எழுதியிருந்த அரசியல் விமர்சனத்திலிருந்து ஒரு பகுதி இது.**

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பான் கீ -மூனின் கொடும்பாவி பொம்மைகளைச் செய்வதில் நாட்டின் பல பாகங்களிலும் உள்ள தொழிற்சாலைகளில் 'ஜரூராக' வேலைகள் நடைபெற்று வருகின்றன. சிங்களத்தில் ''பக்கமூனா'' என்று அழைக்கப்படும் பூச்சாண்டி முகங்களை அமைத்து பான் கீ - மூனின் பெயருக்குப் பொருத்தமாக வெளிப்படுத்தி மகிழ சிலர் முயல்கிறார்கள். அவரையும் ஐ.நா. சபையையும் கிண்டல் செய்யும் பிரசுரங்கள் அச்சகங்களில் இருந்து வெளிவரத் தொடங்கியுள்ளன. ஐ.நா. சபையைக் குறிக்கும் அலங்கார ஊர்திகளும் தயாரிக்கப்பட்டு வருகின்றன. மாகாண சபைகளும் கிராமிய மன்றங்களும் ஐ.நா. அறிக்கையைக் கண்டித்து தீர்மானங்கள் நிறைவேற்றும்படியும் கேட்கப்பட்டுள்ளன. பெரும் ஆட்சேப மனுவொன்றில் பொது மக்களின் கையெழுத்துக்களைப் பெற்றுக் கொள்வதில் அரசு சார்ந்த சில அமைப்புகள் மும்முரமாக ஈடுபட்டுள்ளன.

### கார்ட்போர்ட் வீரர்கள்

புலிகளை 2009 ஆம் ஆண்டு இலங்கை தோற்கடித்ததற்குப் பிறகு இந்தமுறை மே தினத்தில் இடம்பெறப் போகும் ஆர்ப்பாட்டம் தான் இரண்டாம் கட்ட உணர்ச்சி மயமான ஆர்ப்பாட்டமாக இருக்கப்போகிறது.

அமைச்சர்கள் அனைவருக்கும் அறிவுறுத்தல் போயிருக்கிறது. மே தினத்தன்று அவர்கள் அனைவரும் நாட்டில் இருக்கவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளனர்.

## மேதின பேரணி மூலம் உலகுக்கு மஹிந்தவின் பலம் உணர்த்தப்படும்

2009 ஆம் ஆண்டு மே 19 ஆம் திகதி புலிகளை வெற்றி கொண்ட சம்பவம் இன்னமும் ஈடு இணையற்றதாகக் கணிக்கப்பட்டுவருகின்றது. அப்போது மூன்று வீரர்கள் இனங்காணப் பட்டிருந்தனர். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசியல் தலைமைத்துவம் வழங்கினார். பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அரசியல் மற்றும் இராணுவத் தலைமைத்துவங்களை ஒருங்கிணைக்கும் வீரராக விளங்கினார். முன்னாள் இரா ணுவத் தளபதி சரத் பொன்சேகா படைகளை வழி நடத்தி வெற்றிக்கு அழைத்துச் சென்றார். இவர் இப்போது 30 மாத கால சிறைத் தண்டனை அனுபவித்து வருகிறார்.

ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையை அடுத்து இடம் பெற்றுவரும் சம்பவங்களைப் பார்த்தால் அவர் விடுதலையாகக் கூடிய வாய்ப்பும் இருப்பதுபோன்று தெரிகிறது. இதில் விஷயம் இல்லாமலுமில்லை. இருந்தாலும் கடந்த புதன் கிழமை வெள்ளைக்கொடிவழக்குத் தொடர்பாக அவர் நீதிமன்றத்துக்கு அழைத்துவரப்பட்ட போது தமது வழமையான மன உணர்வுகளை வெளிப்படுத்தத் தயங்கவில்லை. பத்திரிகையாளர்களிடம் பேசிய அவர் ''உண்மையான வீரர்'' தாம் தான் என்று கூறிக் கொண்டார். மற்றவர்கள் எல்லோரும் ''கார்ட் போர்ட்'' வீரர்கள் என்றார். வழக்கில் அவர் சார்பில் தோற்றியிருந்த சட்டத்தரணி நளின் லடுவஹெட்டி ஒருமனுவைச் சமர்ப்பித்து உள்நாட்டிலும் சர்வதேசத்திலும் காட்சிகள் மாற்றமுறும் நிலைமை தெரிவதால் ஒத்திவைக்கக் கோரிக்கை விடுத்தார். அதனால் மே 4 ஆம் திகதிக்கு வழக்கு பிற்போடப் பட்டது.

### கவனம் எல்லாம் ஜனாதிபதி பக்கம்

இந்த முறை கவனமெல்லாம் ஜனாதிபதி ராஜபக்ஷவின் பக்கம் திருப்பப்பட்டுள்ளது. தனது அரசுக்கு உலகப் புகழ் சம்பாதித்துக் கொடுத்துள்ள இராணுவத்தைக் காட்டிக்கொடுப்பதைவிட மின்சாரக் கதிரையில் அமர்ந்து உயிரை விடவும் தயார் என்று அவர் அறிவித்திருக்கிறார்.

### அறிக்கையின் விவரங்கள்

செயலாளர் நாயகத்தின் நிபுணர் குழுவின் இலங்கை தொடர்பிலான பொறுப்புக் கூறும் விடயம் பற்றிய அறிக்கை என்ற தலைப்பிலான அறிக்கை நிர்வாகவுரையாக 9 பக்கங்களைக் கொண்டுள்ளது.

அதன்பின் குழுவின் இரகசியத்தன்மையின் பதிவுகள் என்பது உட்படப் பல்வேறு விடயங்கைளயும் கொண்ட தலைப்புக்களில் விடயங்கள் ஆராயப் பட்டுள்ளன.

போரின் இறுதிக்கட்டப் பகுதி வன்செயல்களின் தன்மைகள், வீச்சுக்கள், குற்றங்களைப் பகுப்பாய்ந்த முறைகள், இலங்கை அரசுடனான கலந்துரையாடல்கள், ஆயுத மோதல்கள் நடத்தப்பட்டமுறை குறித்த குற்றச்சாட்டுக்களின் நம்பகத்தன்மை, பொதுமக்கள் தரப்பிலான மரணங்களும் சம்பவங்கள் தொடர்பானஅரசதரப்பு கருத்துக்களும் என்ற வகையில் தலைப்புக்களில் விடயங்கள் தரப்பட்டுள்ளன. வரைபடங்கள், கடிதங்கள், ஆவணங்கள் மற்றும் விண்வெளியிலிருந்து எடுக்கப்பட்ட படங்களின் பிரதிகள் யாவும் இணைக்கப்பட்டுள்ளன.

ஏப்ரல் 13 ஆம் திகதி ஐ.நா. செயலகத்தில் செயலாளர் நாயகத்தின் அலுவலர் குழுவின் தலைவர் விஜே நம்பியாரிடமிருந்து இலங்கைத் தூதரகத்தின் பிரதித்தூதுவர் மேஜர் ஜெனரல் ஷவேந்திர சில்வா அறிக்கையைப் பெற்றுக் கொண்டார். அதன் பின் கூரியர் சேவை மூலம் இலங்கை வெளியுறவு அமைச்சுக்கு அது அனுப்பிவைக்கப்பட்டது.

இலங்கை வெளியுறவு அமைச்சின் கோரிக்கை ஏற்றுக் கொள்ளப்படாத நிலையில் இன்றைய தினம் நிபுணர் குழுவின் அறிக்கை வெளியி டப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கை அரசாங்கம் அறிக்கையைப் பெற்றுக்கொண்டதற்கான பதிலை ஓர் அறிக்கை மூலம் தெரிவிக்கும் என்று எதிர் பார்த்து ஐ.நா. செயலகம் தாமதித்திருந்தது. ஆனால் இலங்கை அரசு அவ்வறிக்கையை முற்று முழுதாக நிராகரித்துவிட்டது.

### வீதிக்குவரும் ராஜதந்திரம்

சர்வதேச தொழிலாளர் தினமான மே தினம் இந்த முறை இலங்கையின் ஐ.நா. நிபுணர் குழு அறிக்கையை எதிர்ப்பதற்கான போராட்ட தினமாக இலங்கையில் அனுட்டிக்கப்பட இருக்கின்றது. பெருந்திரளான மக்களை வர வழைத்து கொழும்பு நகர மண்டபத்திலும் அதன் சுற்றாடலிலும் இந்தப் பேரணி நடத்தப்படுவது இலங்கையின் ராஜதந்திரம் வீதிகளுக்குக் கொண்டு வரப்பட்டுவிட்டதை எடுத்துக் காட்டுவதுபோல் அமையப் போகின்றது.

இலங்கை மக்கள் அபரிமிதமாக ஜனாதிபதி ராஜபக்ஷவை ஆதரித்து நிற்கிறார்கள் என்பதான ஒரு செய்தியை ஐ.நா.வுக்கும் உலக சமூகத்துக்கும் வழங்குவதற்கு அரசாங்கம் விரும்புவதாகத் தெரிகின்றது. வெளிநாட்டிலிருந்துதிரும்பியிருக்கும் எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்காவை சந்திப்பதற்கான ஓர் அழைப்பை ஜனாதிபதி ராஜபக்ஷ ஏற்கனவே அனுப்பியிருப்பதாகவும் தெரிகிறது.

ரணில் தனியாகச் சென்று ஜனாதிபதியை சந்திப்பாரா தமது கட்சி உறுப்பினர்கள் குழுவொன்றுடன் செல்வாரா என்பது ஒன்றும் இன்னமும் தெரிய வரவில்லை.

பிரதான எதிர்க்கட்சியுடன் கருத்தொற்றுமையொன்றை உருவாக்கி ஐ.நா. அறிக்கைக்கு கண்டனம் ஒன்றை வெளியிட ஜனாதிபதி விரும்புவதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன் னணி வட்டாரங்களிலிருந்து தெரிய வருகின்றது. ஆனால் ஐ.தே.க.வின் நிலைப்பாடு என்னவென்றால்-

ராஜபக்ஷ, பான் கீ - மூனை கண்டியில் யுத்தம் முடிவுற்றதும் சந்தித்துப்பேசிய போது பொறுப்புக் கூறல் மற்றும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான அவர்களின் கருத்தை எதிர்க்காமலும் பின்னர் வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் அதனைக் குறிப்பிடாமலும்

**தொகுப்பு: கோகுலன்**

விட்டதின் மூலம் ஐ.நா.வை அரசாங்கம் இதில் தலையிடுவதற்கு கதவைத்திறந்து விட்டிருந்தது. அதுமட்டுமன்றி முதலில் நிபுணர்குழுவை சட்ட விரோதமானது என்று வர்ணித்துவிட்டு பின்னர் தனது நிலைபற்றி இரகசியமாக விவாதிப்பதற்கு பிரதிநிதிகள் குழுவை அனுப்பியிருந்தது.

ஐ.தே.கவின் நிலைப்பாடு இதுவாகவே இருந்துவந்துள்ளது.

ஐ.நா. நிபுணர் குழு சட்ட விரோதமானது என்பது இனி மேலும் விவாதிப்பதற்குரிய விடயமாகாது. நிபுணர் குழுவை சந்திப்பதற்கு ஒரு குழுவை அனுப்பியதன் மூலமே இந்த விடயத்தில் அரசு சரணடைந்து விட்டது. என்றாலும் ஐ.தே.க.

(29 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழருக்கான தீர்வை தீர்மானிப்பது நாங்களே; இந்தியாவிடம் ஆலோசனை பெறலாம்

## கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் தெரிவிப்பு

புதினப் பலகைக்கு இரா. சம்பந்தன் அளித்த விசேட பேட்டியின் ஒரு பகுதி நேற்றைய உதயனில் வெளியாகியிருந்தது. மிகுதி இங்கு பிரசுரமாகிறது.



(நேற்றைய தொடர்ச்சி)

சிங்கள மக்கள் மத்தியில் பெரும் செல்வாக்கும் மதிப்பும் மிக்க தலைவர்களுடனும் பேச்சு நடத்தியிருக்கிறார் - இதன் விளைவாக 1957ம் மற்றும் 1965ஆம் ஆண்டுகளில் இரு முக்கியமான உடன்பாடுகள் ஏற்பட்டிருந்தன. இந்த உடன்பாடுகள் நிறைவேற்றப்பட்டிருந்தால் நாம் எமது பிரச்சினைக்கான தீர்வைக் கண்டிருப்போம். ஆனால் இலங்கை அரசு எதனையும் நிறைவேற்றவில்லை. இதன் விளைவாக எமது முயற்சிகளில் எம்மால் வெற்றி பெற முடியாமல் போனது. இறுதியில் எல்லா முயற்சிகளும் தோல்வியடைந்த நிலையில் வட்டுக்கோட்டைத் தீர்மானம் நிறைவேற்றப்பட் டது. பின்னர் வன்முறை வெடித்தது.

**வாய்ப்புக்களைத் தவற விட்டுள்ளோம்**

ஆனால் நாங்களும் சில வாய்ப்புக்களைப் பயன்படுத்திக் கொள்வதில் தவறி இருக்கிறோம், என்பதையும் நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும். ஜே.ஆர்.ஜயவர்த்தன 1977 ஆம் ஆண்டு தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் எமது பிரச்சினையை நிறைவேற்றுவது தொடர்பில் சில விடயங்களை குறிப்பிட்டிருந்தார். ஆனால் அவர் கூறியது போன்று ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதனையும் எடுத்திருக்கவில்லை. இந்த சந்தர்ப்பத்தை அடிப்படையாகக் கொண்டு, நாங்கள் அவரது ஆட்சிக்கு மாறாக ஒரு பெரும் சாத்வீகப் போராட்டத்தை ஆரம்பித்திருக்க வேண்டும். ஆனால் நாங்கள் அவ்வாறு செய்யவில்லை. இதில் நானும் ஒரு குற்றவாளிதான். நானும் அப்போது நாடாளுமன்றத்தில் இருந்தேன். நாங்கள் அத்தகையதொரு போராட்டத்தை ஆரம்பித்திருந்தால் வன்முறையைத் தடுத்திருக்கலாம். வன்முறை வெடித்திருக்காது.

வன்முறை வெடித்த பின்னரும் கூட எங்களுக்கு சில சந்தர்ப்பங்கள் கிடைக்காமலில்லை. நாம் இந்தப் பிரச்சினையை ஆக்கபூர்வமாகத் தீர்த்துக் கொண்டிருக்கலாம். ஆனால் துரதிஷ்டவசமாக அவ்விதம் எதுவும் நடைபெற்றிருக்கவில்லை. நாங்கள் இது குறித்து பல நடவடிக்கைளை எடுத்திருந்தோம். ஆனால் எதுவும் கை கூடவில்லை. சந்திரிகா குமார துங்கவின் காலத்தில் ஒரு பேச்சு மூலமாக பிரச்சினையை தீர்த்துக் கொள்வதற்கு எமது போராளிகள் ஒத்து வந்திருந்தால் ஒரு நியாயமான தீர்வைக் கண்டிருக்கலாம். 2002 ஆம் ஆண்டு ஒஸ்லோ பிரகடனத்தின் மூலம் பிரச்சினையை தீர்ப்பதற்காக நாங்கள் ஆக்கபூர்வமாகச் செயற்பட்டிருந்தால், ஒரு முடிவை கண்டிருக்கலாம் ஆனால் அதுவும் கைகூடவில்லை.

இதனால் எமது கடந்த கால செயற்பாடுகளால் எதுவுமே நிகழவில்லை என்றும் கருதக் கூடாது. நீங்கள் குறிப்பிடுவது போன்று ஓர் அரசியல் சாசன ரீதியாக எங்களால் எதனையும் பெற முடியவில்லை என்பது உண்மையே, ஆனால் இன்று தமிழ் மக்களின் பிரச்சினை சர்வதேசமெங்கும் அறியப்பட்ட ஒரு விடயமாக மாறியிருக்கிறது. இலங்கையில் தமிழ் மக்களுக்கு ஒரு பிரச்சினை இருக்கிறது என்பதை முழு உலகும் ஏற்றுக்கொண்டிருக்கிறது. எனவே இனி எவராலும் தமிழ் மக்களின் பிரச்சினையை புதைத்து விட முடியாது. இவ்வாறானதொரு நிலைமை, எமது கடந்த கால முயற்சிகளின் விளைவாக ஏற்பட்ட ஒரு சாதகமான விடயம் என்பதையும் நாம் கருத்தில் கொள்ளவேண்டும்.

கேள்வி: நீங்கள் இந்தியா பற்றிக் குறிப்பிட்டீர்கள். ஈழத் தமிழர் விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாடு தெளிவற்ற ஒன்றாகவே இருக்கிறது. பிரிவினை வாதத்தை ஏற்றுக் கொள்ளாத இந்தியா தமிழ் ஈழப்

## தமிழரின் தனித்துவத்தை இலங்கைக்கு உணரவைத்தது இந்தியாதான்

பிரகடனத்தை முன்வைத்த வரதராஜப்பெருமாளுக்கும் அடைக்கலம் கொடுத்தது. இன்றும் சோனியா காந்தி ஈழத் தமிழர் பிரச்சினையில் தமக்கு அக்கறை இருப்பதாகக் கூறுகின்றார். மறுபக்கத்தில் எமது சூழலில் இந்தியா பற்றி அதிகம் எதிர்நிலையான கருத்துக்களே இருக்கின்றன. இதன் உண்மை நிலை என்ன? புலிகள் முற்றிலும் அழிந்துபோன சூழலில் ஈழத் தமிழர் விவாகாரம் தொடர்பில் இந்தியாவின் நிலைப்பாடு எவ்வாறு அமைந்துள்ளது?

**எமது பிரச்சினையில் இந்திரா காந்தி**

சம்பந்தன்: இந்தியா குறித்து பலரும் பலவிதமான கருத்துக்களைக் கூற முடியும். அது அவர்களின் பார்வை. ஆனால் எமது பிரச்சினைகளுக்காகக் குரல் கொடுத்த முதல் நாடும், ஒரேயொரு நாடும் இந்தியா மட்டுமே என்பதை நாம் மறந்து விடக் கூடாது. எமது பிரச்சினையைத் தீர்த்துவைக்க வேண்டுமென்பதற்காக தங்களது உதவியை தருவதற்குத் தாம் தயார் என்பதைப் பகிரங்கமாகக் கூறிய நாடும் இந்தியாதான். அப்போதைய இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி, தமது நிலைப்பாட்டை இலங்கை அரசை ஏற்கும்படியான சூழலையும் ஏற்படுத்தியிருந்தார் என்பதையும் நாம் மறந்துவிடக் கூடாது.

1987 ஆடி 29இல் நிறைவேற்றப்பட்ட இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் சில அடிப்படையான விடயங்கள் குறித்து, இலங்கை அரசாங்கம் உண்மை நிலையை ஏற்றுக்கொண்டது. இந்த நாட்டில் சிங்களவர்கள், தமிழர்கள் முஸ்லிம்கள் எனப் பல இனங்களைக் கொண்ட மக்கள் வாழ்ந்து வருகின்றனர். எனவே அவர்களுக்கென்றதொரு தனித்துவம் இருக்கின்றது. ஒரு தனிப்பட்ட கலாசாரம் இருக்கின்றது. எனவே அதனைப் பேணிப் பாதுக்காக்க வேண்டிய பொறுப்பும் அவர்களுக்கு உண்டு என்ற உண்மையை அரசு ஏற்றுக்கொண்டது. இதற்கு முன்னர் இலங்கை அரசு, இத்தகையதொரு நிலைப்பாட்டை ஒருபோதுமே ஏற்றுக்கொண்டிருக்கவில்லை.

விசேடமாக 1972, 1978ல் நிறைவேற்றப்பட்ட அரசியல் சாசனங்களின் ஊடாக, இந்த நிலைப்பாட்டை அவர்கள் உதாசீனம் செய்திருந்தார்கள். வடக்கு, கிழக்கில் சரித்திர ரீதியாக தமிழ் பேசும் மக்கள் வாழ்ந்து வந்திருக்கின்றார்கள், எனவே அந்தப் பிரதேசங்கள் ஓர் அலகாக கொள்ளப்பட்டு அவர்களுக்கென் றொரு ஆட்சியதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்ற கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. முக்கியமாக தமிழ் மக்கள் ஆட்சியதிகாரத்துக்கு உரித்துடையவர்கள் என்னும் கருத்து ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. இதனடிப்படையில் அதிகாரப் பகிர்வு ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. ஒரு சர்வசன வாக்கெடுப்பின் மூலம் அதனை உறுதி செய்து கொள்வதற்கான அதிகாரமும் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தது, ஆனால் அதனை பிற்போடுவதற்கான அதிகாரம் ஜனாதிபதிக்கு கொடுக்கப்பட்டும் இருந்தது. மக்கள் அனைவரும் தமது சொந்த இடங்களுக்கு திரும்பி வரும்வரை சர்வசன வாக்கெடுப்பு நடைபெற முடியாது என்ற நிலைப்பாடும் இருந்தது. இப்படி பல விடயங்கள் அதில் உள்ளடக்கப்பட்டிருந்தன.

**பங்காளியாக இருந்த இந்தியா பார்வையாளரானது**

ஆனால் இது முழுமையாக அமுல்படுத்தப்பட்டிருந்தால் நாங்கள் இவ்வாறானதொரு நிலையில் இருந்திருக்க மாட்டோம். இதனைக் காட்டிலும் ஓர் உறுதியான நிலையில் இருந்திருப்போம். இந்திய அமைதிப் படைகள் இங்கு வந்தபோது குறிப்பாக திருகோணமலையில் எமது மக்களுக்கு பாதுகாப்புக் கொடுத்திருந்தனர் என்பதையும் நாங்கள் மறந்துவிடக் கூடாது. ஆனால் துரதிஷ்டவசமாக எமது போராளிகளுக்கும் இந்திய அமைதிப் படைகளுக்கும் இடையில் மோதல் ஏற்பட்டது. அது ஏற்பட்டிருக்கக் கூடாது.

இதனால் எமது போராளிகளுக்கும் இழப்பு. இந்திய அமைதிப் படைக்கும் இழப்பு. இறுதியில் எமது போராளிகள் பிரேமதாச அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட்டதன் விளைவாக, இந்திய அமைதிப்படை வெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இதன் தொடர்ச்சியாக அதுவரை பங்காளியாக இருந்த இந்தியா பார்வையாளர் நிலைக்குத் தள்ளப்பட்டது. பின்னர் ராஜீவ் காந்தியின் கொலை இடம்பெற்றது. இப்படிப் பல கசப்பான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. இன்று பலரது கருத்து இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகள் தமிழ் ஈழ விடுதலைப்புலிகளை அழிப்பதற்காக இலங்கை அரசுக்கு ஒத்துழைப்பு வழங்கினார்கள் என்பது. இப்படியான விடயங்கள் பலரும் அறிந்த ஒன்றும் கூட.

**இந்தியாவுடன் சேர்ந்து செயற்பட வேண்டும்**

ஆனால் நாங்கள் ஒன்றை விளங்கிக் கொள்ள வேண்டும். இந்தியாவிற்கும் தனது சொந்த நலனில் அக்கறை உண்டு. எந்தவொரு நாட்டுக்கும் அதன் தலைவர்களுக்கும் தங்கள் சொந்த நாட்டினது நலன்களில் அக்கறை இல்லாமல் இருக்க முடியாது. தங்களது சொந்த நாட்டின் நலன்களை உதாசீனம் செய்து எங்களுக்காக அவர்களெல்லாம் உதவ முன்வருவார்கள் என்று நாங்களும் கருதக் கூடாது. நாங்கள் இயன்றளவுக்கு அவர்களது தேவைகளை விளங்கிக் கொண்டு அவற்றை பூர்த்திசெய்யும் வகையில் அவர்கள் செயற் படும் போது, அதனோடு சேர்ந்து எங்களது தேவைகளையும் பூர்த்தி செய்து கொள்ளும் வகையில் நாங்கள் செயலாற்ற வேண்டும்.

**தீர்வைக் காணும் பொறுப்பு இந்தியாவிடம்**

நான் விடுதலைப்புலிகளின் காலத்தில் இந்தியா நடந்து கொண்ட விதம் பற்றி அதிகம் பேச விரும்பவில்லை. இந்தியாவைப் பொறுத்தவரையில் அவர்கள் விடுதலைப்புலிகளுக்கு மாறாக இருந்தவர்கள் என்பதையும் நாங்கள் எவரும் மறுக்க முடியாது. அதேபோன்று விடுதலைப்புலிகளும் இந்தியாவுடன் இணைந்து செயற்படுவதற்கு தயாராக இருந்தவர்கள் என்றும் எவராலும் கூறவிட முடியாது. ஆனால் இன்று ஒரு புதிய நிலைமை எற்பட்டிருக்கிறது. அது என்னவென்றால், இன்னும் தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வு கிடைக்கவில்லை என்பது. எமது மக்களுக்கு இன்னும் ஒரு விமோசனம் கிடைக்கவில்லை. எனவே அதற்கொரு தீர்வைக்காண வேண்டிய பொறுப்பு இந்தியாவுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் இருக்கின்றது.

இன்று மனித உரிமைகள், போர்க் குற்றங்கள் என்று பேசுகின்றார்கள். இவைகள் எல்லாம் இந்த நாட்டில் இனிமேலும் இடம்பெறாமல் இருக்க வேண்டுமென்றால், தமிழ் மக்களுக்கு ஒரு தீர்வு கிடைக்க வேண்டும். அவ்வாறானதொரு தீர்வு எட்டப்பட்டால்தான் இனிமேலும் இந்த நாட்டில் சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களும் மனித உரிமைச் சட்டங்களும் மீறப்படாத ஒரு நிலைமை ஏற்படும். அது நிகழ வேண்டுமாக இருந்தால், தமிழ் மக்களுக்கு ஓர் அரசியல் தீர்வை வழங்குவதன் மூலம் மட்டுமே அதனை அடைய முடியும் என்பதை இந்தியாவும், அமெரிக்காவும் சர்வதேசமும் உணர்ந்து கொள்ள வேண்டும். இதுதான் இன்றைய நிலைமை.

**எங்களது நிலைப்பாட்டை ஒளிவு மறைவின்றிக் கூறியாகிவிட்டது**

எங்களைப் பொறுத்தவரையில், நாம் இந்தியப் பிரதமருக்கும் இந்தியாவின் உயர் மட்டத்தினருக்கும் எங்களது நிலைப்பாட்டை, இன்றைய நிலைமையை ஒளிவுமறைவின்றி தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கிறோம். நாங்கள் நாட்டைப் பிரிக்கும்படி கேட்கவில்லை. இந்தியாவும் நாட்டைப் பிரிப்பதற்கான எண்ணப்பாட்டில் ஒருபோதும் இருந்திருக்கவில்லை. இந்திரா காந்தியும் அவ்வாறு சிந்தித்திருக்கவில்லை. ராஜீவ் காந்தியும் அவ்விதமாகச் சிந்திக்கவில்லை. ஆனால் தமிழ் மக்களின் பாதுகாப்பு, கௌரவம், அரசியல், பொருளாதார, சமூக, கலாசார ரீதியான உரிமைகளை வழங்கும் வகையிலான ஒரு தீர்வை வழங்க வேண்டுமென்பதில் அவர்கள் உறுதியாக இருந்திருக்கின்ற னர். ஆனால் பல்வேறு காரணங்களால் அது ஈடேறவில்லை. ஆகவே நாம் இனிவருங்காலத்திலாவது அதனைப் பெறும் வகையில் ஆக்கபூர்வமாகச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும் என்பதே எனது கருத்து.

கேள்வி: இந்தியாவுடன் தொடர்ந்து பேசிவருபவர் என்ற வகையில் அது என்னவகையானதொரு தீர்வுகுறித்து அக்கறை கொள்கிறது? பலரும் இந்தியா 13வது திருத்தச் சட்டம் குறித்தே கவனம்கொள்ளுவதாச் சொல்லுகின்றனர். இது பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

சம்பந்தன்: எமது மக்களின் பிரச்சினைக்கான தீர்வு என்ன என்பதை நாங்கள்தான் தீர்மானிக்க வேண்டும், இந்தியா அல்ல. ஆனால் இதில் இந்தியாவின் ஆலோசனைகளை நாம் பெற்றுக்கொள்ளலாம். தவிர 13வது திருத்தச் சட்டம் குறித்தெல்லாம் இப்போது பேச வேண்டிய அவசியம் இல்லை. எங்களுடைய மக்களின் தேவைகளை நிவர்த்தி செய்யும் வகையில் ஒரு தீர்வை காணுவது எங்களுடைய பொறுப்பு. அந்தத் தீர்வு எவ்வாறு அமைய

(28 ஆம் பக்கம் பார்க்க)

# நிபுணர் குழுவின் அறிக்கை பக்கசார்பானது; சர்வதேச நாடுகள் அதனை ஏற்கக்கூடாது

## 10 லட்சம் கையெழுத்துப் பெறும் நிகழ்வில் கெஹலிய

கொழும்பு,ஏப்.25

ஐ.நா. நிபுணர் குழு வெளியிட்டுள்ள அறிக்கை பக்கச்சார்பானதும் நீதியற்றதுமானது. இதனை எந்தவொரு சர்வதேச நாடும் ஏற்றுக்கொள்ளக்கூடாது. இவ்வாறு ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறியுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்றுள்ள போர்க் குற்றங்கள் குறித்து ஐ.நா. நிபுணர்குழு வெளியிட்டுள்ள அறிக்கைக்கு எதிராக 10 லட்சம் கையெழுத்துக்களைப் பெற்றுக் கொள்ளும் நிகழ்வு கடந்த வியாழக்கிழமை கொழும்பில் இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு உரையாற்றுகையில் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பான் கீ -மூனின் தன்னிச்சையான செயற்பாட்டினால் ஐ.நா. நிபுணர் குழு இலங்கைக்கு எதிராக வெளியிட்டுள்ள போர்க் குற்ற அறிக்கையை வன்மையாகக் கண்டிக்கின்றோம். நேர்மையற்றதும் பக்கச்சார்பானதுமான இந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் அனைத்தும் ஆதாரமற்றவை. இது குறித்து அரசுகருத்திலெடுத்துக்கொள்ளாது.

இலங்கைக்கு எதிரான பின்னணியில் இருந்து செயற்பட்டவர்கள் தற்போது வெளிச்சத்துக்கு வந்துள்ளார்கள். புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் உள்ள விடுதலைப்புலிகளின் செயற்பாட்டு அமைப்பினரும் குறிப்பிட்ட சில மேற்குலக நாடுகளைச் சேர்ந்தவர்களுமே இலங்கைக்கு எதிரான போர்க்குற்ற அறிக்கையின் பின்னணியில் உள்ளனர்.

எனவே இனம் காணப்பட்டுள்ள இவர்களின் சவால்களுக்கு வீட்டோ அதிகாரம் உள்ள தோழமை நாடுகளுடன்இணைந்து இலங்கை அரசு முகம் கொடுக்கத் தயாராகிவிட்டது. நாட்டின் பொருளா தாரம் உள்ளிட்ட சமூக அபிவிருத்திகளை பின்னடைவுக்குத் தள்ளி இலங்கையின் 30 ஆண்டு கால புலிப்பயங்கரவாதத்துக்கு எதிரான கருத்தை முன்வைக்காமல் இறுதி மூன்று வாரத்தில் பெரும் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளது என்று அந்த அறிக்கை கூறியுள்ளது.

புலிகளின் தலைவர்களைப் பாதுகாப்பதற்கு இவர்கள்தான் அன்றும் அரசுக்கு அழுத்தங்களைக் கொடுத்தனர். எனவே பான் கீ - மூனின் நிபுணர் குழுவுக்கு இலங்கை அரசு எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பதிலளிக்கமாட்டாது.- என்றார்.

(ஒ-9)

# தனியார் மருத்துவ நிறுவனக் கண்காணிப்பு ஒழுங்குபடுத்தல் சட்டம் மீளாய்வுக்கு

## சுகாதார அமைச்சுத் தீர்மானம்

கொழும்பு,ஏப்.25

தனியார்துறை மருத்துவமனைகளில் நிகழும் பிரசவத் தாய்மார்களின் மரணங்கள் தொடர்பாக விசாரணை ஒன்றை நிகழ்த்தும் அதிகாரம் சுகாதார அமைச்சுக்கு உரித்தாகும் விதத்தில் தனியார் மருத்துவ நிறுவன கண்காணிப்பு ஒழுங்குபடுத்தல் சட்டத்தை மீளாய்வு செய்ய சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

தற்போது நடைமுறையிலுள்ள சட்டத்துக்கு அமைய தனியார் மருத்துவமனைகளில் நிகழும் பிரசவ மரணங்கள் சம்பந்தமான பொறுப்புக்கூறல் சுகாதார அமைச்சுக்கு இல்லை.

அவை தொடர்பான தகவல்களும் கூடக் கிட்டுவதில்லை எனவும் சுகாதார அமைச்சு தெரிவிக்கிறது.

ஆனாலும், அரச மருத்துவமனை ஒன்றில் நிகழும் பிரசவ மரணங்கள் சம்பந்தமாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் விசாரணை ஒன்று மேற்கொள்ளப்படுகிறது.

எனவே இந்த மீளாய்வின் மூலம் எதிர்காலத்தில் தனியார் மருத்துவமனைகளில் நிகழும் பிரசவ மரணங்கள் தொடர்பாகவும் சுகாதார அமைச்சின் விசாரணையொன்றுக்கான ஆற்றல் கிட்டுகிறது எனவும் மேற்படி அமைச்சு தெரிவிக்கிறது.

அதற்கமைய தனியார் மருத்துவ நிறுவனக் கண்காணிப்புச் சட்டத்தை விரைந்து மீளாய்வுக்குள்ளாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் சுகாதார அமைச்சு தெரிவிக்கிறது.

ஆண்டொன்றில் இலங்கையில் 3 லட்சத்து 15 ஆயிரத்துக்கும் 3 லட்சத்து 25 ஆயிரத்துக்கும் இடைப்பட்ட குழந்தைப் பிறப்புக்கள் நிகழ்கின்றன.

இலங்கையில் பிரசவத் தாய்மார்கள் மரண விகிதாசாரமானது ஒரு லட்சம் குழந்தைப் பிறப்புக்களுக்கு 36 பிரசவ மரணங்கள் என்றவாறுள்ளது என்று கூறப்பட்டது.

(ம-22)

# அங்கீகரிக்கப்படாத அபிவிருத்தித் திட்டங்களை மக்கள் முன் விளம்பரப்படுத்த வேண்டாம்

## வேண்டுகோள் விடுக்கிறார் சரவணபவன் எம்.பி.

அங்கீகரிக்கப்படாத அபிவிருத்தித் திட்டங்களை மக்கள் முன் விளம்பரப்படுத்தி அரசியல் இலாபம் தேட முனைய வேண்டாம் என யாழ்.மாவட்ட தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் வேண்டுகோள் விடுத்தார்.

கடந்த செவ்வாயன்று யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்திலேயே சரவணபவன் இந்த வேண்டுகோளை முன்வைத்தார்.

இந்திய அரசினால் உறுதியளிக்கப்பட்ட50ஆயிரம் வீடமைப்புத் திட்டம் தொடர்பாகவும் பிரஸ்தாபிக்கப்பட்டது. மேற்படி வீடமைப்புத் திட்டம் எப் பொழுது எங்கே ஆரம் பிக்கப்படவுள்ளது என்பதைத் தெளிவுபடுத்த முடியுமா? என சரவணபவன் கேள்வி எழுப்பினார்.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் டக்ளஸ்தேவானந்தா, இந்த ஐம்பதினாயிரம் வீடமைப்புத் திட்டங்கள் தொடர்பாக திட்டவட்டமாக உறுதிப்படுத்தப்படவில்லை என்றார்.

இந்தச் சந்தர்ப்பத்தில் குறுக்கிட்ட சரவணபவன் இப்பொழுதெல்லாம் உறுதிப்படுத்தப்படாத திட்டங்களைத் தானே யாழ். மக்கள் முன் பிரசாரப்படுத்தப்பட்டு வருகின்றது. இதனைக் கேட்டுக் கேட்டு மக்களுக்கும் சலிப்பு ஏற்பட்டுவிட்டது.

இனிமேலாவது உறுதிப்படுத்தப்படாத திட்டங்களை மக்கள் முன் கூறி அரசியல் இலாபம் தேடாதீர்கள் என்று சரவணபவன் குறிப்பிட்டார். (ம-2-9)

# தீர்வையற்ற வாகன அனுமதி: 220 பேருக்கு வழங்கப்பட்டது

கொழும்பு,ஏப்.25

நாடாளுமன்ற உறுப்பினர்கள் 220 பேருக்குத் தீர்வையற்ற வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதற்கு ஐந்து பேர் மட்டும் விதிவிலக்காக உள்ளனர்.

220 பேரும் தீர்வையற்ற வாகனங்களைக் கொண்டு வருவதற்கான அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுள்ளனர் என்று நாடாளுமன்ற அலுவல்கள் அமைச்சரான திருமதி சுமேதா ஜீ.ஜயசேன தெரிவித்தார்.

ஐந்து உறுப்பினர்கள் ஏற்கனவே தீர்வையற்ற வாகனங்களுக்கான அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுள்ளனர்.

இந்த அனுமதிப்பத்திரங்களுக்கு இன்னும் ஐந்து வருடங்கள் முடிவடையாததால் அவர்களுக்குப் புதிய அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்படவில்லை எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

பழைய அனுமதிப் பத்திரங்கள் வழங்கிய தினத்தில் இருந்து ஐந்து வருடங் கள் பூர்த்தியான பின்னர் ஐவரும் புதிய அனுமதிப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர் கூறினார்.

(ம-5)

# தந்தை செல்வாவின் நினைவு தினம்

வலி.வடக்கு,ஏப்.25

தந்தை செல்வாவின் 34ஆவது ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகள் நாளை செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள தலைமையகத்தில் நடைபெறவுள்ளன.

(ம-86)

# யாழ்.சிறைக் கைதிகள் பங்குபற்றிய விளையாட்டு நிகழ்வு





தமிழ் - சிங்கள சித்திரைப் புத்தாண்டைச் சிறப்பிக்கும் வகையில் சிறைக்கைதிகள் பங்குபற்றிய விளையாட்டு நிகழ்வு நேற்று யாழ்.சிறைச்சாலைவளாகத்தில் இடம்பெற்றது.

யாழ்.சிறைச்சாலை சிரேஷ்ட அத்தியட்சகர் சந்தன எக்க நாயக்க தலைமையில் கைதிகளுக்கான விளையாட்டு நிகழ்வு இடம்பெற்றது.

இதில் யாழ்.மாவட்ட நீதிபதி அ.பிறேம்சங்கர், யாழ்.நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா, யாழ்ப்பாண சிறைச்சாலையின் முன்னாள் பிரதான சிறைச்சாலை அதிகாரி இந்திரகுமார், பேராசான் ஈஸ்வர சர்மா, யாழ்.மாவட்ட தலைமைப் பொலிஸ் பரிசோதகர் சமன் சிகேரா, ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் அங்கஜன் இராமநாதன் மற்றும் இராணுவ அதிகாரி ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர்.

யாழ்.சிறைச்சாலையில் தற்போது 280 கைதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 35பேர் பெண்கள்.

இந்தக் கைதிகளுக்கு என்று 20 விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்த விளையாட்டு நிகழ்வின் ஆரம்பத்தில் பேராசான் ஈஸ்வரசர்மா, யாழ். நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தினர். சிறைச்சாலையின் நலன்புரி அதிகாரி வி.சசிதரன் நன்றியுரை தெரிவித்தார்.

இந்த விளையாட்டு நிகழ்வுக்கு திருச்சிலுவை கன்னியர் சபை, யாழ்ப்பாண வணிகர் கழகம், வேள்ட்விஷன் மற்றும் தனியார் நிறுவனங்கள் அனுசரணைகளை வழங்கியிருந்தன. (ம-14)

# ஆளுநருக்கு உள்ள பற்று பிரதம செயலருக்கு இல்லை


யாழ்ப்பாணம், ஏப்.25

தமிழ் மீது ஆளுநருக்கு உள்ள பற்று பிரதம செயலாளருக்கு இல்லை. அவர்களது அலுவலகங்களில் வைக்கப்பட்டுள்ள பெயர்ப் பலகை மூலம் இதனைத் தெட்டத்தெளிவாக விளங்கிக்கொள்ள முடிகிறது.

யாழ். மாவட்டத்தில் தற்போது வடக்கு மாகாண சபைக்குச் சொந்தமான திணைக்களங்கள் இயங்கி வருகின்றன.

இவற்றில் உள்ள பெயர்ப் பலகைகள் பலவற்றிலும் சிங்கள மொழிக்கே முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது.






இந்தத் திணைக்களங்கள் திருகோணமலையில் இருந்த போது அவற்றின் பெயர்ப் பலகைகளில் தமிழ் மொழிக்கே முன்னுரிமை வழங்கப்பட்டிருந்தது. தற்போது இவ்வாறு மாற்றப்பட்டுள்ளமை குறித்து மக்கள் விசனம் கூறுகின்றனர்.

இதேவேளை - ஆளுநரின் அலுவலகப் பெயர்ப்பலகையில் தமிழுக்கு முன்னுரிமை அளிக்கப்பட்ட போதும் ஏனைய திணைக்களங்களில் சிங்களத்துக்கு முன்னுரிமை அளிக்கப்பட்ட பெயர்ப் பலகைகளே நடப்பட்டுள்ளன.

இந்த விடயத்தில் உரியவர்கள் கவனம் திரும்ப வேண்டும் என்று பல தரப்பட்டோர் மத்தியிலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ம - 288)

# குடும்ப வன்முறைப் பிணக்குகளை தீர்ப்பது தொடர்பான செயலமர்வு

யாழ்ப்பாணம், ஏப்.25

குடும்ப வன்முறை குறித்து மத்தியஸ்தர் சபைக்கு முன் கொண்டுவரப்படுகின்ற பிணக்குகளை எவ்வாறு இணக்கப்பாட்டுக்குக்குள் கொண்டுவரலாம் என்பது தொடர்பாக விளக்கமளிக்கும் செயலமர்வு யாழ். கலட்டி வீதியில் உள்ள மிலேனியம் விருந்தினர் விடுதியில் நேற்றுக் காலை 9 மணிமுதல் பிற்பகல் 2 மணிவரை இடம் பெற்றது.

நீதிமறுசீரமைப்பு, நீதியமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தச் செயலமர்வில் நல்லூர் பிரதேச செயலகப் பிரிவைச் சேர்ந்த மத்தியஸ்த சபை உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

இதில் சட்டத்தரணி எம்.திருநாவுக்கரசு, திருமதி பாஸ்லிபு காசிதீன், நீதியமைச்சின் இணைப்பாளர் எசபால டி சில்வா மற்றும் மத்தியஸ்தர் சபையின் யாழ். மாவட்ட இணைப்பாளர் ப.சனாதனசர்மா ஆகியோர் கலந்து கொண்டு மத்தியஸ்த சபை உறுப்பினர்களுக்கான பயிற்சிகளை வழங்கினர்.

குடும்ப வன்முறைகள் காரணமாக மத்தியஸ்த சபையை நாடும் தம்பதிகளுக்கு எவ்வாறான ஆலோசனைகளை முன் வழங்கி அவர்களை இணக்கப்பாட்டுக்கு கொண்டு வருவது எவ்வாறு என்பது குறித்த பல்வேறு விடயங்கள் வளவாளர்களால் எடுத்துரைக்கப்பட்டன.

இதேவேளை -

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிலும் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலும் உள்ள மத்தியஸ்தர் சபை உறுப்பினர்களுக்கும் இத்தகைய பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. (ம-9)

# உபதபாலதிபர்கள் பிரச்சினை குறித்து ஆராய்வு

யாழ்ப்பாணம், ஏப். 25

வடமாகாண உபதபாலதிபர்களின் பிரச்சினைகள் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடல் நேற்று யாழ். பிரதம தபாலக மண்டபத்தில் இடம்பெற்றது.

அகில இலங்கை உபதபாலக அதிபர்கள் தொழிற் சங்கத்தின் தலைவர் விமலரத்ன தகநாயக்க தலைமையில் இடம் பெற்ற இந்த நிகழ்வில் இந்தச் சங்கத்தின் செயலாளர் பிரேமகுமார விஜேவர்த்தன, பொருளாளர் எல்.பி.ஜட்டவர, அம்பாறை மாவட்ட கிளைச் செயலாளர் ஏ.எல். அகமட், வடமாகாண உப தபாலக அஞ்சல் அதிபர் எஸ். இரத்தினசிங்கம், யாழ். மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் ஜெபரத்தினம், யாழ்.பிரதம தபாலதிபர் தர்மராஜா மற்றும் வடமாகாணத்தைச் சேர்ந்த உபதபால் அதிபர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

1973 ஆம் ஆண்டு வடமாகாணத்தில் தனது சேவையை வழங்க ஆரம்பித்துள்ள இந்த தொழிற் சங்கத்தின் ஊடாக இந்த வருடம் அமுல்படுத்தப்படும் நடைமுறைச் சேவைகள் மற்றும் உப தபாலதிபர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பான பல விடயங்கள் குறித்து கலந்து ரையாடப்பட்டது.

அத்துடன் இந்த வருடத்துக்கான புதிய நிர்வாக சபையும் தெரிவுசெய்யப்பட்டது. (ம-313)

# கொள்ளை முயற்சி பொலிஸாரால் முறியடிப்பு

நெல்லியடி, ஏப்.25

வடமராட்சி, துன்னாலை அத்தாய் பகுதியில் பொலி ஸார் மேற்கொண்ட நடவடிக்கையால் அங்கு இடம்பெற விருந்த கொள்ளை முறியடிக்கப்பட்டதாக நெல்லியடிப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாகத் தெரிய வந்துள்ளதாவது:

அத்தாய் பகுதியில் உள்ள வீடொன்றினுள் நேற்று அதிகாலை புகுந்த ஐவர் அடங்கிய கொள்ளைக் கோஷ்டி குழுவினர் அங்கு அட்டகாசம் புரிந்துள்ளனர்.

இதனையடுத்து அப்பகுதி மக்கள் நெல்லியடிப் பொலிஸாருக்கு உடனடியாகத் தகவல் வழங்கினர்.

பொலிஸார் துரிதமாகச் செயற்பட்டு நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

இவர்களில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். ஏனைய நால்வரையும் தேடி வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-319)

# விபத்துக்களில் காயம்

மழை பெய்து கொண்டிருந்த வேளையில் வாகன விபத்தில் சிக்கி நால்வர் காயமடைந்தனர்.

வீதியின் குறுக்கே ஓடிய நாயுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் கொடிகாமத்தைச் சேர்ந்த ர.மரியதாஸ் (வயது 44) என்பவரும், ஓட்டோ நாயுடன் மோதியதில் மீசாலையைச் சேர்ந்த கே.வி. இராசதுரை (வயது 62) என்பவரும் மோட்டார் சைக்கிள் சைக்கிள் விபத்தில் சங்கத்தானையைச் சேர்ந்த தங்கவேலு (வயது 72) மட்டுவிலைச் சேர்ந்த எஸ். நாகமுத்து (வயது 87) ஆகியோரும் காயமடைந்தனர்.

காயமடைந்த நால்வரும் சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர். (ம-207)

# படையினரின் ஏற்பாட்டில் புத்தாண்டு தின நிகழ்வுகள்



வலி. வடக்கு பொலிஸ் அதிகாரி மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைக்கிறார்.




தென்மராட்சியில் 52 ஆவது படையணி கட்டளைத் தளபதி பிரிகேடியர் டபிள்யூ ஏ.வீ.அனுர சுதசிங்க மங்கள விளக்கேற்றுகிறார். அருகில் விருந்தினர்கள் நிற்கின்றனர்.

யாழ்ப்பாணம், ஏப்.25

வலி.வடக்குப் பிரதேச செயலகமும் தெல்லிப்பழை பொலிஸாரும் இணைந்து நேற்றுமுன்தினம் சனிக்கிழமை புத்தாண்டை ஒட்டி நிகழ்வுகளை நடத்தினர்.

தெல்லிப்பழை பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி விக்கிரமரட்ண தலைமையில் மல்லாகம் விசாலாட்சி பாடசாலைக்கு அருகில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் காலையில் ஆண்கள் பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டிகள் இடம்பெற்றன.

தொடர்ந்து மரதன் ஓட்டம், கிறிஸ்மரம் ஏறுதல், தயிர் முட்டி உடைத்தல், கிடுகு பின்னுதல், தேங்காய் துருவுதல், கயிறு இழுத்தல் போன்ற பல்வேறு கிராமியப் போட்டிகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் பொலிஸ் அத்தியட்சகர் காமினி நவரத்ன, வலி.வடக்குப் பிரதேச செயலர் மற்றும் படையினரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை 523 ஆவது படையணியின் ஏற்பாட்டில் தென்மராட்சி பிரதேச மக்களுக்கான தமிழ், சிங்களப் புத்தாண்டு விளையாட்டுப் போட்டிகள் நேற்று சாவகச்சேரி நகரசபை பொது விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றன.

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம், பீனிக்ஸ் பிளாஸ்ரிக் உற்பத்தி நிறுவனம், எயார்டெல் நிறுவனம் ஆகியவற்றின் அனுசரணையுடன் நிகழ்வுகள் நடைபெற்றன.

523 ஆவது படையணி கட்டளைத் தளபதி பிரிகேடியர் ரி.எஸ். தெமட்டம்பிட்டிய தலைமையில் நடைபெற்ற இந்தப் போட்டிகளுக்கு முதன்மை விருந்தினராக 52 ஆவது படையணி கட்டளைத் தளபதி பிரிகேடியர் டபிள்யு ஏ.வி. அனுர சுதசிங்கவும், சிறப்பு விருந்தினர்களாக 522 ஆவது படையணி தளபதி பிரிகேடியர் எஸ். சில்வா, சாவகச்சேரி நகரசபை செயலாளர் கொன்ஸ்ரன்ரைன் ஜக்சில், சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் கழக மன்றத் தலைவர் வ.ஸ்ரீபிரகாஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

நடைபெற்ற இருபாலாருக்குமான சைக்கிளோட்டம், மரதன் ஓட்டம் உட்பட 60 இற்கும் மேற்பட்ட போட்டிகளில் பெரும் எண்ணிக்கையான தென்மராட்சி பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள் கலந்துகொண்டனர்.

இவ்வருடம் வேறு பிரதேசங்களைச் சேர்ந்தவர்களும் படையினரும் போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படாதமை குறிப்பிடத்தக்கது. (ம-86-207)

# உள்ளூராட்சித் திணைக்கள அபிவிருத்தி 754 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு

## யாழ். அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம்,ஏப்.25

யாழ். மாவட்ட உள்ளூராட்சித் திணைக்களங்களுக்குரிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு 754 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ். செயலகக் கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு:-

உள்ளூராட்சித் திணைக்களங்களுக்குரிய வீதிகள் புனரமைப்பு, கட்டடங்கள் புனரமைப்பு எனப் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களுக்கு இந்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்தி அமைச்சால் இதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அபிவிருத்திகள் யாவும் 'நெல்சிப்' திட்டத்தின் ஊடாக மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன் வேலைகள் யாவும் இவ்வாண்டு இறுதிக்குள் நிறைவடையும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ம-9-14)

# ஊர்காவற்றுறை - யாழ்ப்பாணம் போக்குவரத்துப் பாதை மாற்றம்

யாழ்ப்பாணத்துக்கும் ஊர்காவற்றுறைக்கும் இடையிலான 777 இலக்க போக்குவரத்து பாதையில் தற்போது மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அண்மையில் புளிங்கூடல் சந்திக்கும் வங்களாவடிக்கும் இடையிலான பிரதான வீதி திறந்து வைக்கப்பட்டது. ஆனால் இவ்வீதியின் ஊடாக எதுவித போக்குவரத்து சேவைகளும் இதுவரை வழங்கப்படவில்லை.

ஆனால் நேற்றுமுன்தினம் தொடக்கம் யாழ்ப்பாணத்திலிருந்து புறப்படும் அனைத்து 777 இலக்க பேருந்துகளும் அராலி சந்தியூடாக வங்களாவடி,புளியங்கூடல் சந்தி சென்று பின்னர் சரவணைச்சந்தி சென்று மீண்டும் தம்பாட்டி சென்று ஊர் காவற்றுறை வந்தடையும்.

இதேபோல் ஊர்காவற்றுயிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி செல்லும் 777 இலக்க பேருந்து சேவையும் இதேபோல் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-325)

## மோ. சைக்கிளில் சென்ற பெண் படுகாயம்

யாழ்ப்பாணம்,ஏப்.25

தலைக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையில் இருந்து பயணித்த பெண் ஒருவர் தவறிவீழ்ந்து தலையில் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் அராலி தெற்கில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 3 மணியளவில் இடம்பெற்றது. சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த ஞா.சரஸ்வதி (வயது 41) என்பவரே படுகாமடைந்தார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

49சிசி ரக மோட்டார் சைக்கிளில் சென்ற சமயமே இந்த விபத்து இடம்பெற்றது. (ஒ-4)

# விவசாயிகளுக்கு உபகரணம் வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுவதாகத் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 25

தென்மராட்சிப் பகுதியில் விவசாயிகளுக்கான உபகரணங்கள் வழங்கப்படும் போது பாரபட்சம் காட்டப்படுவதாகச் குற்றஞ்சாட்டப்படுள்ளது.

தென்மராட்சிப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கடந்த 20 ஆம் திகதி இடம்பெற்றது.

பிரதேசத்தின் விவசாய அபிவிருத்தி குறித்து ஆராயப்பட்ட சந்தர்ப்பத்தின் போது பொது மகன் ஒருவரால் மேற்கண்டவாறு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தின் போது மேலும் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்கள் வருமாறு:-

விவசாயிகளுக்கு என்று நீர் இறைக்கும் இயந்திரங்கள், தூவல் நீர்ப்பாசன உபகரணங்கள் வழங்கப்பட்டன. விவசாயத் திணைக்களம் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் ஊடாக அவற்றை வழங்கியது. அவை ஐம்பது வீத மானியத்திலே வழங்கப்பட்டன.

சில விவசாயிகளுக்கு அந்த உபகரணங்கள் பல கிடைத்துள்ளன. சில விவசாயகளுக்கு அவை கிடைக்கவில்ல.

இந்த உபகரணங்களுக்கான தேவை இல்லாதவர்களுக்கும் அவை வழங்கப்பட்டுள்ளன.

இவ்வாறு உதவித் திட்டங்கள் வழங்குவதில் உதாசீனங்கள் இடம்பெற்றுள்ளன.

இவை காரணமாக எமது பகுதிகளில் விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவித்தார். இதற்குப் பதிலளித்த அமைச்சர் டக்ளஸ், தேவானந்தா விவசாயிகளுக்கான உதவிகள் வழங்குவதில் தவறுகள் இடம்பெற்றுள்ளன என்பதை உணர்கின்றேன்.

இனி வருங்காலங்களில் இவ்வாறான தவறுகள் இடம்பெறாது கவனிக்க வேண்டிய பொறுப்பு அதிகாரிகளுக்கு உள்ளது. -என்று கூறினார். (ம-14)

## உஷ்ணம் குறைத்த மழை

தென்மராட்சி, ஏப்.25

கடும் வெப்பத்தில் சிக்கித் தவித்த தென்மராட்சி பிரதேச மக்கள் கடந்த இரு தினங்களாக பெய்து வரும் தொடர் மழையினால் உஷ்ணம் குறைந்தமையிட்டு மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

அதேவேளையில் தொடர் மழையினால் விளை பயிர்கள் அழிவடையும் அபாயம் உள்ளதாக தென்மராட்சி விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

நெல் அறுவடை செய்யப்பட்ட வயல்களில் மேற்கொள்ளப்பட்ட உப உணவுப் பயிர்களும் சிறுதானியப் பயிர்களும் வெள்ளத்தில் மூழ்கி இருப்பதைக் காணமுடிகிறது. (ம-207)

## புலமைப் பரிசில் மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.25

கொடிகாமம் வங்கியின் சாவகச்சேரி கிளையில் சிறுவர்களுக்கான 'அருணலு' சேமிப்பு கணக்கில் வைப்பிலிட்டு கடந்த ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற 28 மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை வங்கி மண்டபத்தில் நடைபெற்றது.

வங்கி கிளை முகாமையாளர் எஸ்.வி.குருபாதம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன், ஆரம்பப் பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீகந்தராசா ஆகியோர் விருந்தினர்களாக கலந்துகொண்டு சான்றிதழ்களை வழங்கினர்.

ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்ளுக்கு தலா 10 ஆயிரம், 7 ஆயிரத்து 500 ரூபா, 5 ஆயிரம் ரூபா வீதம் 2 லட்சத்து 40 ஆயிரம் ரூபா மாணவர்களின் கணக்கில் வைப்பிலிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-207)

# யாழ். ஆஸ்பத்திரி சவச்சாலையில் சிப்பாயின் சடலம் பழுதடைந்தது

## உறவினர்கள் அதிருப்தியுடன் திரும்பினர்

யாழ்ப்பாணம், ஏப். 25

துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமான இராணுவச் சிப்பாயின் சடலம் பழுதடைந்த நிலையில் உறவினர்களிடம் நேற்றுமுன்தினம் கையளிக்கப்பட்டது.

மஹியங்கனையைச் சேர்ந்த சமரக்கோன் ரவீந்திரகுமார (வயது 25) என்ற சிப்பாயே மரணமானவர் ஆவார்.

சிப்பாயின் சடலம் கடந்த வெள்ளிக்கிழமை யாழ். போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டது. வெள்ளிக்கிழமை இரவு பிரேத அறையின் குளிரூட்டிகளில் இரண்டு சரிவர இயங்காமையால் குறித்த இராணுவச் சிப்பாயின் சடலம் பழுதடைந்துள்ளது.

இதனால் சிப்பாயின் உறவினர்கள் அதிருப்தி தெரிவித்து, வைத்தியசாலை நிர்வாகத்தினரையும் சாடினர். பின்னர் கண்ணீர் சொரிந்தவாறு அங்கிருந்து திரும்பிச் சென்றனர்.

இதேவேளை, சிப்பாயின் சடலத்தை இராணுவ மரியாதையுடன் அடக்கம் செய்வதற்காகப் படையினர் பொறுப்பேற்று எடுத்துச் சென்றனர்.

இதேவேளை, குளிரூட்டிகளைத் திருத்துவதற்கான உபகரணங்கள் சிங்கப்பூரில் இருந்து வரவேண்டும். அதன் பின்னர் திருத்தம் செய்யமுடியும் என்று வைத்தியசாலையின் பணிப்பாளர் ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

சிப்பாயின் சடலம் பழுதடைந்ததைத் தொடர்ந்து இராணுவத்தினர் பணிப்பாளரிடம் விசனம் தெரிவித்தனர். இதனையடுத்து உடனடியாகத் திருத்த வேலைகளை மேற்கொள்ளுமாறு பணிப்பாளர் அறிவுறுத்தல் விடுத்தார். குறித்த குளிரூட்டிகளைத் திருத்தும் பணிகள் நேற்றுமுன்தினம் உடனடியாக ஆரம்பிக்கப்பட்டன. (ஒ-15)

## மனிதாபிமானம்....



தொடரட்டும்: யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் நிலவும் இரத்தத் தட்டுப்பாட்டை நீக்கும் பொருட்டு புதிய உயர்கல்லூரி பழைய மாணவர் சங்க அனுசரணையில் இரத்ததான நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை புதிய உயர்கல்லூரி வளாகத்தில் இடம்பெற்றது. மாணவர்கள் இரத்ததானம் செய்கின்றனர்.

(த-319)

# ஜப்பான் நாட்டின் உதவித் திட்டத்தின் கீழ் குடாநாட்டுக்கு 115 மில். ரூபா ஒதுக்கீடு

## இந்த வருட அபிவிருத்திப் பணிகளுக்காக

யாழ்ப்பாணம், ஏப்.25

ஜப்பான் நாட்டின் சமூக 'ஜெய்க்கா' திட்டத்தின் கீழ் குடாநாட்டின் அபிவிருத்திப் பணிகளுக்காக இந்த வருடம் 115.86 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் இத்தகவலைத் தெரிவித்தார்.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். செயலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற யாழ். மாவட்ட ஒழுங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் இந்த நிதி மூலம் மேற்கொள்ளப்படவுள்ளன.

பிரதேச செயலக ரீதியாக மேற்கொள்ளப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்களில் மாதர் அபிவிருத்தி சங்கத்தின் ஊடாக நிதிகள் வழங்கப்பட்டு கணவனை இழந்த பெண்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தல் எனப் பல்வேறு அபிவிருத்தித்திட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஒ-9)

# உலக வங்கியின் நிதியுதவியுடன் யாழ். மாவட்டத்தில் வீதிகள் புனரமைப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.25

உலக வங்கியின் பல இடங்களில் வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன என்று யாழ். மாவட்ட அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:

நல்லூர், கோப்பாய், தெல்லிப்பழை, வேலணை, கரவெட்டி, சாவகச்சேரி, சண்டிலிப்பாய், உடுவில், பருத்தித்துறை ஆகிய பிரதேச செயலர் பிரிவுகளுக்குட்பட்ட வீதிகளும் - நெடுந்தீவு, மருதங்கேணி ஆகிய உதவி அரச அதிபர் பிரிவுகளுக்குட்பட்ட வீதிகளும் புனரமைக்கப்படவுள்ளன.

மாகாண சபைக்குச் சொந்தமான வீதிகள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இவற்றுக்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது என்று உலக வங்கி எம்மிடம் இதுவரை அறிவிக்கவில்லை. இருப்பினும் இந்த வீதிகளை தாம் புனரமைத்துத் தருவதாக கூறியுள்ளனர். - என்றார். (ம-9-14)

# சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் நெடுங்கேணிப் பிரிவுக்கு நியமனம்

வவுனியா, ஏப்.25

வவுனியா வடக்கு பிரதேச செயலகத்தில் நெடுங்கேணிப் பிரிவுக்கு புதிதாக நியமிக்கப் பட்ட சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தர் கடந்த 18 ஆம் திகதி முதல் கடமையைப் பொறுப்பேற்றுள்ளார்.

வடமாகாண சிறுவர் நன்னடத்தை திணைக்களப் பணிப் பாளரது கடிதத்தின் பிரகாரம் வவுனியா மாவட்ட சிறுவர் நன்னடத்தைத் திணைக்களத்தில் கடமையாற்றிய தி.மனோகரராஜா இப்பதவிக்கு நியமிக்கப் பட்டுள்ளார்.

பல வருடங்களாக வவுனியா வடக்குப் பகுதியில் இப்பதவி வெற்றிடமாகக் காணப்பட்டு வந்துள்ளது. அத்துடன் தற்போது துரிதகதியில் இந்தப் பகுதியில் மீள்குடியமர்வு நடைபெற்று வருகின்றது. மேலும் பல சிறுவர்கள் தொடர்பான பிரச்சினைகள், வன்முறைகள் என்பன இப்பிரதேசத்தில் காணப் படுவதால் சிறுவர்களுக்குச் சட்ட ரீதியாக உதவுவதற்கு சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தரின் பணி இன்றியமையாத ஒன்றாகும். இதனைக் கருத்திற் கொண்டே இவரது நியமனம் இப்பகுதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா வடக்கு பிரதேச செயலக அலுவலகத்தில் ஒவ்வொரு புதன்கிழமைகளிலும் பொதுமக்கள் இவரது சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(க-501)

# முல்லைத்தீவு மாவட்டத்தில் நான்கு மின்சாரத் திட்டங்கள்

முல்லைத்தீவு, ஏப்.25

முல்லைத்தீவு மாவட்டத்தில் நான்கு மின்சாரத் திட்டங்கள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

செல்வபுரம், சிலாவத்தை, உப்புமாவெளி, முள்ளியவளை ஆகிய இடங்களிலேயே இவை திறந்து வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. வடக்கின் வசந்தம் திட்டத்தின்கீழ் இதற்கான நிதியை அமைச்சர் றிசாத் பதியுதீன் பெற்றுக் கொடுத்திருந்தார். இதற்காக 379 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

இதேவேளை மின்சாரம் இல்லாத கிராமங்களுக்கு மின்சாரத்தைப் பெற்றுக் கொடுக்கும் பணியை உடனடியாக மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு அமைச்சர் ஆலோசனை வழங்கினார்.

இந்த நிகழ்வில் வன்னி மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் முல்லைத்தீவு மாவட்ட இணைப்பாளருமான ச.கனகரத்தினம், முல்லைத்தீவு அரச அதிபர் பத்திநாதன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (க)

# அதிபருடன் மட்டும் இயங்கும் பாடசாலை

அக்கராயன், ஏப்.25

துணுக்காய் அம்பலப் பெருமாள்குளம் பாடசாலை ஆசிரியர்களின்றி அதிபருடன் மட்டுமே இயங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் காரணமாக அதிபர் விடுப்பு எடுக்கும் நாள்களில் பாடசாலை செயலிழந்து விடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இது தொடர்பாகப் பாடசாலை அதிபருடன் தொடர்பு கொண்டு கேட்ட போது: தற்போது 13 மாணவர்கள் மட்டுமே இந்தப் பாடசாலையில் கல்வி கற்கின்றனர். ஆசிரியர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை. மாணவர்களுக்கு நானே கற்பித்து வருகின்றேன். எனக்குச் சுகயீனம் ஏற்படும் போதும், நான் விடுப்பில் செல்லும் போதும் பாடசாலை செயலிழந்து விடுகின்றது. இதனால் மாணவர்களின் கல்வியும் பாதிக்கப்படுகின்றது. இது தொடர்பாக வலயக் கல்விப் பணிமனைக்குத் தெரியப்படுத்தியுள்ளேன் என்றார்.

அம்பலப்பெருமாள் குளம் குடியேற்றத் திட்டம் 1968 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஆனால் மேட்டுக்காணியில் மக்கள் முழுமையாகக் குடியமராமல் வயல் நிலங்களை அண்டிய பிரதேசத்தில் தங்கியுள்ளனர்.

இதுவே பாடசாலை மாணவர்களின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணமெனவும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

(க-410)

## ஒளி ஏழட்டும்...



அவசியமான சேவை: முல்லைத்தீவில் அமைச்சர் றிசாத் பதியுதீன் மின்சாரத் திட்டமொன்றை ஆரம்பித்து வைக்கின்றார்.


# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தாயின் மடியில் 01.01.1942

காலனின் பிடியில் 06.05.2010



அமரர்

## கலாபூஷணம் தம்பு சற்குருநாதன்

(ஏழாலை)

திதி: சித்திரைமாத அபரபட்ஷ அட்டமி

இசை உலகின் உயர் கலையே
வாராது வந்த மாமணியே வீழாது எம் குடி என்று
வீறப்பாய் வாழ்தோமே எம் குருவாய் வந்துதித்து
சந்தம் எல்லாம் சுமந்து நிற்க சுமைதாங்கி கல்லான சற்குருவே
அகிலமதில் அவதரித்த இசைப் பிறையே
பார்போற்றும் உத்தமனாய் ஆலவிருட்சமாய்
நீங்கள் இருந்தீர்கள் அதனால் எமக்கு நிழலாய் இருப்பீர்கள் என
நிறைவுடனே நாம் இருந்தோம் எங்கு சென்றாலும் எக் கோயிலிலும்
உம் இசை எம் மனதை மனம் உருகி அசையவைக்குது அப்பா
கல்லும் கரையுது அம்மையா
ஓராண்டு ஆனால் என்ன எத்தனை ஆண்டு வந்தாலும்
இனிக் காலமெல்லாம் உங்கள் நினைவுடன் எம் மனது.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மயிலங்காடு,
ஏழாலை தெற்கு.

மகன்மார்:- வாசன் (லண்டன்) 7830959925,
மதன் (நோர்வே) மற்றும் குடும்பத்தினர்.

(20,27,49)(3384)



# மரண அறிவித்தல்



## லோறன்ஸ் மரியைப்பிள்ளை

குருநகரைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட லோறன்ஸ் மரியைப்பிள்ளை கடந்த (15.04.2011) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சமத்தர் அந்தோனிப்பிள்ளை லோறன்ஸின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சந்தியோ அடைக்கலம்- றோசம்மா தம்பதியரின் அன்பு மகளும் , ஓய்வுபெற்ற ஆசிரியை ஸ்ரெலா பீற்றர் தர்மநாயகம், எலிசபெத் தவராஜா (லண்டன்), நோபேட் (பிரான்ஸ்), குயின்மேரிறெமன்டியஸ் (பிரான்ஸ்), எற்வேட் (பிரான்ஸ்), கிறேஷியன் (பிரான்ஸ்), கொயன்ஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அருமைத் தாயாரும், ஓய்வுபெற்ற ஆசிரியர் பீற்றர் தர்மநாயகம் தவராஜா (கனடா), வசந்தி (பிரான்ஸ்), றெமன்டியஸ் (பிரான்ஸ்), சுகர்ணா (பிரான்ஸ்), சுபாஷினி (பிரான்ஸ்), வதனா(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25.04.2011) திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணியளவில் அவரது இல்லத்திலிருந்து யாழ்.மரியன்னை பேராலயத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு இரங்கல் திருப்பலியை அடுத்து கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் எற்றுக் கொள்ளவும்.

தகவல்:
ஸ்ரெலாபீற்றர்தர்மநாயகம் (மகள்)

இல.63/2, மவுண்கார் மேல் வீதி,
குருநகர், யாழ்ப்பாணம்.

(சி/577915) (20,27,49)

# மன்னாரில் அவசர அம்புலன்ஸ் சேவை

மன்னார்,ஏப்.25

அவசர அம்புலன்ஸ் சேவையை ஆரம்பிக்கும் நிகழ்வொன்று இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு மன்னாரில் நடைபெறவுள்ளது. மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் திருமதி யூட் ஏதனி இத்தகவலைத் தெரிவித்தார்.

வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறியின் ஆலோசனைக்கமைவாக, வடமாகாண சுகாதார அமைச்சின் செயலாளர் ஆர்.ரவீந்திரனின் தலைமையில் மேற்படி அவசர அம்புலன்ஸ் சேவை ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

மேற்படி சேவை மன்னார்-தாழ்வுபாடு பிரதான வீதியில் உள்ள மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. இந்தச் சேவை மன்னார் மாவட்டம் முழுவதும் இடம்பெறும்.

இந்தச் சேவையைப் பெற்றுக் கொள்ள மன்னார் மாவட்டத்தின் எப்பாகத்தில் இருந்தும் ''110'' என்ற இலக்கத்துடன் தொடர்பை ஏற்படுத்தலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராகக் கைத்தொழில் மற்றும் வாணிபத் துறை அமைச்சர் றிசாட் பதியுதீனும் சிறப்பு விருந்தினர்களாக வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உனைஸ் பாரூக், மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி மோகநாதன், அவசர மருத்துவ சேவைகள் அமைப்பின் இலங்கைக்கான பணிப்பாளர், தள்ளாடி 54 ஆவது படைப்பிரிவு அதிகாரி பிரிகேடியர் மைத்திரி டயஸ், வடமாகாண கடற்படைக் கொமாண்டர் றியல் அட்மிரல் ஏ.ஆர். அமரசிங்க மற்றும் மன்னார் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.ஏ.ஆனந்த சமரக்கோன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (க-601)

# அம்பலப்பெருமாள் குளத்தில் பல்வேறு வேலைத் திட்டங்கள்

அக்கராயன்,ஏப்.25

துணுக்காய், அம்பலப் பெருமாள் குளம் கிராமத்தில் பல வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கிராமத்தில் அமைந்துள்ள அம்பலவன் சின்னக் குளம் புனரமைக்கப்படவுள்ளது. இதன் வேலைகள் முடிவுற்றதும் 150 ஏக்கரில் நெற்செய்கை மேற்கொள்ள முடியுமென இப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் மேட்டு நிலப் பயிர்களும் மேற்கொள்ள முடியுமென அவர்கள் தெரிவித்தனர்.

அத்துடன் இந்தக் கிராமத்தின் முதன்மை வீதி புனரமைக்கப்பட்டுள்ளது. நீண்டகாலமாகப் புனரமைக்கப்படாத இந்த வீதி தற்போதுதான் புனரமைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அம்பலப் பெருமாள் குளமும் புனரமைக்கப்படவுள்ளது. சிறுபோக நெற்செய்கை நடைபெறும் போதே இந்தக் குளத்தின் புனரமைமப்புப் பணிகளும் இடம்பெற விருப்பதாக அதிகாரியொருவர் தெரிவித்தார். அத்துடன் இந்தக் கிராமத்தின் பொது நோக்கு மண்டபமும் தற்போது புனரமைக்கப்பட்டு வருகின்றது. போரின் போது இந்த மண்டபம் அழிந்து போனமை குறிப்பிடத்தக்கது. (க-410)

# உறவுகளை மீட்டுத் தருமாறு அமைச்சர் ஹக்கீமிடம் கோரிக்கை

மன்னார், ஏப்.25

தடுப்பிலுள்ளவர்களின் உறவினர்கள் என்னை அடிக்கடி சந்தித்து தடுப்பிலுள்ள தமது உறவுகளை விடுதலை செய்வதற்கு ஆவன செய்யுமாறு அடிக்கடி கோரிவருகின்றனர். இவ்வாறு தெரிவித்திருக்கிறார் நீதியமைச்சர் றவூப் ஹக்கீம்.

மன்னாரில் அரச திணைக்களங்களின் அதிகாரிகளுடனான சந்திப்பின்போதே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார்.

கடந்த வியாழக்கிழமை மன்னாருக்கு வருகை தந்த நீதியமைச்சர் அங்கு பல்வேறு நிகழ்ச்சிகளிலும் கலந்துகொண்டார். நேரில் மன்னார் மாவட்ட நீதிமன்றங்களுக்குச் சென்ற அவர்கள் அதன் செயற்பாடுகளைப் பார்வையிட்டார்.

பின்னர் அங்கு அமையவிருக்கும் உயர் நீதிமன்றத்தின் வேலைத் திட்டங்களையும் பார்வையிட்டார். இதன் போது மன்னார் மாவட்ட நீதிவான் ஏ.யுட்சண், நாடாளுமன்ற உறுப்பினரும் சட்டத்தரணியுமான எம்.பி.பாரூக், சட்டத்தரணிகள் எனப் பலர் உடனிருந்தனர்.

பின்னர் மன்னார் அரச செயலகத்தில் திணைக்களங்களின் உயரதிகாரிகளுடன் சந்திப்பொன்றையும் அமைச்சர் நடத்தினார்.

இதன் போது மன்னார் ஆயர் இராயப்பு யோசேப், மாவட்ட அரச அதிபர் ஏ. வேதநாயகன் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (க)

# பிரதேச சபைக்கு தெரிவானவர்களுக்கு பேசாலையில் வரவேற்பு

மன்னார், ஏப்.25

மன்னார் பிரதேச சபையின் உள்ளூர் அதிகார சபைக்கு தெரிவு செய்யப்பட்ட தவிசாளர், துணைத்தவிசாளர், உறுப்பினர்களை வரவேற்கும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை மு.ப. 10 மணிக்கு பேசாலை பிரதேச சபையின் பிரதான மண்டபத்தில் இடம்பெறவுள்ளதாக மன்னார் பிரதேச சபையின் செயலாளர் சி.ம. யேசுநேசன் தெரிவித்தார்.

இதன்போது நாடாளுமன்ற உறுப்பினர்களும் திணைக்களங்களின் அதிகாரிகளும் கலந்து கொள்ளவுள்ளதாகவும் தெரிய வருகின்றது. (க-601)

# வவுனியாவில் பல கட்டுமானங்கள்

வவுனியா, ஏப்.25

வவுனியா மாவட்டத்தில் நீர்ப்பாசனம் மற்றும் நீர்வளங்கள் முகாமைத்துவ அமைச்சு பல கட்டுமான வேலைகளை மேற்கொள்ளவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரிவிலுள்ள கல்லாறு பிரதான வாய்க்கால் செப்பனிடப்படவுள்ளதுடன் பாதையும் அமைக்கப்படவுள்ளது.

வவுனியா நீர்ப்பாசனப் பொறியியலாளர் பிரிவிலுள்ள கல்லாறு பிரதான வாய்க்கால் செப்பனிடப்படவுள்ளதுடன் பாதையும் அமைக்கப்படவுள்ளது.

ஈரற் பெரியகுளம் இடது கரை பிரதான வாய்க்காலில் உள்ள ஐந்தாவது உப வாய்க்காலில் திருத்தவேலைகள் செய்யப்படவுள்ளன.

அத்துடன் இராசேந்திரன் குளத்தின் பாதையிலுள்ள பாலத்தின் திருத்த வேலைகளுடன் அணைக்கட்டும் பிரதான வாய்க்காலும் திருத்தம் செய்யப்படவுள்ளன. மேலும் கல்லாறு பிரதான வாய்க்காலில் கொங்கிறீற் இடப்பட்டு நிர்மாணம் செய்யப்படவுள்ளதுடன் ஈரற் பெரிய குளக்கட்டில் கருங்கற்களை அடுக்கிப் பாதுகாக்கும் வேலையும் மேற்கொள்ளப்படவுள்ளது. (க-121)

# கிராம அலுவலருக்கு அலுவலகம்

துணுக்காய், அம்பலப்பெருமாள்குளம் கிராமத்தில் கிராம அலுவலருக்கான அலுவலகம் திறந்து வைக்கப்படவுள்ளது.

அம்பலப்பெருமாள் குளம் கமக்கார அமைப்பு இந்த அலுவலகத்தினை 50 ஆயிரம் ரூபா செலவில் அமைத்து வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (க-410)

## பிரிவின் சோகம்...



மறைந்தது புன்னகை: முல்லைத்தீவு தேறாங்கண்டல் அ.த.க.பாடசாலையிலிருந்து வேறு பாடசாலைகளுக்கு மாற்றலாகிச் சென்ற ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வின்போது.

# அக்கராயன் பிரதேசத்துக்கு புதிய கிராம அலுவலர் நியமனம்

அக்காரயன், ஏப்.25

கிளிநொச்சி, அக்கராயன் குளத்துக்கு நிரந்த கிராம அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார்.

கரைச்சி பிரதேச செயலகத்தினால் கு.துஸ்யந்தன் என்பவர் நிரந்தர கிராம அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

2010 ஆம் ஆண்டு மே மாதம் 11 ஆம் திகதி அக்கராயன் கிராம அலுவலர் பிரிவில் மக்கள் முதல் தடவையாக மீள் குடியமர்த்தப்பட்டனர். இங்கு பணியில் இருந்த கிராம அலுவலர் கே. மகேந்திரன் பதவி உயர்வு பெற்றுச் சென்றவுடன் பதில் கிராம அலுவலராக கு.துஸ்யந்தன் பணியாற்றி வந்தார்.

இந்த நிலையில் தற்போது அக்காரயனுக்கு நிரந்தர கிராம அலுவராக கு.துஸ்யந்தன் நியமிக்கப்பட்டுள்ளார்.

அக்கராயன், ஸ்கந்தபுரம் பகுதிகளின் மீள் குடியமர்வு நடைபெற்றபோது முழுவீச்சுடன் செயற்பட்டு மக்களைக் குடியமரத்துவதில் துஸ்யந்தன் பெரும் பணியாற்றியவர் என்பதுடன் அக்கராயன் மகாவித்தியாலயத்தின் பழைய மாணவன் என்பதும் குறிப்பிடத்தக்கது. (க-410)

# 56 லட்சம் ரூபா கடனுதவி

அக்கராயன், ஏப்.25

துணுக்காய், அம்பலப் பெருமாள்குளம் கிராம மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காக மீள் எழுச்சித் திட்டத்தின்கீழ் 56 லட்சம் ரூபா கடனாக மக்களுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தக் கிராமத்தில் இதுவரை 96 குடும்பங்கள் மீள்குடியமர்ந்துள்ளன. இந்த மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்காகவே இந்தக் கடன் தொகை வழங்கப்பட்டுள்ளது. (க-410)

# கிளிநொச்சியில் வீதிப்புனரமைப்பு இல்லை

## குற்றஞ்சாட்டுகிறார் சிறீதரன் எம்.பி.

கிளிநொச்சி, ஏப்.25

யுத்தம் முடிவடைந்து 2 வருடங்களை எட்டியுள்ள போதும் கிளிநொச்சி மாவட்டத்தில் எந்தவொரு வீதியும் புனரமைக்கப்படவில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் சி. சிறீதரன் குற்றஞ்சாட்டினார்.

கடந்த செவ்வாய்க்கிழமை யாழ். செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் அவர் மேற்கண்ட குற்றச்சாட்டை முன்வைத்தார்.

இது தொடர்பாக அவர் அங்கு மேலும் தெரிவித்தவை வருமாறு.

யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடங்களை எட்டியுள்ளது. ஆனால் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வீதிகள் எதுவும் புனரமைக்கப்பட வில்லை.

பரந்தன் - பூநகரி, முறிகண்டி, முழங்காவில் உட்படப் பல வீதிகள் படுமோசமான முறையில் காணப்படுகின்றன. இதனால் அந்த வீதியால் பயணிப்போர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

குறிப்பாகக் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் கடமை புரிகின்ற ஆசிரியர்கள் போக்குவரத்துச் செய்வதில் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.


இதனால் அந்த ஆசிரியர்கள் கடமைக்கு நேர காலத்துடன் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக உரிய திணைக்களங்கள் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்றும் அவர் அந்தக் கூட்டத்தில் கேட்டுக்கொண்டார். (க-9-14)

# குளக்கட்டு புனரமைப்பு

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள வவுனிக்குளம் குளக்கட்டுப் புனரமைப்பு வேலைகள் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் முரண்பாடுகளால் பாதிப்புற்ற பிரதேசங்களுக்கான அவசர காலக் கருத்திட்டத்தின் கீழ் இக்கட்டுமான வேலைகள் நடைபெறவுள்ளன.

இக் கருத்திட்டத்தின் எந்திரியான க.சோ. சிவபாதம் இதற்கான கேள்வி கோரலைச் செய்துள்ளார். (க-121)

குறைந்தது ...ட்டம்...



நாட்டின் பல்வேறு இடங்களில் மழை பெய்து வருகின்றபோதும் கொத்மலை நீர்த்தேக்கத்தை அண்மித்த பகுதிகளில் குறைந்தளவு மழை விழ்ச்சி காணப்படுவதால், இந்த நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் குறைந்து வருகின்றது. (ச)

# இயங்காத மருத்துவமனைகளை விரைவில் ஆரம்பிக்க ஏற்பாடு

## அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவிப்பு

திருகோணமலை,ஏப்.25

நாடெங்கிலும் இயங்காதுள்ள 97 மருத்துவமனைகளை இயங்கச் செய்வதற்கான நடவடிக்கை விரைவில் எடுக்கப்படும். இந்த வைத்தியசாலைகளுக்கு எதிர்வரும் மே மாதம் மருத்துவர்கள் நியமிக்கப்படுவார்கள் என சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறி சேன தெரிவித்துள்ளார்.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள ஹோமரன்கடவெல பிராந்திய வைத்தியசாலையை, நேற்றுமுன்தினம் சனிக்கிழமை திறந்துவைத்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

45 மில்லியன் ரூபா செலவில் கட்டப்பட்ட இந்த வைத்தியசாலையில் ஆண்கள், பெண்களுக்கென தனியான இரண்டு விடுதிகள், பல்மருத்துவ சிகிச்சை நிலையம், ஆய்வுகூடங்கள் என்பன அமைக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் மருத்து உபகரணங்கள், கணினித் தொகுதி என்பவற்றை மருத்துவர் ஜெகத் விமலரத்தனவிடம் அமைச்சர் வழங்கியுள்ளார்.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் ரியர் அட்மிரல் மொஹான் விஜயவிக்கிரம, புத்த சாசன பிரதி அமைச்சர் எம்.கே.டி.எஸ்.குணவர்தன, கிழக்கு மாகாண சுகாதார அமைச்சர் எம்.எஸ்.சுபைர், திருகோணமலை மாவட்ட அரச அதிபர் ரஞ்சித் சில்வா உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ச)

# வெள்ளத்தால் குளங்கள் பாதிப்பு; புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்

திருகோணமலை,ஏப்.25

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட 2ஆயிரம் குளங்களைப் புனர்நிர்மாணம் செய்யும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் வேலைத்திட்டத்தின் கீழ், திருகோணமலை மாவட்டத்தில் 83 குளங்கள் புனர்நிர்மாணம் செய்யப்படவுள்ளன.

இதன் ஆரம்பகட்ட நடவடிக்கை கடந்த வெள்ளிக்கிழமை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷவினால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த நிலையில் கந்தளாய் பிரதேசத்திலுள்ள தம்பலகாமம், கல்மெட்டியாகுளத்தின் அபிவிருத்திப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்தநிழ்வில் அமைச்சர்களான சந்திரசேன, தினேஸ் குணவர்த்தன மற்றும் பிரதி அமைச்சர்களான எம்.கே.டீ.எச்.குணவர்த்தன, புஞ்சிநிலமே, மற்றும் கிழக்கு மாகாண அமைச்சர்களும், உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

இந்த மாவட்டத்திலுள்ள 83 குளங்களின் புனர்நிர்மாணப் பணிகள் யாவும் மழை காலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் முடிக்கப்படும் என அமைச்சர் பசில் ராஜபக்ஷ அதிகாரிகளுக்குத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# திருகோணமலையில் குழாய் மூலம் குடி தண்ணீர் விநியோகத் திட்டம்

திருகோணமலை,ஏப்.25

பிரெஞ்சு அரசின் நிதி உதவியுடன் நீர்விநியோக மற்றும் வடிகால்வாய் அபிவிருத்தி அமைச்சினால் திட்டமிடப்பட்டுள்ள குழாய் மூலமான குடிதண்ணீர் விநியோகத் திட்டத்தின் அங்குரார்ப் பண நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை காலை கந்தளாயில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ, நீர்விநியோகத்துறை அமைச்சர் தினேஷ் குணவர்த்தன, மாகாண ஆளுநர் மொஹான் விஜேவிக்ரம, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ச)


ஓராண்டு நினைவஞ்சலி

தோற்றம்:
27.05.1949
மறைவு:
06.05.2010



திருமதி சரலோகநாதன் செல்வராணி

திதி: அட்டமி (25.04.2011)





இனியவளே பெண்மையிற் பெரியவளே!
என் வாழ்க்கைத் தேரின் அச்சாணி நீயாக இருந்தாய்
என் பொருள் வளத்தைப் பேணிய புண்ணியவதியே
என்னை வல்லவனாக நல்லவனாக வாழவைத்தாய்
இன்று உனைப் பிரிந்து
ஆண்டு ஒன்று ஆனதே அம்மா?
புண்ணியவதியே நீயோ பறந்துவிட்டாய்
நானோ தவிக்கின்றேன்....
அம்மா! அம்மா! அன்புத் தெய்வமே!
எம்மை சீராட்டி தாலாட்டி பாலூட்டி வழிகாட்டி
மூவேந்தர் நாமாக வளர்த்து உயர்த்தினீர்களே!
ஆனால்....அம்மா எமைவிட்டுப் பிரிந்ததேனோ?
ஓராண்டு மட்டுமல்ல ஓராயிரம் ஆண்டுகள் சென்றாலும்
எமது உள்ளக் கோயிலில் இடம் உங்களுக்கே
அன்பான மகளே! அருமையான சகோதரியே!
உன்பிரிவு தாங்கமுடியாது துன்பக்கடலில் தவிக்கின்றோம்.
உமது ஆன்மா சாந்திபெற இறைவனை வேண்டுகிறோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கணவர், பிள்ளைகள், மருமகள்,
பேரன்,தாய், சகோதரிகள்,
உறவினர்கள்.

தியேட்டர் ஒழுங்கை,
இணுவில் கிழக்கு, இணுவில்.

(3174) (20,27,49)

# மக்களின் சுயமரியாதையைப் பேணுவது உள்ளூராட்சி உறுப்பினர்களின் கடமை

## இரா.சம்பந்தன் கோருகிறார்

திருகோணமலை,ஏப்.25

உள்ளூராட்சி அதிகார சபைக்குத் தெரிவானோர் மக்களின் கௌரவம், சுயமரியாதை ஆகிய வற்றைப் பேணிப் பாதுகாக்க வேண்டும். அத்துடன் முடிந்த அளவு சபையின் அதிகாரத்தைப் பயன்படுத்தி சம்பந்தப்பட்ட பிரதேசத்தை முழுமையாக அபிவிருத்திக்கு உட்படுத்த வேண்டும்.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

வெருகல் பிரதேச சபைக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தெரிவான உறுப்பினர்களுக்கும் ஏனையோருக்கும் அனுப்பி வைத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை இந்த சபையின் தவிசாளர், துணைத் தவிசாளர், உறுப்பினர்கள் ஆகியோரின் பதவிப்பிரமாண நிகழ்வு இடம்பெற்றது. இதையொட்டியே இரா.சம்பந்தன் இந்த வாழத்துச் செய்தியை விடுத்துள்ளார்.

வெருகல் பிரதேசத்தைப் பொறுத்தவரை யுத்தத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட பிரதேசமாகும்.



எனவே இந்தப் பிரதேசத்தின் வாழ்வாதாரம், கல்வி, சுகாதாரம் ஆகிய பல்வேறு துறைகளிலும் கவனம் செலுத்தி, மக்கள் நலன் பேணும் திட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றும் அவர் அதில் கேட்டுள்ளார். (ச)

## தொடரும் மழையால் போக்குவரத்துப் பாதிப்பு

ஊவா மாகாணத்தில் காற்றுடன் கூடிய மழை பெய்து வருவதனால் பல்வேறு வீதிகளில் போக்குவரத்து ஸ்தம்பிதமடைந்துள்ளதுடன் ஆங்காங்கு மண் சரிவுகளும் ஏற்பட்டுள்ளன.

பசறை- பதுளை வீதியில் இரண்டாம் கட்டையில் மண்சரிவு ஏற்பட்டுள்ளது.

வெலிமடை - அப்புத்தளை வீதியில் ஹின்னாரங்கொள்ளயிலும், பண்டாரவளை- பூனாகலை வீதியிலும் மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. அப்புத்தளை - பண்டாரவளை வீதியிலும், கஹகொல்ல எனும் இடத்திலும் மண்சரிவுகள் ஏற்பட்டுள்ளன. (ச)

## பற் துவாரங்களை அடைக்கும் இயந்திரம் பழுதடைந்தது

திருகோணமலை,ஏப்.25

கிண்ணியா தள வைத்தியசாலையில் பற்துவாரங்களை அடைக்கும் சகல வசதிகளையும் கொண்ட நவீன இயந்திரம் ஒன்று கடந்த 6 மாதங்களுக்கு மேலாகப் பழுதடைந்த நிலையில் செயலிழந்து காணப்படுகின்றது.

இதனால் ஆயிரக் கணக்கான மக்கள் நாளாந்தம் இந்த வைத்தியசாலைக்கு வந்து திரும்பிச் செல்கின்றனர்.

இது தொடர்பாக மாவட்ட வைத்திய அதிகாரி ஏ.எச்.எம். சமீமிடம் கேட்டபோது, இந்த விடயம் உரிய அதிகாரிகளின் கவனத்துக்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார். (ச)

## தவிசாளர் நிதி உதவி


அம்பாறை,ஏப்.25

அட்டாளைச்சேனை, சோபர் விளையாட்டுக் கழகக்கத்தின் அபிவிருத்திக்காக தனது சொந்த நிதியிலிருந்து அட்டாளைச்சேனை பிரதேச சபைத் தவிசாளர் ஏ.எல்.எம். நசீர் ஒரு தொகைப் பணத்தை அன்பளிப்பாக வழங்கியுள்ளார்.

இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை அட்டாளைச்சேனைப் பிரதேச சபை அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்த நிதியை தவிசாளரிடமிருந்து சோபர் விளையாட் டுக் கழகத்தின் உப தலைவர் ஏ.எஸ்.எம். உவைஸ் பெற்றுக் கொண்டார். (ச)

## மக்களுக்கான சேவை....



அக்கரைப்பற்று பொலிஸ் நிலையத்தின் மக்கள் தொடர்பாடல் பிரிவு ஏற்பாடு செய்திருந்த பொலிஸ் நடமாடும் சேவை ஒலுவில் அல் ஹம்றா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை நடைபெற்றது. இந்த நிகழ்வில் அதிகளவு மக்கள் கலந்துகொண்டுள்ளனர்.

## அப்புத்தளை மதுபான நிலையத்தில் திருட்டு

அப்புத்தளை நகரின் மத்தியில் அமைந்துள்ள மது விற்பனை நிலையம் ஒன்று உடைக்கப்பட்டு அதிலிருந்த பெருந் தொகையான மதுபானப் போத்தல்களும், பணமும் திருடப்பட்டுள்ளன என அப்புத்தளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

கடையை உடைத்து உட்புகுத்துள்ள இனந்தெரியாதவர்கள் 11 ஆயிரத்து 720 ரூபா பெறுமதியான மதுப் போத்தல்களையும், இரண்டு லட்சத்து 89 ஆயிரம் ரூபா ரொக்கப்பணத்தையும் திருடிச் சென்றுள்ளனர் என மது விற்பனை நிலைய உரிமையாளரால் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பண்டாரவளை பொலிஸ் உதவி அத்தியட்சகர் புத்திக பல்லேகம உள்ளிட்ட பொலிஸ் குழு விரிவான விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றது.(ச)

# மேல் கொத்மலை நீர்மின் நிலையத்தின் ஊடாக வருட இறுதியில் 150 மெகாவோட் மின்சாரம்

நுவரெலியா,ஏப்.25

மேல்கொத்மலை நீர்மின் உற்பத்தி நிலையத்தின் ஊடாக இந்த வருட இறுதியில் 150 மெகாவோட் மின்சாரம் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்படுமென மின்சக்தி எரிசக்தி அமைச்சு கூறியுள்ளது.

மேல்கொத்மலை நீர்மின் நிலைய நிர்மாணப்பணிகள் 81 சதவீதம் நிறைவடைந்துள்ளன. மின்னுற்பத்திக்கான 75 மெகாவோட் இயந்திரங்களைப் பொருத்தும் பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

2006 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட மேல்கொத்மலை நீர்மின் உற்பத்தித் திட்டம் தற்போது இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது. இதனூடாக வருடாந்தம் 409 மில்லியன் அலகுகள் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும்.

இந்தத் திட்டத்துக்கு ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு வங்கி 33 ஆயிரத்து 265 மில்லியன் ரூபாவைக் கடனுதவியாக வழங்கியுள்ளது. இது தவிர மின்சாரசபையும் 800 மில்லியனை முதலீடு செய்துள்ளது.

மேல்கொத்மலை திட்ட நிர்மாணப் பணிகள் 94 சதவீதம் நிறைவடைந்துள்ளன. இரண்டாம் கட்டத்துக்கான நிர்மாணப் பணிகள் 82 சதவீதம் பூர்த்தியடைந்துள்ளன. மின் உற்பத்தி இயந்திரங்களைப் பொருத்தும் பணி 70 சதவீதம் நிறைவடைந்துள்ளது என மேல் கொத்மலைத் திட்ட உயர் அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (ச)

## மாணிக்கக்கல் அகழ்வுக்கு கனரக வாகனங்கள் பாவிக்கத் தடை

இரத்தினபுரி மாவட்டத்தில் மாணிக்கக் கல் அகழ்வு வேலைகளுக்கு பெக்கோ மற்றும் சக்கர் இயந்திரங்களைப் பாவிப்பதற்கு உடனடியாகத் தடைவிதிக்கப்படவுள்ளது. மாவட்ட இணைப்புக் குழுக் கூட்டத்தில் இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இந்தத் தடை சம்பந்தமான சுற்று நிருபத்தை துரிதமாக அனுப்புமாறும், அதுவரை தடையை அமுலில் வைக்குமாறும் இணைப்புக்குழுவின் தலைவரும், அரச பரிபாலன மற்றும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சருமான டபிள்யூ.டீ.ஜே.செனவிரத்ன அரச இரத்தினக்கல் ஆபரண அதிகாரசபைக்கு உத்தரவிட்டுள்ளார்.

இந்த இயந்திரங்களைப் பாவிப்பதற்கு அதிகாரசபை இதுவரை வழங்கியுள்ள 197 அனுமதிப் பத்திரங்களை உடனடியாக இரத்துச் செய்யுமாறு அமைச்சர் பணித்துள்ளார்.

இந்தத் தடையுத்தரவுக்கு தமது பூரண ஆதரவை வழங்குவதாக எதிர்கட்சி அங்கத்தவர்களான ஏ.ஏ.விஜயதுங்கவும், சிரிபால கிரியெல்லையும் தெரிவித்தனர். இயந்திரங்களை அகழ்வு வேலைகளுக்குப் பயன்படுத்துவதால் அதனை அண்மித்த பிரதேசத்தில் உள்ள வீடுகளின் சுவர்களில் வெடிப்புகள் ஏற்படுவதாலேயே இந்தத் தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

## பிரதான வீதி சேதம்; பயணிகள் சிரமம்

அம்பாறை,ஏப்.25

துரைவந்தியமேடு கிராமத்தின் பிரதான வீதி சேதமடைந்து காணப்படுவதால், அந்த வீதியால் பயணிக்கும் மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருகின்றனர். கல்முனை மாநகரசபைக் குட்பட்ட துரைவந்தியமேடு கிராமம் கல்முனை - மட்டக்களப்பு பிரதான வீதியிலிருந்து 4 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்துள்ளது.

இந்தக் கிராமத்துக்கு சென்று வருவதற்கு வடக்குப் புறமாக ஒரு வீதியும், தெற்குப் புறமாக ஒரு வீதியுமாக இரண்டு பிரதான வீதிகளே உள்ளன. இந்த இரு பிரதான வீதிகளில் துறைநீலாவணையிலிருந்து துரைவந்தியமேட்டுக்குச் செல்லும் பிரதான



வீதி மிகவும் சேதமடைந்து காணப்படுகின்றது.

குன்றும் குழியுமாகக் காணப்பட்ட இந்த வீதி, அண்மையில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால் மேலும் பாதிக்கப்பட்டு காணப்படுவதாக மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியை உடனடியாகப் புனரமைத்துத் தருமாறு அந்தப் பிரதேச மக்கள் கோரிக்கை விடுகின்றனர். (ச)

# தொழிற்சங்க கூட்டமைப்பின் மேதின நிகழ்வு; நவசமசமாஜக்கட்சி பூரண ஒத்துழைப்பு

## ஏனையோருக்கும் அழைப்பு விடுப்பு

கொழும்பு, ஏப்.25

தொழிற்சங்க கூட்டமைப்பு இம்முறை மே தினத்தை கொழும்பு 'ஹைபார்க்'திடலில் நடத்தவுள்ளது.

தொழிற்சங்கங்கள் இணைந்து மேற்கொள்ளும் இந்த முயற்சிக்கு நவசமசமாஜக் கட்சி பூரண ஆதரவை வழங்கவுள்ளது. எனவே, இந்த மேதினத்தை வெற்றி பெறச் செய்யும் பொருட்டு அனைத்துத் தொழிலாளர்களும் தொழிற்சங்க கூட்டமைப்புக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும்- என்று நவசமசமாஜக் கட்சி வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது தொடர்பாக அக்கட்சி அனுப்பியுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பவை வருமாறு:

இன்றைய மஹிந்த ராஜபக்ஷவின் சர்வாதிகார - பேரினவாத ஆட்சிக்கு எதிராக சகல தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து மேற்கொள்ளும் மேதின ஏற்பாடு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

தொழிலாளர் வர்க்கத்திற்கு எதிராக இந்த அரசு சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளை அமுல்படுத்துவதற்கு எதிராகவும்,பேரினவாத நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்து வருவதைக் கண்டித்தும், தனியார்துறை ஊழியர்களுக்கு ஓய்வூதியம் என்ற போர்வையில் தொழிலாளர்களை மோசடி செய்யும் முயற்சிக்கும் எதிராகப் போராடவும் முன்வருமாறு அனைத்து உழைக்கும் மக்களுக்கும் நவசமசமாஜக் கட்சி கோரிக்கை விடுக்கின்றது.

சர்வதேச நாணய நிதியத்தின் பரிந்துரைகளால் தொழிலாளர் வர்க்கம் ஏற்கனவே அதிக நெருக்கடிகளுக்கு முகம்கொடுத்து வருகின்றது.

விலைவாசி உயர்வும், ஜனநாயக விரோதச் செயற்பாடும் உச்ச நிலையில் இருக்கும் இந்தக் காலப் பகுதியில் உழைக்கும் மக்கள் ஒன்றிணைந்து ஓரணியில் நின்று மே தினத்தை நடத்துவதற்கு முன்வந்துள்ளமை நம்பிக்கை வலுக்கும் நிகழ்வாக உள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# வாகன விபத்தில் இருவர் படுகாயம்

மட்டக்களப்பு,ஏப்.25

மட்டக்களப்பு, தேத்தாத்தீவில் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் படுகாயமடைந்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளும் முச்சக்கர வண்டியும் ஒன்றுடனொன்று மோதிக்கொண்டதாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

படுகாயமடைந்த இருவரும் களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் தொடர்பில் களுவாஞ்சிக்குடிப் பொலிஸார் விசாரணைகளை நடத்தி வருகின்றனர். (ச)

## வெள்ளத்தில் மூழ்கும் வீதி.....



பாதிப்பு: நேற்றுமுன்தினம் சனிக்கிழமை பெய்த பலத்த மழையினால் புத்தளம்-மன்னார் வீதி வெள்ளத்தில் மூழ்கிக் காணப்படுகின்றது. (ச)

# காலி- தெற்கு களுத்துறை ரயில் சேவை; தற்காலிகமாக நிறுத்தத் தீர்மானம்

கொழும்பு, ஏப்.25

கரையோர ரயில்வே வீதியின் திருத்தப் பணிகளை மேற்கொள்வதற்காக காலியிலிருந்து தெற்கு களுத்துறை வரையான ரயில் சேவைகளை தற்காலிகமாக நிறுத்த ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதன்படி, எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம்திகதி முதல் 7 மாத காலம் வரை இந்தத் திருத்தப் பணிகள் இடம்பெறும் என திணைக்களத்தின் திட்டமிடல் பிரிவின் அத்தியட்சகர் விஜய சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தக் கால கட்டத்தில் ரயில் சேவையுடன் இணைந்த பஸ் சேவையொன்றை ஆரம்பிக்க எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.கரையோர ரயில்வே வீதி திருத்தப் பணிகளின் முதற்கட்டப் பணிகள் கடந்த சில தினங்களுக்கு முன்னர் காலி முதல் மாத்தறை வரை மேற்கொள்ளப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ச)

# விபத்தைப் பார்க்கச் சென்றவர் மாரடைப்பால் உயிரிழப்பு

கொழும்பு, ஏப்.25

பசறை - மடுல்சீமை பிரதேசத்தில் பள்ளத்தில் புரண்டு விபத்துக்குள்ளான பஸ்ஸைப் பார்க்கச் சென்ற குடும்பஸ்தர் ஒருவர் காயமுற்றவர்களைக் கண்டு மனவேதனையடைந்து அந்த இடத்திலேயே மாரடைப்பால் மரணமாகியுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர்.

மரணமானவர் தனது மனைவியின் பெற்றோர் வீட்டுக்கு வந்திருந்தார். அந்தச் சமயம் அங்கு பஸ் புரண்டதைக் கேள்விப்பட்டு அந்த இடத்துக்கு விரைந்து சென்றார்.

காயமுற்றவர்கள் வேதனைப்பட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்து கவலைப்பட்டு அந்த இடத்திலேயே வீழ்ந்து மரணமானார்.

இந்த பஸ் பசறை - பிட்டமாறுவ வீதியில் குருவிகொல்ல பிரதேசத்தில் 120 அடி பள்ளத்தில் பாய்ந்து விபத்துக்குள்ளானதில் அதன் சாரதி ஸ்தலத்திலேயே உயிரிழந்தார். விபத்தில் காயமுற்ற 38 பேர் மெட்டிகஹாதென்ன வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு பின் ஆபத்தான நிலையிலிருந்த அறுவர் பதுளை வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர்.

மடுல்சீமைப் பொலிஸ் பொறுப்பதிகாரி சந்தன ஜயதிலகவின் தலைமையில் மேலதிக விசாரனைகள் நடைபெற்று வருகின்றன. (ச)

# அதிகரித்தது வெளிநாட்டுக் கடன்கள்; மத்திய வங்கியின் அறிக்கை தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.25

அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கடன்களுக்கான வட்டித் தொகையாக மட்டும் கடந்த வருடம் 35, 260 கோடி ரூபாவை செலவிட நேர்ந்துள்ளதாக அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது 13.9 வீத அதிகரித்த வட்டித் தொகை அதிகரித்துள்ளதாக மத்திய வங்கியின் அறிக்கைகள் கூறுகின்றன.

கடந்த வருட இறுதி வரை அரசு பெற்றுக்கொண்டுள்ள கடன்களில் இதுவரை திருப்பிச் செலுத்தாத தொகையாக ரூபா 4,59, 000 கோடி எனவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மொத்த தேசிய உற்பத்தியில் அது 81.6 வீதமாகும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் உட்கட்டமைப்பு உள்ளிட்ட அபிவிருத்திப் பணிகளுக்கே அரசு பெருமளவான தொகையைக் கடனாகப் பெற்றுக் கொள்கின்ற போதிலும், அந்த நிதியின் அரைவாசிப் பங்கு கூட அந்தப்பிரதேசங்களில் அபிவிருத்திப் பணிகளுக்காக செலவிடப்படுவதில்லை என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இன்றைய அமைதியான நிலவரம் காரணமாக மொத்த தேசிய உற்பத்திக்கான பங்களிப்பில் முன்னைய காலங்களை விடவும் அதிகூடியளவிலான பங்களிப்பு வழங்கப்பட்டு வருவதாகவும் மத்திய வங்கி அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது. (ச)

# பொலிஸ் விசேட செயலணியின் உயர் அதிகாரிகள் இடமாற்றம்

கொழும்பு, ஏப்.25

பொலிஸ் விசேட செயலணியின் முப்பது உயரதிகாரிகள் அடுத்த வாரத்தில் இடமாற்றம் செய்யப்படுவர் என பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் அமைந்துள்ள பொலிஸ் விசேட செயலணியின் தலைமையகம் உட்பட நாட்டின் பல்வேறு பாகங்களிலும் இயங்கும் எஸ்.ரீ.எவ். முகாம்களில் பணியாற்றும் முப்பது உயரதிகாரிகள் இவ்வாறு இடமாற்றம் செய்யப்படுவர்.

பொலிஸ் அத்தியட்சகர்களும் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர்களுமே இந்த இடமாற்றத்துக்கு உள்ளாவார்கள் எனப் பொலிஸ் தலைமையத்தின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

பொலிஸ் மா அதிபரால் எடுக்கப்பட்ட இந்தத் தீர்மானத்தின் படி நாடெங்குமுள்ள முகாம்களில் பணிபுரிபவர்கள் வேறு முகாம்களுக்கு இடமாற்றம் செய்யப்படுவர்.

நாடெங்குமுள்ள பொலிஸ் நிலையங்களில் இயங்கும் விசேட செயலணியின் பொறுப்பதிகாரிகளும் விரைவில் இடமாற்றம் செய்யப்படுவர் என அந்த அதிகாரி மேலும் தெரிவித்துள்ளார். (ச-5)

# கிரெடிட் கார்ட் மோசடி; இரு இலங்கையர் கைது

கொழும்பு, ஏப்.25

கிரெடிட் கார்ட் மோசடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் பேரில் இரு இலங்கையர் உட்பட மூவர் இந்தியப் பொலிசாரால் கைது செய்யப்பட்டனர்.

போலி அட்டைகளைப் பயன்படுத்தி இவர்கள் ஒரு லட்சத்து 60 ஆயிரம் இந்திய ரூபாவை மோசடி செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஹைதரபாத் நகரத்தில் உள்ள எக்சிஸ் வங்கியில் வினில் சந்திரா என்பவரின் கணக்கில் இருந்து இவர்கள் இரண்டு மாத காலமாக தானியங்கி இயந்திரங்கள் மூலம் இந்தப் பணத்தைப் பெற்றுள்ளாரென விசாரணைகளின் போது தெரிவந்துள்ளது.

கணக்கு வைத்திருப்பவர் தனது கணக்கின் மிகுதி கணிசமாகக் குறைவடைவதாகப் பொலிஸாரிடம் தெரிவித்த முறைப்பாட்டை அடுத்தே இந்த மூவரும் கைதாகியுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளை இந்தியப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர் என தெரிவிக்கப் படுகின்றது. (ச-5)



தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் பொறுப்பதிகாரியாக இருந்து உயர் கல்வி கற்கச் செல்லவுள்ள வைத்திய கலாநிதி சி.விநோதன் வைத்தியசாலை உழியர்களால் பாராட்டப்பட்டார். இந்த நிகழ்வில் நினைவுப் பரிசில் வழங்கப்படுகின்றது. (86)

# மாணவரின் திறனை விருத்தியடையச் செய்யும் இணைப்பாட விதானச் செயற்பாடுகள்

யாழ்ப்பாணம், ஏப்.25

இணைப்பாட விதானச் செயற்பாடுகள் மாணவர்களின் திறன்களை மேலதிகமாக விருத்தியடையச் செய்வதற்கு மூல காரணங்கள்ளாக அமைகின்றன.

இதற்கு முன்னுதாரணமாக தகவல் தொடர்பாடல் சாதனங்களின் பிரயோக முறைமை அடங்கும்.

இவ்வாறு தெரிவித்தார் ''லக்பாஸ்'' நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரி பேராசிரியர் சனத்.

யாழ்.வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் அண்மையில் இடம்பெற்ற யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான இணையத்தள வடிவமைப்புப் போட்டி - 2010 இல் வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசளிப்பு விழா நிகழ்வில் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும்போது:

மாணவர்கள் மத்தியில் இணையத்தளம் கட்டாய தேவையாகும். காலத்தின் தேவையாகவும் உள்ளது.

இதனால்தான் பாடசாலைகள் மட்டத்தில் இணையத்தள வடிவமைப்புப் போட்டியை உள்ளூர் மயமாக்கப்பட்ட செயல்களுக்கான சிறப்புமையம் மற்றும் இலங்கை ஆள் கள மையம் (லக்பாஸ்) ஆகியன நடத்தி வருகின்றன.

பாடசாலை மட்டத்தில் நின்றுவிடாது கோட்டம், வலயம், மாவட்டம், தேசிய மட்டம் ரீதியாக மாணவர்களைப் பங்குபெறச் செய்து அவர்களது திறன்களை மேலதிகமாக விருத்தி செய்ய வேண்டும் என்பதே நோக்கமாகும்.

இதற்கு மாணவர்களும் ஆசிரியர்களும் இணைந்து ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும்.

இணையத்தள வடிவமைப்பில் புதுவித சாதனைகளைப் படைக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார். (ம-313)

# சமூகத் தொண்டர்களாலேயே உயர்ந்த நிலையைப் பெறமுடியும்

யாழ்ப்பாணம்,ஏப்.25

இறந்த பின்னரும் சமூகத்தின் மத்தியில் உயர்ந்த நிலையைப் பெறக்கூடிய தகுதி சமூகத் தொண்டாற்றியவர்களையே சாரும்.

இவ்வாறு சிறப்பான தொண்டுகளை வழங்கியவர்கள் மறைந்தாலும் மனதிலும் சமூகத்தின் மத்தியில் நிலைபெற்ற நன்மதிப்பைப் பெற்றவர்கள் ஆவர்.

இவ்வாறு தெரிவித்தார் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் முன்னாள் அதிபர் கே.ஞானகாந்தன்.

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையில் அண்மையில் பாடசாலையின் முன்னாள் அதிபர் அமரர் செ.கனகரத்தினத்தின் உருவச்சிலைத் திறப்பு விழா இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்புரை வழங்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றும் போது:

வாழ்நாளில் சமூகத் தொண்டுகளை வழங்கும் ஒரு சிலர் மட்டுமே சிறந்த நன்மதிப்பைப் பெறக்கூடியவர்களாக உள்ளனர்.

இதனால் அவர் தன் குடும்பத்திலும் உயர்வு நிலையைப் பெற்றவர் ஆகின்றார்.

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் வளர்ச்சிப் பாதையில் தன்னையும் அர்ப்பணித்த பெருமை கனகரத்தினத்தைச் சாரும்.

இந்தப் பாடசாலையில் மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சின்னத்தை ஆக்கித் தந்த பெருமை இவருக்கே உரியது.

அத்துடன் ஓலைக் குடிசைகளாக இருந்த பாடசாலையை மாடிக் கட்டடங்களாக அமைப்பதற்கு இவர் போன்ற முன்னாள் அதிபர்களின் சேவையும் முக்கிய காரணமாகும்.

முன்னாள் அதிபர் செ.கனகரத்தினத்தின் குடும்பத்தினரே யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் வளர்ச்சிக்காகத் தம்மை அர்ப்பணித்துச் சேவையை வழங்கி வருகின்றமை பெருமைக்குரிய விடயமாகும்.- என்றார். (ம-313)

# சமுர்த்தித் திட்டங்களில் இணைந்துள்ள மக்கள் அதிக பயனைப் பெறுகின்றனர்

காரைநகர்,ஏப்.25

சமுர்த்தித் திட்டங்களில் இணைந்துள்ள மக்கள் அந்தத் திட்டத்தின் ஊடாக நிறைந்த பயனைப் பெற்று வருகின்றனர்.

இந்தத் திட்டம் மக்களிடையே சுபீட்சத்தை ஏற்படுத்தி வருகின்றது.

மேற்கண்டவாறு தெரிவித்தார் யாழ்.மாவட்ட சமுர்த்தி இணைப்பாளர் ஏ.ரகுநாதன்.

காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவு சமுர்த்தி வங்கியால் புத்தாண்டு விழா காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மற்றும் வித்தியாலய மைதானத்தில் சமுர்த்தி வங்கி முகாமையாளர் ரி.சசிகுமார் தலைமையில் நடைபெற்றது.

அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றுகையில்:

சில ஆயிரம் ரூபாக்களுடன் ஆரம்பிக்கப்பட்ட சமுர்த்தி வங்கி இன்று பல மில்லியன் ரூபாக்களை மக்களுக்குக் கடனாக வழங்கியுள்ளது.

காரைநகர் சமுர்த்தி வங்கி இருநூறு லட்சம் ரூபாவை மக்களிடம் கடனாக வழங்கியுள்ளது.

சமுர்த்தித் திட்ட நன்மைகள் இன்று இலைமறை காயாகவே காணப்படுகின்றன. சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எவ்வளவு தூரம் கிராம மட்டத்துக்குச் சென்று மக்களுடன் இறங்கி வேலை செய்கிறார்கள் என்பதனை இத்தனை நூற்றுக்கணக்கான மக்கள் இந்த நிகழ்வுகளில் உற்சாகத்துடன் கலந்து கொண்டு போட்டிகளில் பங்குபற்றியதன் ஊடாக அறிய முடிகின்றது.

வறுமைக் கோட்டின் கீழ் உள்ள ஊர் மக்கள் சமுர்த்தித் திட்டத்தின் ஊடாக நிறைந்த பயனை நுகர்ந்து வருகின்றார்கள்.

உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின் ஊடாக கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தோறும் வருடாந்தம் பல லட்சம் ரூபா செலவில் அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கூட்டுக்குடும்பம் போன்று செயற்படுவதன் மூலம் வாழ்வில் வெற்றியை நோக்கிச் செல்ல முடியும்.

இங்குள்ள மக்களிடமும் நிறுவனங்களிடமும் இவ்வாறான நிலையைக் காண முடிகின்றது. - என்றார். (ம-250)

## பட்டம் வழங்கி கௌரவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.25



அகில இலங்கை ஆயுள் வேத சம்மேளனம் வைத்திய கலாநிதி திருமதி சிவஞானமணி பஞ்சராஜாவுக்கு 'வைத்திய சிரோன்மணி பண்டித' என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது. சம்மேளனத்தின் 80 ஆவது நிறைவு நிகழ்வில் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் சாலிக திஸ்ஸ நாயக்கா இந்தக் கௌரவத்தை வழங்கினார்.

யாழ்.பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவத்துறையில் கடந்த 24 வருடங்களாகக் கடமையாற்றும் வைத்தியகலாநிதி திருமதி சிவஞானமணி பஞ்சராஜா தற்போது சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் 1 இல் பதவி வகிக்கிறார். 2004 தொடக்கம் 2010 வரை சித்த மருத்துவத்துறையின் அபிவிருத்திக்குப் பெரும் பங்காற்றியவர். 2007 ஆம் ஆண்டு சுதேச வைத்தியத்துறை அமைச்சர் கௌரவ திஸ்ஸ கரலியவத்தவினால் ஆயுள் வேத வைத்தியசபையின் அங்கத்தவராக நியமிக்கப்பட்டார்.

கைதடி சித்த போதனா வைத்தியசாலையில் இயங்கும் அறுவை மருத்துவ சிகிச்சைப் பிரிவில் நிபுணராகக் கடமையாற்றி வருகின்றார். (ம)

## நிர்வாகிகள் தெரிவு

யாழ்.செயலக நலன்புரிச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

பிரதீபன் தலைமையில் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். இதில் இந்த வருடத்துக்கான புதிய நிர்வாகிகள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் - ய.பரந்தாமன், செயலாளர் - ப.றமேஸ், பொருளாளர் - சா.சுதர்சன், உபதலைவர் - ஆ.இரகுநாதன், உபசெயலாளர் - திருமதி ஆர்.சி.மத்தியூஸ், உப பொருளாளர் - திருமதி க.சிறிறஞ்சினி, நலன்புரி செயலாளர் - கி.கருணாகரன், விளையாட்டுச் செயலாளர் - திருமதி ஏ.ரூபசிங்கம்.

நிர்வாகசபை உறுப்பினர்கள்:- சி.மகாலிங்கம், சி.மதனரூபன், திருமதி ஞா.சிவஜெயந்தி, வி.எம்.அமலராணி, எஸ்.[illegible]கசுதன், கணக்காய்வாளர் - சு.சண்முகரத்தினம். (ம-45)

## பருத்தித்துறை நகரசபைக்கு புதிய செயலாளர்

வடமராட்சி,ஏப்.25

பருத்தித்துறை நகரசபையின் புதிய செயலாளராக, கரவெட்டிப் பிரதேச சபையில் பிரதம முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றிய ந.செவ்வேள் பொறுப்பேற்றுள்ளார்.

இந்தச் சபையின் செயலாளராக முன்னர் கடமையாற்றிய அ.அ.நடராசா இளைப்பாறிச் சென்றதைத் தொடர்ந்து இந்தப் பதவிக்கு அவர் நியமிக்கப்பட்டுள்ளார். (ம-236)

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
விட்டுக்குத் தேவையான பொருள் ஒன்றை வாங்குவீர்கள். சிலரை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடியாமல், அவற்றை நீங்களே மீண்டும் செய்யலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். உங்களுக்குப் பிடிக்காத ஒருவரை நீங்கள் செல்லும் இடத்தில் சந்திக்கலாம். வயிறு, வாயு உபாதைகளுக்கு ஆளாகலாம்.

**இடபம்:**
வீட்டுக்குத் தேவையான பொருள் ஒன்றை வாங்குவீர்கள். சிலரை நம்பி ஒப்படைத்த வேலைகள் முடியாமல், அவற்றை நீங்களே மீண்டும் செய்யலாம். நண்பர்களுடன் கொண்டாட்டங்களில் பங்கேற்கலாம். உங்களுக்குப் பிடிக்காத ஒருவரை நீங்கள் செல்லும் இடத்தில் சந்திக்கலாம். வயிறு, வாயு உபாதைகளுக்கு ஆளாகலாம்.

**மிதுனம்:**
எதிலும் முன்யோசனையுடன் செயற்பட்டு சாதனை படைக்கும் நாள். வெளியூர் பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். ஓய்வு எடுக்க நினைத்தாலும் முடியாத அளவுக்கு ஏதாவது வேலைகளைச் செய்ய வேண்டிய நிலைமை உருவாகும். தந்தை வழியில் சில உதவிகள் கிடைக்கலாம். ஆடை, ஆபரணங்கள் வாங்கலாம்.

**கடகம்:**
நீண்ட நாள்களாக உங்களுடன் பேசாத உறவினர் ஒருவர் உங்களை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசலாம். வீட்டில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். அதிக விலை கொடுத்து வாங்க நினைத்த பொருள் ஒன்றை குறைந்த விலைக்கு வாங்குவீர்கள்.

**சிங்கம்:**
சிலர் உங்களிடம் பண உதவி கேட்கலாம். சிலர் சொல்லும் வேலைகளைச் செய்ய மறப்பதன் மூலம் அதிருப்திக்கு ஆளாகலாம். உங்களுடன் பேச விரும்பும் ஒருவரிடம் நீங்கள் பேசாமல் தவிர்க்கலாம். மற்றவர்கள் பெருமையாக நினைக்க வேண்டும் என்பதற்காக சில காரியங்களைச் செய்வீர்கள்.

**கன்னி:**
கோபத்தைத் தவிர்த்து பொறுமையாகச் செயற்பட வேண்டும். விலகிச்சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும் நாள். நீண்ட தூர பயணங்கள் செல்லலாம். திட்டமிட்ட காரியங்களில் திடீரென மாற்றம் செய்யலாம். உங்களைப் பயன்படுத்தி சிலர் காரியம் சாதிக்கலாம். நீண்ட நேரம் உடற்பயிற்சிகளை மேற்கொள்ளலாம். கனவுத் தொல்லையுண்டு.

**துலாம்:**
பிள்ளைகள் விரும்பிய பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். நீங்கள் தேடிச்சென்று பார்க்க நினைத்த ஒருவர் உங்களைத் தேடி வரலாம். மறக்க முடியாத புதிய அனுபவங்களைப் பெறுவீர்கள். சிலருடன் சேர்ந்து வெளியிடங்களுக்குச் செல்லலாம். விருப்பமான உணவு வகைகளைச் சாப்பிடுவதில் நாட்டம் செல்லும். மாமன், மைத்துனர் சந்திப்பு நிகழும்.

**விருச்சிகம்:**
எதிலும் முன்யோசனையுடன் செயற்பட வேண்டிய நாள். முடிந்த பிரச்சினை ஒன்று மீண்டும் தலை தூக்கி குழப்பத்தைக் கொடுக்கலாம். எதிர்பாராத விதமாக உறவினர் ஒருவர் வீட்டிற்கு வரலாம். சில பொருள்களை வாங்கி விட்டு பணப்பற்றாக்குறை காரணமாக கடன் சொல்லலாம். வழக்கமான வேலை ஒன்றை செய்ய முடியாமல் தடை ஏற்படலாம்.

**தனுசு:**
கலகலப்பான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். உங்களுக்கு விரோதமாகச் செயற்படுவோரை அறிந்து விலகிக் கொள்வீர்கள். கடந்த காலத்தில் உதவி செய்த ஒருவரை நினைத்துப் பார்ப்பீர்கள். உங்களிடம் வாக்குக் கொடுத்தவர்கள் அதைக் காப்பாற்றி பெருமை சேர்ப்பர்.

**மகரம்:**
பல நாள் குழப்பம் ஒன்று முடிவிற்கு வரும். சில விடயங்களில் நினைத்தது ஒன்றாகவும் நடப்பது ஒன்றாகவும் அமையும். உங்களின் குறைகளை மற்றவர்கள் சுட்டிக்காட்டலாம். சிலரை சந்திக்க முற்பட்டு அது முடியாமல் போகலாம். நந்துப் பொருள்கள் வாங்கக் கணிசமான பணத்தைச் செலவு செய்யலாம்.

**கும்பம்:**
தாமதித்த வேலைகளை சுறுசுறுப்பாகச் செய்து முடிப்பீர்கள். உறவினர்கள் வழியில் சந்தோஷம் தரும் செய்தியைக் கேட்கலாம். நீண்ட நாள்களாக சந்திக்காத நண்பர் ஒருவரை திடீரென சந்திக்கலாம். வழக்கத்திற்கு மாறாக கூடுதல் நேரம் தூங்குவீர்கள். சிலரிடம் கனிவாகப் பேசி உங்களுக்கு வேண்டியதைப் பெறுவீர்கள். உறவுகள் வலுக்கும் நாள்.

**மீனம்:**
தொடங்கிய காரியங்கள் தடையின்றி துரிதமாக நடக்கும் நாள். குடும்ப பெரியவர்களின் ஆலோசனை கேட்டு நடக்க முற்படுவீர்கள். கொடுத்த வாக்குறுதியை காப்பாற்றுவீர்கள். தம்பதியர் இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். நீண்ட நாள்களாக மனதில் போட்டு வைத்திருந்த ஆசை ஒன்றை வெளிப்படுத்துவீர்கள். சிலர் மூலம் பணவரவுகளைப் பெறலாம்.

# பொறிக்குள் சிக்கவைத்தது யார்.....?

**கொழும்பில் இருந்து வெளியாகும் ஆங்கில ஊடகமான டெய்லிமிரரில் அதன் பத்தி எழுத்தாளர் உபுல் ஜோசப் பெர்ணாண்டா எழுதிய கட்டுரையின் தமிழாக்கம்.**

ஐ.நாவின் போர்க்குற்ற வல்லுநர்கள் குழு தொடர்பாக இலங்கை அரசு பான் கீ மூனை பொறியில் சிக்க வைத்து விட்டது என்ற கருத்தைக் குறிப்பிட்ட சில வெளிநாட்டு ஊடகங்கள் கொண்டிருக்கின்றன.

அனைத்துலக அரசியலைத் திறனு டன் கையாளும் இலங்கை அரசு தான் பணிக்கு அமர்த்தியிருக்கும் மக்கள் உறவு நிறுவனங்கள் ஊடாக பான் கீ மூனை வெற்றி கண்டிருக்கிறது என்று இந்த ஊடகங்கள் வெகுவாக நம்புகின்றன.

ஐ.நாவின் செயலாளர் நாயகம் பான் கீ மூனுக்கும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் சுமூகமான தொரு நெருங்கிய உறவு நிலவிவந்தி ருக்கிறது.

இவர்கள் இருவருக்கும் இடையில் நிலவிய நெருங்கிய உறவுதான் வல்லுநர்கள் குழு தனது அறிக்கையில் இலங்கை அரசுக்கு எதிராகக் கடும்போக்கு நிலைப்பாட்டை எடுக்காமல் மென்போக்குடன் கூடிய அணுகுமுறையினைக் கைக்கொள்ளுவதற்குக் காரணம் எனவும் இவர்கள் நம்புகிறார்கள்.

கடந்த ஆண்டு இடம்பெற்ற ஐ.நா வின் பொதுச்சபைக் கூட்டத் தொடரில் கலந்து கொள்வதற்காகச் சென்றிருந்த ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் பான் கீ மூனுக்கும் இடையில் கலந்துரை யாடல்கள் இடம்பெற்றிருந்தன. இந்தச் சந்திப்புத் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துரைத்திருந்த அதிபரின் செயலாளர் லலித் வீரதுங்க, இந்தச் சந்திப்பு வெற்றிகரமானதாக இடம்பெற்றதாகக் குறிப்பிட்டிருந்தார்.

வல்லுநர்கள் குழுவின் அங்கத்த வர்கள் இலங்கைக்குப் பயணம் செய்து இலங்கை அமைத்திருந்த கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவைச் சந்திப்ப தற்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஏற்றுக்கொண்டதாக லலித் வீரதுங்க கொழும்பிலிருந்து வெளியாகும் சண்டே லீடர் பத்திரிகையிடம் கூறியிருந்தார்.

தனது தாளத்துக்குப் பான் கீ மூனை ஆடவைக்கும் இலங்கை அரசின் இன் னொரு அரசியல் சித்து விளையாட்டுத்தான் இது என்று சில வெளிநாட்டு ஊடகங்கள் அப்போது செய்தி வெளியிட்டிருந்தன.

ஆனால், உண்மையில் நடப்பது யாதெனில், இந்த வல்லுநர்கள் குழு அமைக்கப்பட்டது முதல் இலங்கை அரசுதான் பான் கீ மூனது பொறிக்குள் சிக்கியிருக்கிறது.

இந்தப் பொறியை அமைத்தது பான் கீ மூனா அல்லது அமெரிக்கா மற்றும் அதனது ஆதரவு மேற்கு நாடுகளா என்பது இதுவரை வெளிவரவில்லை.

வல்லுநர்கள் குழு அமைக்கப்படு வதற்கு முன்னர் தனது சிறப்புப் பிரதி நிதி ஒருவரை இலங்கைக்கு அனுப்புவதற்கும் பான் கீ மூன் தயாராக இருந்தார். ஆனால் செயலாளர் நாயகத்தின் இந்தச் சிறப்புத் தூதுவர் இலங்கைக்குள் நுழைவதற்கு அனும்திக் கப்பட மாட்டார் என்று இலங்கை அறிவித்திருந்தது.

ஆனால், பின்னர் தனது முடிவை மாற்றிக் கொண்ட இலங்கை அரசு பான் கீ மூனின் சிறப்புப் பிரதிநிதியான லியாம் பொக்ஸ் இலங்கைக்கு வருவதற்கு அனுமதி வழங்கியது.

இலங்கையை வந்தடைந்த இந்தச் சிறப்புப் பிரதிநிதி வடக்குக் கிழக்குக்கான தனது பயணத்தின் பின்னர் கொழும்பில் பத்திரிகையாளர் மாநாடொன்றை நடத்தியிருந்தார்.

இதன்போதுதான் வல்லுநர்கள் குழுவை அமைக்கும் பான் கீ மூனின் திட்டத்தினை லியாம் பொஸ்கோ ஊடகங்களுக்குத் தெரியப்படுத்தியிருந்தார். இந்த அறிவிப்பு இலங்கை அரசுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

பான் கீ மூன் வல்லுநர்கள் குழுவை நியமித்த பின்னர் இந்தக் குழுவின் உறுப்பினர்களை இலங்கைக்குள் அனுப்பு வதற்கான அனுமதியைப் பெற்றுக் கொண்ட பான் கீ மூன், ஜனாதிபதி மஹிந்த நெகிழ்வுப் போக்குடன் செயற்படுவதாகக் கூறியிருந்தார்.

எவ்வாறிருப்பினும், வல்லுநர்கள் குழுவின் உறுப்பினர்கள் இலங்கைக்குப் பயணம் செய்வதற்கு அனுமதி வழங்கு வது என்ற முடிவை இலங்கை அரசு மாற்றிக்கொண்டது.


பதிலாக ஐ.நாவின் வல்லுநர்கள் குழுவை இரகசியமாகச் சந்திக்கும் வகை யில் சட்டமா அதிபர் உள்ளிட்ட தனது பிரதிநிதிகளை இலங்கை நியூயோர்க்குக்கு அனுப்பியிருந்தது.

பான் கீ மூன் அமைத்திருக்கும் வல்லுநர்கள் குழுவை இலங்கை அரசின் பிரதிநிதிகள் சந்தித்து உரையாடுவார்கள் எனில் அது ஐ.நாவின் வல்லுநர்கள் குழுவுக்கு இலங்கை அரசு அங்கீகாரம் வழங்குவதற்கு ஒப்பானதாகும் என்று இலங்கை முன்னர் கருத்துரைத்திருந்ததை இங்கு குறிப்பிடவேண்டும்.

தனது இந்தக் கருத்தைப் பொருட்படுத்தாமல், வல்லுநர்கள் குழுவைச் சந்திக்கும் வகையில் இலங்கை அரசு தனது உயர்மட்டக் குழுவை நியூயோர்க்குக்கு அனுப்பியிருந்தது.

இதுபோன்ற கலந்துரையாடல்களின் ஊடாக வல்லுநர்கள் குழுவின் அறிக்கையைத் தமக்குச் சாதகமாக மாற்றலாம் அல்லது இந்தக் குழு இலங்கை தொடர்பான அறிக்கையைப் பூரணப்படுத்துவதை செயலாளர் நாயகம் அனுமதிக்காத ஒரு சூழமைவை ஏற்படுத்தலாம் என்று இலங்கை அரசு கருதியே தனது குழுவை நியூயோர்குக்கு

அனுப
பா
விழுந்
காண
பா
பதவி
தொட
வெள்
கும்பே
பான்
மேற்கு
எழுகி
கட
ஒன்றி
குறிப்
மற்று
பெற்ற
மீறல்
பில்ல
டார்''
பதி
கோள்
ஊதிய
பா
மிகப்
வேலை
யிருந்
பணிய
இழந்
தவறி
குறிப்
மே
வந்திரு
டாவது
வதை
சக்திக
மேலும்
செய்தி
ஆ
இலங்
கைகை
தொட
பதவி
ஆதரவ
வெளி
செய்தி
''அ
நிர்வாச
அங்கம்
பான்
பெற்றி
பா
தொட
டிருந்த



பத்தி

> பான் கீ மூன் இரண்டாவது முறையாகவும் பதவியில் தொடர்வதற்கான வாய்ப்புத் தொடர்பாக வெளிநாட்டு ஊடகங்களில் வெளிவரும் கருத்துக்களை அவதானிக்கும் போது, இந்தப் பொறியினை ஏற்படுத்தியது பான் கீ மூனா அல்லது அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகளா என்ற வலுவான கேள்வி எழுகிறது.

அனுப்பியிருக் கக்கூடும்.

பான் கீ மூனின் பொறிக்குள் இலங்கை அரசு விழுந்துவிட்டது என்ற கருத்தே பரவலாகக் காணப்படுகிறது.

பான் கீ மூன் இரண்டாவது முறையா கவும் பதவியில் தொடர்வதற்கான வாய்ப்புத் தொடர்பாக வெளிநாட்டு ஊடகங்களில் வெளிவரும் கருத்துக்களை அவதானிக் கும்போது, இந்தப் பொறியை ஏற்படுத்தியது பான் கீ மூனா அல்லது அமெரிக்கா மற்றும் மேற்கு நாடுகளா என்ற வலுவான கேள்வி எழுகிறது.

கடந்த ஒகஸ்டில் வெளிநாட்டு ஊட கம் ஒன்றின் வாயிலாகக் கசிந்த ஐ.நா வின் குறிப்பு ஒன்றில் ''மியன்மார், இலங்கை மற்றும் உலகின் இதரபாகங்களில் இடம் பெற்ற அளவில் பெரிய மனித உரிமை மீறல்களை எதிர்த்து நிற்பதற்கு முதுகெலும் பில்லாத துணிவற்ற பான் கீ மூன் தவறிவிட் டார்'' என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது.

பதிலாக, பன் கீ மூனின் வெற்று வேண்டு கோள்கள் அனைத்தும் செவிடன் காதில் ஊதிய சங்கானது.

பான் கீ மூனது காலத்தில் உலகில் மிகப்பெரும் நெருக்கடிகள் இடம்பெற்ற வேளையில் ஐ.நா. அதிலிருந்து விலகி யிருந்திருக்கிறது. உறுப்பு நாடுகளிலும் தனது பணியாளர்களிலும் பான் கீ மூன் நம்பிக்கை இழந்திருப்பதோடு அவர்களை மதிக்கவும் தவறிவிட்டார் எனவும் அந்தச் செய்திக் குறிப்பில் குறிப்பிடப்பட்டிருந்தது.

மேற்குறித்த இந்த அறிக்கை வெளி வந்திருந்த நிலையில், பான் கீ மூன் இரண் டாவது முறையாகவும் பதவியில் தொடரு வதை அமெரிக்காவோ அன்றி மேற்கு சக்திகளோ ஒருபோதும் வரவேற்காது எனவும் மேலும் இந்த வெளிநாட்டு ஊடகம் தனது செய்திக் குறிப்பில் குறிப்பிட்டிருந்தது.

ஆனால், வல்லுநர்கள் குழுவானது தனது இலங்கை தொடர்பான போர்க் குற்ற அறிக் கையை பான் கீ மூனிடம் கையளித்ததைத் தொடர்ந்து, ''இரண்டாவது முறையாகவும் பதவியில் தொடர்வதற்கான அமெரிக்காவின் ஆதரவை பன் கீ மூன் பெற்றார்'' என்று வெளிநாட்டு ஊடகங்கள் தலைப்பிட்டுச் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

''அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் நிர்வாகத்திடமிருந்தும் பாதுகாப்புச் சபையில் அங்கம் வகிக்கும் ஏனைய நாடுகளிலிருந்தும் பான் கீ மூன் ஓர் உறுதிப்பாட்டினைப் பெற்றிருப்பதாகத் தெரிகிறது.

பான் கீ மூனின் தலைமைத்துவம் தொடர்பாகத்தான் ஆரம்பத்தில் கொண் டிருந்த தவறான கருத்தை ஒபாமா மாற்றி விட்டாராம்.

கடாபியை ஆட்சியிலிருந்து வெளி யேற்றுவது உள்ளிட்ட முதன்மையான சில அனைத்துலக நடவடிக்கைகளுக்கு பான் கி மூன் நம்பத்தகுந்ததொரு கூட்டு என்று ஒபாமா தற்போது நம்புகிறாராம்.

இரண்டாவது முறையாகவும் பதவி யில் தொடர்வதற்கான ஆதரவை பான் கீ மூன் அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளிலிருந்து ஏற்கனவே பெற் றெடுத்தார்.

இருப்பினும் ரஷ்யா மற்றும் சீனா ஆகியன பான் கீ மூன் தொடர்ந்தும் பதவியில் தொட ருவதை எதிர்க்கும் என மூத்த இராஜதந்திரி ஒருவர் கூறுகிறார்.

''பான் கீ மூன் தனது பதவியைத் தக்க வைத்துக்கொள்ளும் வகையில் செயற் படுவார் என நான் நம்புகிறேன்'' என்று அந்த வெளிநாட்டு ஊடகத்தில் குறிப்பிடப்பட்டி ருக்கிறது.

இந்தப் புறநிலையில் யார் யாரைப் பொறியில் சிக்கவைத்தது என்பது தெட்டத் தெளிவு.

*(நன்றி: புதினப்பலகை)*

# கர்வம் நீங்கிய கதை



''என்னை விட்டால் வேறு யாரும் இந்தக் காரியத்தைச் செய்துவிட முடியாது'' என்று சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்கிறநிறையப் பேர் இந்த உலகத்தில் உள்ளனர்.

கர்வம் என்பது எப்படியோ வந்து நம் தலைக்குள் உட்கார்ந்து கொள்கிறது. அதைக் கீழே இறக்கி வைப்பது மிகவும் கஸ்ரமாக இருக்கிறது. ஆஞ்சநேயரையும் இந்தக் கர்வம் விட்டு வைக்கவில்லையாம் என்று இராமா யணம் சொல்கிறது.

சீதையைத் தேடிக் கண்டு பிடிப்பதற்காகப் போன ஆஞ்சநேயர், அசோகவனத்தில் சீதையைப் பார்த்துவிட்டுத் திரும்பி வந்து கொண்டிருந்தார். அந்தச் சமயத்தில் வந்தது அவருக்குக் கர்வம். தான் செய்த செயல்களையெல்லாம் நினைத்துப் பார்த்தார்.

'' அடடா எப்படிப்பட்ட காரியம் எல்லாம் நான் செய்திருக்கிறேன். சமுத்திரத்தையே தாண்டினேன். சீதா பிராட்டியைத் தேடிக் கண்டுபிடித்தேன். இராவணனையே கண்டு பேசினேன். அங்கே நெருப்பு வைத்த அரக்கர் களையெல்லாம் கதிகலங்க வைத்தேன்'' இப்படியெல்லாம் தன்னைப் பற்றிப் பெருமையாக நினைத்தார் ஆஞ்சநேயர். உடனே அவருடைய உள்ளத்தில் கர்வம் தோன்ற ஆரம்பித்துவிட்டது. இதைப் பகவான் புரிந்து கொண்டார்.

ஆஞ்சநேயர் மிகவும் பெருமையாகச் சிரித்துக்கொண்டு பலத்த கர்ஜனையோடு வந்து கொண்டிருந்தார். வழியில் திடீரென்று அவருக்குத் தாகம் எடுத்தது. உடனே தண்ணீர் குடிக்க வேண்டும் போல இருந்தது. என்ன செய்யலாம் என்று யோசித்தார்.

அவர் நின்று கொண்டிருந்த இடம் மகேந்திரமலை. சுற்றிலும் பார்த்தார். தண்ணீர் இருக்கிற இடம் எதுவும் தென்படவில்லை. கொஞ்சத் தூரத்தில் ஒரு முனிவர் உட்கார்ந்து இருப்பது தெரியவந்தது.

ஆஞ்சநேயர் அவரிடம் போய் ''முனிவரே! நான் இராமபிரானுக்காக சீதையைத் தேடிக் கண்டுபிடித்துவிட்டுத் திரும்பி வந்து கொண்டிருக்கிறேன். மிகவும் தாகமாக இருக்கிறது. தண்ணீர் இருந்தால் கொடுங்கள். இல்லை யென்றால் அது இருக்கிற இடத்தையாவது காட்டுங்கள்; நான் போய்க் குடிக் கிறேன்'' என்றார்.

முனிவர் தண்ணீர் இருக்கிற திசையைச் சுட்டிக் காட்டினார். ஆஞ்சநேயர் அங்கே புறப்பட்டார். போவதற்கு முன்னாடி சீதை அவரிடம் கொடுத்த சூடாமணி, இராமனின் முத்திரை மோதிரம், பிரம்மதேவன் கொடுத்த ஒரு கடிதம் இவை மூன்றையும் முனிவர் முன்னால் வைத்துவிட்டுப் போனார்.

கொஞ்ச நேரத்துக்குள் இன்னொரு குரங்கி வந்து முனிவர் முன்னால் இருந்த சூடாமணி, மோதிரம், கடிதம் எல்லாவற்றையும் எடுத்து முனிவருக்குப் பக்கத்தில் இருந்த கமண்டலத்துக்குள் போட்டுவிட்டுப் போனது. முனிவர் அதையும் புன்னகையோடு பார்த்துக் கொண்டு இருந்தார்.

ஆஞ்சநேயர் தண்ணீர் குடித்துவிட்டுத் திரும்பி வந்தார். முனிவருக்கு முன்னால் வைத்துவிட்டுப் போன எவையும் இல்லை. பயந்துவிட்டார். முனிவரைக் கேட்டார். அவர் கமண்டலப் பக்கம் கண்ணைக் காட்டினார்.

இவர் உடனே ஓடிப்போய் அதற்குள் எட்டிப் பார்த்தார். உள்ளே பார்த்த இவருக்கு ஒரே ஆச்சரியம். இவர் வைத்துவிட்டுப் போனமாதிரி ஆயிரக் கணக்கான முத்திரை மோதிரங்கள் கமண்டலத்துக்குள்ளே கிடந்தன. அனுமர் குழம்பிப் போய் முனிவரைப் பார்த்து ''சுவாமி! இவ்வளவு மோதிரங்கள் கிடக்கிறனவே. இதில் நான் விட்டுப்போன மோதிரம் எது?'' என்று கேட்டார்.

அதற்கு முனிவர் ''குழந்தாய்! இராம அவதாரம் நடக்கும் காலங்களிலெல்லாம் சீதையை இராவணன் கவர்ந்து செல்வதும் , அதற்குப் பின்னர் அனுமார் சீதையைக் கண்டுவிட்டுத் திரும்பும்போது முத்திரை மோதிரத்தை என் கமண்டலத்துக்குள் போடுவதும் வழக்கம். அப்படிப் போடப்பட்ட மோதிரங்களைத்தான் இப்போது நீ கமண்டலத்துக்குள் பார்க்கிறாய்'' என்றார்.

இதைக் கேட்டதும் ஆஞ்சநேயருக்கு இருந்த கர்வம் ஓடிவிட்டது. வெட் கத்தோடு முனிவரைப் பார்த்து, ''அப்படியென்றால் இதுவரைக்கும் எத்தனை இராமர்கள் தோன்றியிருக்கிறார்கள்?'' என்று கேட்டார்.

கமண்டலத்தில் உள்ள மோதிரங்கள் எத்தனை என்று கணக்குப் போட முடியாத காரியம்'' என்று கூறினார் முனிவர்.

ஆஞ்சநேயர் யோசித்தார் ''என்னை மாதிரி எத்தனை பேர் இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறார்கள். அவ்ர்களை விடப்பெரிதாக நான் என்ன செய்துவிட்டேன்?'' என்று நினைத்தார்.

பின்னர் இராமபிரானிடம் போனார்-வணங்கிக் கலங்கினார். ஆச்சிரமத்தில் நடந்ததையெல்லாம் சொன்னார். எல்லாவற்றையும் கேட்ட தற்குப் பின்னர் இராமபிரான் சிரித்துக் கொண்டு ''முனிவர் உருவத்திலே வந்தது நான்தான்; உன் நன்மைக்காக இந்த வேடிக்கையைச் செய்தேன். கவலைப்படாதே; இதோபார் நீ முனிவர் ஆச்சிரமத்தில் விட்டுவிட்டு வந்த மோதிரம்'' என்று தன் கையில் இருந்த மோதிரத்தைக் காட்டினார்.

ஆஞ்சநேயர் அப்படியே தரையில் வீழ்ந்து வணங்கினார். அதற்குப் பின்னர் எந்த நிலையிலும் அவர் உள்ளத்தில் கர்வம் வரவே இல்லையாம்.

இந்தக் கதை எதற்காகக் கூறப்படுகிறது என்றால், எந்தச் சந்தர்ப்பத்திலும் மனதில் கர்வத்திற்கு இடங்கொடுக்கக் கூடாது என்பதை வலியுறுத்துவதற்காகத்தான் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

**கோ. சுவாமிநாதன்.**

# மலையேறும் வரதட்சணையால் ஏழைப் பெண்களின் வாழ்க்கை ஏமாற்றமா?

இன்றைய நவீன காலத்தில் வரதட்சணை என்ற பெயரில் சில பணக்காரக் குடும்பத்தினர் ஏழைப் பெண்களின் வாழ்க்கையில் விளையாடுகின்றனர் எனப் பல ஏழைப் பெற்றோர் கண்ணீர் சிந்துவதை எம் கண்களாலேயே காண முடிகின்றது.

முன்னைய காலத்தில் வரதட்சணை என்ற பெயரில் சமையல் பாத்திரங்கள், வீட்டுத் தளாபாடங்கள் மற்றும் நகைகளைத் தான் வழங்குவார்கள். அனால் தற் போதைய நவீன காலத்தில் அப்பப்பா சொல்லவே தேவையில்லை! ஆயிரம், லட்சம், கோடி என்று மலை ஏறிக் கொண்டே செல்கின்றது. அன்றைய காலத்தில் ஆயிரத்தில் இருந்த வரதட்சணை லட்சத்துக்குச் செல்லும்போது பெண்பிள்ளைகளும் கல்வி கற்று சமூகத்தில் நல்ல அந்தஸ்தில் இருந்தார்கள். அவர்களுக்கு உரிய மதிப்பை மற்றவர்கள் வழங்க வேண்டும் என்பதற்காகப் பெற்றோர்கள் தமது கஸ்ரத்தையும் பொருள்படுத்தாது லட்சத்தை அளித்து வந்தனர்.

ஆனால் தற்போது கோடிக்கு வரதட்சணை மலை ஏறும் போது ஏழைப் பெற்றோர் எங்கே கோடிக்குச் செல்வார்கள்? இலட்சம், கோடி இல்லாத பெண்களுக்கு வாழ்க்கையே இல்லையா?

''பெற்ற மனம் பித்து பிள்ளை மனம் கல்லு'' என்பார்கள். அதனால் வரதட்சணை எப்படித்தான் அதிகரித்தாலும் பெற்றவர்கள் பிள்ளைகளைக் கையை விரித்து விட்டுவிடுவார்களா? எப்பாடுபட்டாவது தனது பிள்ளையைக் கரைசேர்க்கவே நினைப்பார்கள். இந்த விடயம் வரதட்சணை கேட்கும் ஆடவர்களுக்கும் அவர்களின் குடும்பத்துக்கும் புரியாமலா இருக்கின்றது. இதைப்பற்றிக் கேட்டால் கூறுவது என்ன தெரியுமா? ''எங்களுக்காகவா கேட்கின்றோம். உங்களின் பிள்ளைகள் சந்தோசமாக வாழத்தானே'' என்ற கருத்து வேறு.

இது தொடர்பாக ஒரு பெண்மணி கூறும் உண்மைச் சம்பவத்தைப் பார்ப்போம்.



-உண்மைச் சம்பவம்

நான் ஒரு மீனவக் குடும்பத்தைச் சேர்ந்தவள். எனது வீட்டுக்கு சிறிது தூரத்தில் உள்ள குடும்பத்தில் கணவன் மனைவி இருவருமே அரச உத்தியோகத்தர்கள். அந்தக் குடும்பத்தின் மனைவி தனது சகோதரனுக்குப் பெண் பார்த்து வந்தாள். இதற்காக ஒரு வீட்டில் பெண் பார்க்கச் சென்ற போது அவர்களுக்குப் பெண்ணைப் பிடித்து விட்டது. மாம்பிள்ளை வெளிநாட்டில் உள்ளார், எனவே நீங்கள் வரதட்சணையாக ரூபா 20 லட்சம் தர வேண்டும் என்றார்கள். இங்கே துன்பமான விடயம் என்ன தெரியுமா? அந்தக் குடும்பத்தில் 3 பெண் பிள்ளைகள். அவர்களுக்குத் தந்தை இல்லை. இவளுக்கு ரூபா 20 லட்சம் கொடுத்தால் மற்றைய பிள்ளைகளை எங்கே விடுவது என்று பெற்றோருக்கு ஒரே ஏக்கம். இறுதியில் பெண் வீட்டார் ரூபா 10 லட்சம் தருவதாகக் கூறினார்கள். அதற்கு மாப்பிள்ளை வீட்டாரும் ஒப்புக் கொண்டதால் ஏதோ கஸ்ரப்பட்டுப் பணத்தைத் தயார் செய்து கொடுத்து விட்டனர்.

ஒருவருடம் உருண்டோடி விட்டது. ஆனால் மாப்பிள்ளை பெண்ணுடன் அவ்வளவு கதைப்பதில்லை. அதனால் பெண் வீட்டாருக்கு ஏற்பட்ட சந்தேகத்தால் மாப்பிள்ளை வீட்டாரின் அயலவர்களிடம் சென்று விசாரித்துள்ளனர். அந்தச் சந்தர்ப்பத்தில் அவர்களுக்கு ஏற்பட்ட அதிர்ச்சி... ''மாப்பிள்ளை வெளிநாட்டில் வேறு திருமணம் செய்து விட்டார் என்பதே...''

வெளிநாட்டு மாப்பிள்ளை என்று கூறிப் பணத்தை வாங்கிய அந்த உத்தியோகத்தர்களோ வாங்கிய பணத்தை மற்றைய சகோதரர்களுக்கும் கொடுத்துத் தாமும் வீடு கட்டி வசதியாக உல்லாசமாக வாழ்கின்றனர். இதை அறிந்த பெண் வீட்டார் பணத்தைக் கேட்டால் ''இப்ப தர முடி யாது; நாங்கள் வாங்கவில்லை; செய்வதைச் செய்'' என்று கூறி வருகின்றார்களாம்.

பணம் கொடுத்தற்கான எந்தவித ஆதாரமும் இவர்களிடம் இல்லை. அவர்களை எதிர்த்து நிற்க வசதியும் இல்லை. இதனால் செய்வதறியாது இருக்கிறார்கள் பெண் வீட்டார். இவ்வாறு மற்றவர்களைச் சுரண்டி தாம் உல்லாசமாக வாழஎண்ணுபவர்களைப் பெண்களின்சாபம் சும்மாவா விடும். எனவே பெண் பிள்ளைகளை வைத்திருக்கும் ஒவ்வொரு குடும்பமும் விழிப்புணர்வுடன் இருக்க வேண்டியது அவசியம்.

பெண்கள் வீட்டின் குல விளக்கு என்பதை மறந்து பணத்துக்கு ஆசைப்பட்டு ஏமாற்றும் ஆடவர்களைப் புறந்தள்ளி வாழ்வின் வெற்றிப் பாதைக்குச் செல்ல சமூகமே வழி கொடுக்க வேண்டும். வரதட்சணை என்ற பந்தை ஏழைகளிடம் உருட்டி விளையாடும் ஆடவர்களையும் அவர்களுடைய குடும்பத்தின் அங்கத்தவர்களை அடக்கி ஒடுக்கி ஏழைகளை வாழவைக்கும் வழிகள், சமூகமாகிய உங்களுடமே உள்ளன. எனவே இனியும் பொறுக்காது ஒவ்வொருவரும் கிளர்ந்தெழ வேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பு.

*நலன் விரும்பி.*

## இளவயதுத் திருமணத்தை விரும்பி சுதந்திரத்தைப் பறி கொடுக்க வேண்டுமா?

இளவயதில் திருமணம் செய்து கொள்ளும் பெண்கள் சமூக ரீதியாகவும், குடும்ப ரீதியாகவும் உடல், உள ரீதியாகவும் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து வருவது பலரும் அறிந்த ஒன்றே.

பெண்களுக்கு சமூக ரீதியான அந்தஸ்துக்கள், உரிமைகள் அதிகரித்துக்கொண்டு செல்லும் தற்போதைய காலகட்டத்தில் திருமணங்களைச் செய்து தமது வாழ்வைத் தாமே சீரழித்து வருகின்றனர் என்றுதான் கூற வேண்டும்.



இந்தப் பெண்கள் சமூக ரீதியாகத் தமக்கு வழங்கப்படும் செல்வாக்கினை உரிய வகையில் பயன்படுத்தி வாழ்க்கையின் வெற் றிப் பாதைக்குச் செல்வதோடு சாதனைகள் பல புரிந்து. வாழவேண்டியவர்கள். ஆனால் இவர்கள் புரியும் இளவயதுத் திருமணங்கள் சமூகத்தாலும் குடும்பத்தாலும் ஏற்றுக் கொள்ள முடியாததாக இருப்பதோடு தமது அழிவை நோக்கித் தாமே செல்கின்றனர்.

''யானை தன் தலையில் தானே மண் அள்ளிப் போட்டது போல'' தனக்குள்ள சுதந்திரங்களைப் பறிகொடுத்து விட்டு பலவிதமான நோய்களையும் கட்டுக்கோப்பான வாழ்க்கை முறையையும் தம்மகத்தே கொள்ள வேண்டிய கட்டாயமான சூழலுக்குத் தம்மைத் தாமே தள்ளி வருகின்றனர்.

அத்துடன் இவர்களால் பிரசவிக்கப் படுகின்ற குழந்தைகள் கூட அதிகமாகக் குறைபாடுகளுடனும் குறை மாதத்திலும் பிறப்பதாக மருத்துவத் தகவல்கள் கூறுவதை நாம் கேட்டிருப்பதோடு நம் கண்கள் ஊடாகவும் காணமுடிகிறது.

இவ்வாறு நாம் கண்டும், கேட்டும் வந்த விடயங்களை ஏன் இந்த இளம் பெண்கள் சிந்திப்பது இல்லை? தம் வாழ்க்கை தொடர்பான படிமுறைகளையும் அதன் தார்ப்பரியத்தையும் முடிந்தளவு கற்றறிந்து அதன் பின்னர் தனக்கான ஒரு துணையைத் தேடுவதில் தவறில்லை.

**ஜீவன்,** மானிப்பாய்.

பெண்கள் சாதிக்கப் பிறந்தவர்கள் என்ற எண்ணம் எம் இளம் பெண்கள் மத்தியில் கட்டாயம் தோற்றம் பெற வேண்டியது அவசியமாகும்.சமூக ரீதியாகவும் குடும்ப ரீதியாகவும் பெண்கள் தமக்கான ஒரு தனி அந்தஸ்தைப் பெற வேண்டும் எனில் தனக்குள் இருக்கும் திறமைகளையும் அறிவினையும் வெளிப்படுத்த வேண்டியதுடன் தம் இளமைப் பருவத்தில் அவதானிப்புடன் இருப்பதும் அவசியமாகின்றது.

## திருமணத்துக்குப் பின்னரான அனுபவம்

1.திருமணத்துக்குப் பற்கள் உண்டு. அகப்பட்டவர்களை அது கடித்து விடும்.
2.மணம் செய்த பின்தான் வாழ்க்கை முழுவதும் யுத்தகளம். அதனால் மனத்தூய்மைக்குப் பல சோதனை நேரிடும்.
3.திருமணம் என்பது இருவரை ஒருவராகக் காண்பது. அந்த ஒருவர் யார்? என்பதைக் காண்பதே வாழ்வு.
4.திருமணம் தும்மல் போன்றது. அது எப்போது வருமெனச் சொல்ல இயலாது.
5.திருமணத்தை ஆயுள் தண்டனை என்பார்கள் . இது ஒருவர் உள்ளத்தை மற்றவர்கள் திருடியதால் கிடைத்த பரிசு.

**ஓிந்து.**

## விதவை...!



விதியின்...
விளையாட்டில்
வினையான...
அவள் வாழ்வு!
அவள் இழந்தது
கணவனை மட்டுமல்ல
பூவையும், பொட்டையும்!
மனதால் துன்பப்பட்டுக்
கொண்டிருப்பவளை-நாம்
வார்த்தைகளால்
வதைக்கலாமா?
இறைவன் போட்ட
கோலத்தைக் கலைத்தது
அவளுடைய தவறு அல்ல!
செயலால் அவளை-நாம்
போற்றாவிட்டாலும்
சுடு சொற்களால்
தூற்றாமல் இருப்போம்.

**சா. ஜிந்துஜா.**
கோண்டாவில்

## பொருத்தம்

கண்களில் நூறு கனவுகள்
என்னுள் வந்து வந்து போக
வந்தது எனக்கு நூறு வரண்
"பொருந்தாத குறிப்பாம்"
ஆயிரம் நொட்டைகள்
தரகரின் பதில்களாய்
உடைந்தது கனவுகள் மட்டுமா?
மனமும் தான் இறைவன் தந்த
பலன் பொருத்தம்
மனதை மட்டும் பொருந்தாமல்
செய்வதில் என்ன நியாயம்?
இளமைக்கால வாழ்வைத்
தொலைத்து விட்டு
வாழ்ந்து முடியும் காலத்தில்
எதற்கு வாழ்க்கை
வந்த பொருத்தத்தில் சொந்தத்தில்
உள்ளவனும் தந்திருக்கின்றான்
"பொருத்தம்" பார்த்ததால்
வந்ததோ எனக்கு இந்த நிலை!

**சாயித்திரா,**
உடுவில்.

# வேண்டுவார் வேண்டுவனவற்றைக் கொடுக்கும் அரியாலைப் பிரப்பங்குளம் மஹாமாரி அம்மன்



பட்டன. மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் அனைத்தையும் ஒருங்கே கொண்டு அருளாட்சி புரியும் அம்பாளை அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் கோயில் என்று அழைத்தாலும் இன்றும் பேச்சு வழக்கில் நாச்சிமார் கோயில் என்று கூறப்படுகின்றது.

1966 ஆம் ஆண்டு பிள்ளையார் பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டு கும்பாபிஷேகம் நிறைவேற்றப்பட்டது. 1976 இல் சுப்பிரமணிய சுவாமி பிர திஷ்டை செய்யப்பட்டது. அதே நேரம் தற்போது மூல மூர்த்தியாக அருள்பாலித்துக் கொண்டிருக்கும் மகாமாரி அம்மன் விக்கிரகமும் பிரதிஷ்டை செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகம் நிறைவேறியது. 1984 முதல் மகோற்சவம் ஆரம்பிக்கப்பட்டு வருடாந்தம் நடைபெற்று வருகிறது.

சைவ சமய அடியார்கள் தமக்கு இல்லிடம் அமைப்பதை விட தமது இஷ்ட தெய்வங்களுக்கு அழகான உறைவிடங்கள் நிறுவுவதில் மன நிறைவு காண்பவர்கள் என்பதை நிரூபிக்கும் வகையில் புலம்பெயர் வாழ் அரியாலை மக்களினதும் உள்ளூர் பரோபகாரிகளின் உதவியுடனும் ஆலயம் பலவழிகளிலும் உயர்வுகண்டு வருகிறது.

ஆரம்பத்திலிருந்து இடைப்பட்ட காலம் வரை தைப்பொங்கல் தின கிராம பவனி, ஆலய அபிஷேக தின கிராம பவனி, நவராத்திரி, திருவெம்பாவைப் பூஜை என்பவையே இங்கு நிறைவேற்றப்பட்ட நைமித்திய கிரியைகளாகும். இன்று வெகு சிறப்புடன் ஒவ்வொரு மாதமும் சங்கிராந்தி, பூரணை, சதுர்த்தி, கார்த்திகை அபிஷேகங்களுடன் விசேட தின விழாக்களும் இடம்பெறுகின்றன.

வருடாந்த மஹோற்சவம் ஆடிப் பூரத் தினத்துக்கு 15 நாள்கள் முன்னதாக கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி ஆடிப் பூரத்துக்கு முதல்நாள் தேர்த் திருவிழாவும் ஆடிப்பூரத்தில். தீர்த்தோற்சவமும் நடைபெறும். அம்மாளாச்சி ருத்திராகார சித்திரத் தேரில் திருவீதியுலாவரும் காட்சி கண்கொள்ளாத பக்திப் பரவசக் காட்சியாகும்.

நித்திய பூசைகளிலும் விழாக்களிலும் நிகழும் தவறுகளை நிவர்திக்க வருடாந்த மஹோற்சவமும் மஹோற் சவங்களில் உள்ள தவறுகளை நிவர்த்தி செய்ய 12 வருடங்களுக்கு ஒருமுறை மகா கும்பாபிஷேகமும் நடைபெறவேண்டும் என்றும் சைவசமய விதிக்கமைய கிரமமாக மகாகும்பாபிஷேகம் நடத்தப்படுகிறது.

ஆலய நுழைவாயிலில் நிமிர்ந்து நிற்கும் இராஜகோபுரத்துக்கு 1988 ஆம் ஆண்டு மஹோற்சவ தினத்தன்று அடிக்கல் நடப்பட்டது. நாட்டின் அசாதாரண யுத்த சூழல் காரணமாக கோபுர கட்டுமானப் பணிகள் நிறுத்தப்பட்டு மீண்டும் 1999 ஆம் ஆண்டு பூர்த்தி செய்யப்பட்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்று அடியவரை வழிபட்டு வருகின்றனர்.

மகாமாரி அம்பாள் அடியவர்களை ஆட்கொண்டருள வீதியுலா வந்து மக்களுக்கு திருக்காட்சி கொடுக்க சித்திரத் தேர் இல்லாக் குறையைத் தீர்க்குமுகமாக புதிய சித்திரத்தேர் உருவாக்கப்பட்டு 2009 ஆம் ஆண்டு வெள்ளோட்டத்தையடுத்து மகாமாரியம்மன் தேரில் வலம் வந்தாள். தத்துவச் சிறப்புப் பொருந்திய தேர் பற்றி இருக்கு வேதத்தில் பல குறிப்புக்கள் காணப்படுகின்றன. குமார தந்திரம் என்னும் ஆகமத்தில் எட்டு வகையான இரதங்களின் அமைப்பு கூறப்பட்டுள்ளது.

அந்த வகையில் அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன் ஆலய சித்திரத்தேர் 'ருத்திராகாரபாணி' வகையைச் சேர்ந்ததாகும்.

மகாமாரி அம்மன் ஆலய பரிபாலன சபைத் தலைவராக ந.குகதாசன், செயலாளராக செ.ஜெயபாலன், பொருளாளராக த.தர்மேந்திரன் உட்பட 11 அங்கத்தவர்கள் ஆலய நிர்வாகப்பணிகளை சிறப்புடன் முன்னெடுத்து வருகின்றனர். ஆலய பிரதம குருவாக சிவஸ்ரீ கு.சோமஸ்கந்தக் குருக்கள் அம்பாளுக்குரிய பூஜை, ஆராதனை, நைமித்திய கடமைகளை நிறைவேற்றிவருகிறார்.

**தொகுப்பு:யேசுதாஸ்**

வரலாற்றுப் பெருமையும் சிறப்பும் கொண்ட அரியாலை பிரப்பங்குளம் மகாமாரி அம்மன், கோவிலில் வீற்றிருந்து வேண்டுவார் வேண்டுவனவற்றை ஈகின்றவளாகவும், சக்தி நிறைந்த மகாமாரி அம்மனாகவும் அம்பாள் அருள் பாலித்துக் கொண்டிருக்கிறாள். ஆன்மாக்களாகிய நாம் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களை ஒழித்து மனம், வாக்கு, காயம் எனும் முக்காரணங்களால் இறைவனை வணங்கி மகாமாரி அம்மனைத் தொழுது பேரருள் பெறுவோம்.

(முற்றும்)

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

அரியாலை பிரப்பங்குளம் பதியில் நீண்ட காலமாகக் கோயில் கொண்டு வழிபடும் அடியவர் குறை தீர்த்து வரும் மகாமாரி அம்மன் ஆலயத்தின் நிர்வாக சபையின் தலைவராக இருந்த முன்னாள் யாழ். நகர முதல்வரும் பிரபல சட்டத்தரணியுமான சு.செ. மகாதேவாவின் பெரு முயற்சியால் ஆலய நிர்வாகச் சட்ட விதிகள் தயாரிக்கப்பட்டன. அம்பாளுக்கு புதுப்பொலிப்புடன் ஆலயத்தை புனரமைக்க நிர்வாக சபையினருடன் அனைவரும் தோள் நின்று உழைத்தனர்.

'ஒன்று பட்டால் உண்டு வாழ்வு' என்பதைப் போல் பணமாகவும், பொருளாகவும் பலரது பங்களிப்பும் நிறைந்து ஆலயம் வளர்ச்சி பெறலாயிற்று. அக்காலப்பகுதியில் பரிவார மூர்த்திகளின் பிரதிஷ்டைகள், வைரவ சுவாமி கோயில், மணிக்கூட்டுக் கோபுரம் என்பன அமைக்கப்பட்டன. வசந்த மண்டபம், பிரகாரங்கள் கூரைகள் திருத்தியமைக்கப்

# உயிர்ப்பு ஞாயிறு காலங்களில் கொழும்புத்துறையில் இளைஞர்-சம்சாரிகளுக்கு சினேகபூர்வத் துடுப்பாட்டம்

*(சென்றவாரத் தொடர்ச்சி)*

கொழும்புத்துறைக் கிராமத்தில் செபமாலை அன்னை ஆலய மக்களும் உயிர்ப்பு ஞாயிறு தினத்தன்று இளைஞர்- சம்சாரிகளுக்கிடையிலான சினேகபூர்வ கிரிக்கெட் துடுப்பாட்டப் போட்டியை சுமார் அரை நூற்றாண்டு காலமாக நடத்தி வருகிறார்கள். அன்றிலிருந்து இன்றுவரை வெகு சிறப்பாக 48 வருடங்களாக நடைபெற்று வருகிறது. தந்தையாருடன் விளையாடிய மைந்தர் தந்தையராக மாறி இப்போது தமது பிள்ளைகளுடன் மோதும் இந்தச் சுழற்சி முறை அணிசேரல் 3 தலைமுறையாகத் தொடர்கிறது.

இந்தப் பகுதி மக்களால் பாரம்பரியமாக நடத்தப்பட்டுவரும் ஈஸ்ரர் தின கிரிக்கெட் போட்டியின் முதலாவது கால்கோள் ஆட்டத்தில் சம்சாரிகள் அணித் தலைவராக சிறந்த விக்கட்காப்பாளரும், துடுப்பாட்ட வீரருமான யோ. அந்தோனிப்பிள்ளை கடமையாற்றினார். இளைஞர் அணித்தலைவராக சிறந்த பந்து வீச்சாளரும் பல்துறை ஆட்டக்காரருமான ஞா. கில்பேட் வழி நடத்தினார்.

முதலாவது ஆட்டத்தில் பங்கு பற்றிய வீரர்கள் காலஞ்சென்றும், வயோதிபத்திலும் உள்ளூர், வெளியூர், வெளிநாடுகளில் வாழ்கின்றபோதிலும் அவர்கள் இந்த சந்தர்பத்தில் குறிப்பிடப்பட வேண்டியவர்கள். முன்னோர் புரிந்த தியாகங்களும், தீர்க்க தரிசன செயற்பாடுகளும், கூட்டு வாழ்க்கை முறையும், பண்பாடுகளும் வரலாற்றுப் பாதையின் படிக்கற்களேயாகும்.

சம்சாரிகள் அணியில் மா. ஸ்ரனிஸ்லஸ், மி.அருளானந்தம், யோசேப்மணி, தொ.சி. இராசையா, சி.அருளப்பு, சி.சிங்கராசா, ஆ. பவளரத்தினம், நா.சின்னராசா, ச.மிரான்சிஸ், தை.மரியநாயகம், வ.செல்லத்துரை, மி.ஜேம்ஸ் ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

இளைஞர் அணியில் பி.வி ஜெயரட்ணம், எஸ்.அன்று, ஞா.யேசுதாசன், ச. யேசுதாசன், த.தீத்தூஸ், தை.செல்வரத்தினம், ச.ஸ்ரனிஸ்லாஸ், செ.கந்தசாமி, ச.ஜோர்ச், செ.செல்வநாயகம், அ.ஜோர்ச், பி.செல்வம், வ.செல்வராசா, தை.மிரான்சிஸ், ச.மரியதாஸ் ஆகியோர் இடம் பெற்றனர்.

மதவேறுபாடின்றி இடம்பெறும் இந்தப் போட்டியில் ஆலயத்தைச் சூழ வாழும் ஏனைய சமய வீரர்களையும் அணிகளில் இணைத்துக் கொள்வது விசேட அம்சமாகும். போட்டிக்கான ஏற்பாடுகள் அனைத்தையும் இளைஞர்கள் மேற்கொள்வர். கிராம மக்களால் ஆரம்பிக்கப்பட்ட ஈஸ்ரர் கிரிக்கெட் போட்டி நிகழ்வில் 1966 ஆம் ஆண்டளவில் ஆரம்பிக்கப்பட்ட கொழும்புத்துறை மத்திய சனசமூக நிலையத்தின் விளையாட்டுக் கழகமும் முழுவீச்சுடன் ஈடுபட்டது.

ஆலயத்தில் பணிபுரிந்த பங்குத் தந்தையர்களும் தமது ஊக்கத்தையும் ஆதரவையும் வழங்கத்தவறுவதில்லை. 1977 இல் இப்பகுதி இளைஞர்களுக்கு கரப்பந்தாட்ட விளையாட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்த கிறிஸ்ரியன் வாஸ் அடிகள் மற்றும் சந்திரபோஸ் அடிகள், எம்.பி ஞானரட்ணம் அடிகள் ஆகியோர் நிகழ்வை ஆரம்பித்து வைப்பார்கள். 1994 ஆம் ஆண்டு பங்குத்தந்தையாக இருந்த அருட்திரு சி.ஜி ஜெயக்குமார் அடிகள் இளைஞர்களுடன் இணைந்து ஞாயிறு தினங்களிலும் மாலை வேளை களிலும் தானும் ஓர் இளைஞன் போன்று கிரிக்கெட் ஆடுவார். அவர் சம்சாரிகள் இளைஞர் கிரிக்கெட் போட்டியை பெரிதும் வர வேற்று உற்சாகம் கொடுத்து உதவி வந்தார்.

1997 ஆம் ஆண்டு பணிபுரிந்த அருட்திரு. எட்வின் வசந்தராசா (O.M.I) அடிகள் இப்பகுதி மாணவர்களின் கல்வியில் அக்கறைகொண்டு இரவுப் பாடசாலையை நடத்தி வந்ததோடு சிறு. வர்கள், யுவதிகளின் திறமைக்கு களம் அமைக்கும் வகையில் இளைஞகளின் பங்களிப்புடன் உயிர்ப்பு ஞாயிறன்று காலையில் சிறுவர்களுக்கான விளையாட்டுப் போட்டியை ஆரம்பிக்க வழி கோலினார். கிரிக்கெட் போட்டியாக ஆரம்பித்த உயிர்ப்பு விழா நிகழ்வு தற்போது காலையில் சிறுவர் போட்டிகள், மாலையில் கிரிக்கெட், சங்கீதக் கதிரைப் போட்டி என வளர்ச்சி கண்டுள்ளது.



உயிர்ப்பு ஞாயிறு என்றதும் ஏனைய ஊர்களில் திருமணத் தின் காரணமாகவும் தொழில் ரீதியாகவும் தங்கி வசிப்போர் விளையாட்டில் பங்கு பற்றவும் பார்த்து மகிழவும் ஒன்று கூடுவர். வெளிநாடுகளில் வாழும் இளைஞர், சம்சாரிகளின் நினைவலைகள் தாய் மண்ணில் நிலை கொள்வதோடு தொலைபேசிகளிலும் போட்டிகளில் களநில வரங்களை அறிவதில் ஆர்வம் காட்டுவர். 1997 ஆம் ஆண்டு காலப் பகுதிக்குப் பின்னர் ஆலய இளையோர் அமைப்பும் கொழும்புத்துறை றொசாறியன் விளையாட்டுக் கழகமும் பொறுப்பேற்று நடத்தி வருகிறது. பல இடங்களில் இவ்வாறு ஆரம்பிக்கப்பட்ட இளைஞர்- சம்சாரிகளுக்கிடையிலான போட்டிகள் காலச் சூழ்நி லைகள் காரணமாக கிரமமாக நடை பெறாமல் கைவிடப்பட்ட போதிலும் இங்கே தொடர்ச்சியாக இடம்பெறுவது கவனிக்கத்தக்கது.

ஆண்டுக்கு ஒரு தடவை துடுப்பு மட்டையைத் தூக்கும் சம்சாரிகள் வெற்றிக்காக ஆடுவதை விடுத்து தொடர்பயிற்சியுடைய இளைஞர்களாகிய தமது பிள்ளைகளுடன் மோதி அவர்களின் திறமைகளை நேரடியாக அனுபவிப் பதில் மகிழ்வும் திருப்தியும் அடைகிறார்கள். கடந்த இரு தசாப்த காலத்தில் சம்சாரிகள் அணியினை வழிநடத்திவந்த அணித்தலைவர்களில் எஸ். டொன் பொஸ்கோ. அ. சில்வேஸ்ரர், எஸ். யேசு தாஸ், ச.யேசுதாசன், செ.டேமியன், அ.கொடி, அ.குணம், செ.சேகர், யே. பௌஸ்ரின் ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள். இளைஞர் அணியை ம.நிறோஜன், த. உதயச்சந்திரன், த.நாகதீபன், இ. கபிற்றன் சனா ஆகியோர் தலைமை தாங்கி நடத்தியுள்ளனர்.

கிராம மக்களின் ஆதரவையும் அபிமானத்தையும் பெற்ற இப்போட்டிக்கு பல பெரியவர்களின் ஒத்துழைப்பும், வர்த்தகர்களின் உதவியும் மேலும் வலுச்சேர்த்து வருகின்றது. இவ்வாறான போட்டிகள் கிராம மட்டத்தில் நல்லுறவையும், ஒருமைப்பாட்டையும் அன்பையும் வளர்த்து சமூக மேம்பாட்டுக்கு உதவுவதோடு 48 ஆண்டுகளைக் கடந்தும் தொடர்வது பாராட்டுக்கு உரியதாகும்.

(முற்றும்)

## கடை வாடகைக்கு

வேலணை, வங்களாவடி பழைய டிஸ் பென்சறி வளவுக்குள் 350 சதுர அடியுள்ள ஒரு கடை வாடகைக்கு உண்டு.

தொடர்பு:-
பாஸ்கரன்: 0750399725
கதிர்காமநாதன்:-0774445248

(3469)


## சிறுவனுக்கு கால் முறிந்தது

தென்மராட்சி, ஏப்.25

அடுத்த காணிக்குள் வீழ்ந்த பந்தை எடுப்பதற்கு மரத்தில் ஏறிப் பாய்ந்த சிறுவனுக்குக் கால் முறிந்தது.

இந்தச் சம்பவம் கச்சாயில் இடம்பெற்றது. இதே இடத்தைச் சேர்ந்த ஆர். சிறிகாந் (வயது 9) என்பவர் கால் முறிந்த நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். (ம-207)


## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலையின் பகுதித் தலைவர்
க.ஸ்ரீநந்தகோபன் அவர்களின் அன்பு மாமனார்

### இராசையா இராஜசேகரம்

அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு ஆறாத்துயர் அடைவதுடன் அன்னாரது பிரிவால் துயருறும்அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி. கல்லூரிச் சமூகம்.

(3493) (39-23-20)


## மஹஜன சம்பத சீட்டிழுப்பு முடிவுகள்

கொழும்பு,ஏப்.25

தேசிய லொத்தர் சபையின் மஹஜன சம்பத 2384ஆம் இலக்க கடந்த வெள்ளிக்கிழமை சீட்டிழுப்பில் "O" என்ற ஆங்கில எழுத்தும் 7/8/7/9/5/0 என்ற இலக்கங்களும் அதிர்ஷ்டத்துக்குரியனவாகத் தெரிவாகின.

இதன் பிரகாரம் வலமிருந்து இடமான அமைப்பில் "O" என்ற ஆங்கில எழுத்தும் 7/8/7/9/5/0 என்ற இலக்கங்களும் வைத்திருந்து சுப்பர் பரிசை வென்ற ஒருவருக்கு 12, 996, 499 ரூபா கிடைக்கவுள்ளது. இதன் பிரகாரம் முதலாம் பரிசு வெல்லப்படவில்லை. 8/7/9/5/0 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 10 பேருக்கு இரண்டாம் பரிசாகத் தலா ஒரு இலட்சம் ரூபா கிடைக்கவுள்ளது.

7/9/5/0 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 111 பேருக்கு மூன்றாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது. 9/5/0 என்ற இலக்கங்களைக்கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,091 பேருக்கு 4ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும். 5/0 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 10,967 பேருக்கு 5ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது.

0 என்ற இலக்கத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும்1,08,232 பேருக்கு 6 ஆம்பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கும். இடமிருந்து வலமான அமைப்பில் 7/8/7/9/5 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத் திருக்கும் 14 பேருக்கு ஏழாம் பரிசாகத் தலா பத்தாயிரம் ரூபா கிடைக்கவுள்ளது.

7/8/7/9 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 117 பேருக்கு 8ஆம் பரிசாகத் தலா ஆயிரம் ரூபா கிடைக்கும். 7/8/7 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 1,101 பேருக்கு 9ஆம் பரிசாகத் தலா நூறு ரூபா கிடைக்கவுள்ளது. 7/8 என்ற இலக்கங்களைக் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 10,782 பேருக்கு பத்தாம் பரிசாகத் தலா ஐம்பது ரூபா கிடைக்கும். "O" என்ற ஆங்கில எழுத்தை மட்டும் கொண்ட சீட்டுக்களை வைத்திருக்கும் 43,188 பேருக்கு பதினோராம் பரிசாகத் தலா இருபது ரூபா கிடைக்கவுள்ளது. (ற)


මහජන සම්පත
மஹஜன சம்பத
Mahajana Sampatha

2011.04.22

அலுவலக முடிவுகள்
சீட்டிழுப்பு இல. 2384

வெற்றி எழுத்து: O
வெற்றி எண்கள்: 7 8 7 9 5 0

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து | | | | | | | ரூபா | பரிசுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | O | 7 | 8 | 7 | 9 | 5 | 0 | ரூபா. 12,996,499/= | 01 |
| 1 பரிசுகள் | | 7 | 8 | 7 | 9 | 5 | 0 | ரூபா. 2,000,000/= | - |
| 2 பரிசுகள் | | | 8 | 7 | 9 | 5 | 0 | ரூபா. 100,000/= | 10 |
| 3 பரிசுகள் | | | | 7 | 9 | 5 | 0 | ரூபா. 10,000/= | 111 |
| 4 பரிசுகள் | | | | | 9 | 5 | 0 | ரூபா. 1,000/= | 1091 |
| 5 பரிசுகள் | | | | | | 5 | 0 | ரூபா. 100/= | 10967 |
| 6 பரிசுகள் | | | | | | | 0 | ரூபா. 20/= | 108232 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| பரிசு | எழுத்து | | | | | | | ரூபா | பரிசுகள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 7 பரிசுகள் | | 7 | 8 | 7 | 9 | 5 | | ரூபா. 10,000/= | 14 |
| 8 பரிசுகள் | | 7 | 8 | 7 | 9 | | | ரூபா. 1,000/= | 117 |
| 9 பரிசுகள் | | 7 | 8 | 7 | | | | ரூபா. 100/= | 1101 |
| 10 பரிசுகள் | | 7 | 8 | | | | | ரூபா. 50/= | 10782 |
| 11 பரிசுகள் | O | | | | | | | ரூபா. 20/= | 43188 |

இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை
Rs. 21,228,799.00

(சி/577268)

உங்களின் செழிப்பு நாட்டின் செழிப்பு
தேசிய லொத்தர் சபை
2342 காலி வீதி, கொழும்பு 03. தொலைபேசி: 2470662, 4607000, Hotline: 2433631 மின்னஞ்சல்: www.nlb.lk



## கோழிக்குஞ்சு விநியோகம்

35 நாளில் 2 கிலோவுக்கு மேல் வளர்ச்சியடையக் கூடிய No-1 BAHIRAHA புறொயிலர் குஞ்சுகள் 27.04.2011 விநியோகிக்கப்படும். விலை 90/=. மொத்தமாகக் கொள்வனவு செய்பவர்களுக்குக் கழிவு வழங்கப்படும். இறைச்சிக் கோழிகள் கொள்வனவு செய்யப்படும்.

✱றாஜீவ்-நவாலி வீதி, ஆனைக்கோட்டை -
021 222 2867, 0776090926
✱துர்க்கா பாம்- ஸ்ரேசன் றோட், சுன்னாகம்.

(3394)



# VISA - வீசா
## Consultancy Service

UK, USA, CANADA, AUSTRALIA,
NEW ZEALAND, SWITZERLAND,
FRANCE, GERMANY, NORWAY, DENMARK,

Visit / Tourist, Business, Family
Students, Migration, Medical Visas

**Call : 0776 209 887**

SIC, 101/35, Stanley Road, Jaffna
(Behind PEOPLES BANK)

(3454)



## உடுப்பிட்டி ப.நோ.கூ.சங்கம் (வ-து)

எமது சங்கத்துக்கு 5நூல் கிறேசர் சல்லி, 4நூல் கிறேசர் சல்லி, கருங்கல் தூசு என்பன தேவை. வாழங்க விரும்புவோர் ஒவ்வொன்றுக்கும் ¾ கியூப் கொள்ளவுள்ள பெட்டிக்கான விலையுடன் சங்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

(சி/577812) தொலைபேசி இலக்கம்:- 0212264036.

(20-23)



# லங்கா வோல்டைல்ஸ்

# மகத்தான மலிவு விற்பனை!

40% தள்ளுபடி

ஏராளமான வடிவங்களிலும் அளவுகளிலும் பெறலாம்
ஏப்ரில் 25 முதல் 30 வரை

- நாராயண செரமிக் பிரிவு, 113, A 9, கிளிநொச்சி.
- மின்சார நிலைய வீதி (யாழ் போதனா வைத்தியசாலைக்குப் பின்னால்), யாழ்ப்பாணம்.

இந்த அரிய வாய்ப்பைத் தவறவிடாதீர்கள்!



## அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி இலக்கங்கள்

1287 சிகப்பு

04 18 23 36 — இடபம் — 22-04-2011

ஜக்பொட் பரிசு ரூபா. 2,000,000/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 201,604 | 20/- | 4,032,080/- |
| 2 இலக்கங்கள் | 18,517 | 40/- | 740,680/- |
| 1 இல. + லக்கினம் | 18,401 | 60/- | 1,104,060/- |
| 2 இல. + லக்கினம் | 1,634 | 200/- | 326,800/- |
| 3 இலக்கங்கள் | 501 | 1000/- | 501,000/- |
| 3 இல. + லக்கினம் | 48 | 10,000/- | 480,000/- |
| 4 இலக்கங்கள் | 3 | 200,000/- | 600,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 2,000,000/- | - |
| பிரதான சீட்டிழுப்பில் பரிசுகளின் மொத்தம் | | | 7,784,620/- |
| இரண்டாம் வாய்ப்புக்கான பரிசுகள் | 546 | | 1,272,000/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 241,254 | | 9,056,620/- |

இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 2,901,150/-

### இரண்டாவது வாய்ப்பு

வெற்றி இலக்கங்கள்

02 17 24 50 — மீனம்

ஜக்பொட் பரிசு ரூபா. 900,000/- வெல்லப்பட்டுள்ளது

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 3 இலக்கங்கள் | 544 | 500/- | 272,000/- |
| 4 இலக்கங்கள் | 1 | 100,000/- | 100,000/- |
| 4 இல. + லக்கினம் | 1 | 900,000/- | 900,000/- |
| இரண்டாவது வாய்ப்புக்கான மொத்தத் தொகை | 546 | | 1,272,000/- |

அடுத்த வெள்ளிக்கிழமைக்கான இரண்டாவது வாய்ப்பின் ஜக்பொட் ரூபா. 200,000/-

(சி/577272)

# மலேரியா - ஒரு கண்ணோட்டம்

இன்று உலக மலேரியா தினமாகும். இத்தினத்தில் உலகில் இருந்து இந்த நோயை வேரோடு அகற்றுவதற்கு அனைவரும் உறுதிபூண வேண்டும்.

மலேரியா நோயானது நுளம்பினால் பரப்பப்படும் ஒரு நோயாகும். அனோபிலிஸ், கியூலிசிபேசிஸ் எனும் இனத்தைச் சேர்ந்த பெண் நுளம்புகள் இந்த நோயைப் பரப்புகின்றன.

நூற்றுக்கும் மேலான நாடுகளில் மலேரியா ஒரு நிரந்தர நோயாகக் காணப்படுகின்றது. இந்த நாடுகளில் அனேகமானவை வெப்ப வலயத்தைச் சேர்ந்தவை. உலக சுகாதார ஸ்தாபனத்தின் அறிக்கையின் பிரகாரம் தற்போது ஒரு வருடத்துக்கு 200 முதல் 300 மில்லியன் வரையான நோயாளிகள் இனங்காணப்படுவதோடு ஒரு மில்லியன் மரணங்களும் இந்த நோயினால் நிகழ்ந்த வண்ணம் இருக்கின்றன.

இந்தத் தொற்று நோய் காரணமாக எமது நாட்டிலும் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் சீர்குலைந் தது. எமது நாட்டில் 1934 மற்றும் 1935ஆம் ஆண்டுகளில் உண்டான அதீத மலேரி யாத்

## இன்று உலக மலேரியா தினம்

தொற்றுக்களைத்தான் இலங்கையில் இதுவரை இடம்பெற்ற நோய்த் தொற்றுக்களில் கடுமையானதாகும். இதன்போது சுமார் 1.5 மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டதோடு சுமார் 80000 பேர் இறந்ததாகவும் அறிக்கைகள் கூறுகின்றன.

1945ஆம் ஆண்டு டி.டி.ரி.எனும் கிருநாசினி அறிமுகம் செய்யும் வரை மலேரியாவினால் பேரழிவு ஏற்பட்டு வந்தது. சுமார் 10 வருடங்களின் பின்னர் மலேரியா நோயாளிகள் அனைவருக்கும் சிகிச்சை வழங்கியதன் மூலம் இந்தநோயை அழித்து விட முடிந்தது. 1963ஆம் ஆண்டு காலப் பகுதியில் இந்த இலக்கை எட்டமுடிந்தாலும் 1969இல் மீண்டும் 1மில்லியன் வரை யான மலேரியா நோயாளிகள் இனங் காணப்பட்டனர்.

கடந்த 25 ஆண்டு காலத்தை உற்று நோக்கினால் 1987 மற்றும் 1991ஆம் ஆண்டுகளில் மலேரியா மிக அதிகமாகப் பரவியுள்ளமையை அவதானிக்க முடியும்.

நுளம்பு நோயாளி ஒருவரைக் கடிக்கும் போது அவரிடமிருந்து நோய் ஒட்டுண்ணி நுளம்பை அடையும். நுளம்பில் ஒட்டுண்ணிகள் சில நிலைகள் விருத்தி யடைந்து நுளம்பின் உமிழ்நீரினூடாக மீண்டும் சுகதேகி ஒருவரை நுளம்பு கடிக்கும் போது சென்றடையும். இந்தநோய் எந்தவோர் வயதினருக்கும் ஏற்படக்கூடிய ஒரு நோயாகக் காணப்படுவதோடு இதன் பிரதான அறிகுறி காய்ச்சல் ஆகும். குளிர் நடுக்கத்துடன் ஒரு நாள் விட்டு ஒருநாள் இக்காய்ச்சல் தோன்றக்கூடும்.

சாதாரணமாக ''வைவக்ஸ்'' வகை காய்ச்சல் தொற்றி ஏறக்குறைய14 நாள்களுக்குப் பின்னர் ''பல்சி பரம்'' காய்ச்சல் தொற்றும். அத்துடன் 10- 12 நாள்களுக்குப் பின்னரும் நோய் அறிகுறிகள் தோன்ற ஆரம்பிக்கும். இயன்ற ளவு சீக்கிரமாக இந்த நோயை அடையாளம் கண்டு சிகிச்சை பெறாவிட்டால் இந்த நோயின் பக்க விளைவுகள் மிகப் பயங்கரமாக இருக்கும். கர்ப்பிணித் தாய்மார்களுக்கு இந்த நோய் ஏற்படும்போது நிறை குறைவான குழந்தைகள் பிறப்பதற்கான சர்ந்தர்ப்பமும், சிசு மரணம் ஏற்படுவதற்கான சந்தர்ப்பமும் காணப்படுகின்றன.

இன்று யுத்த சூழ்நிலையில் பாதிக்கப்பட்டு மீளக்குடியேறியுள்ள வன்னி மாவட்டங்களில் மீண்டும் மலேரியா புத்துயிர்ப்புப் பெற ஆரம்பமாகியுள்ளது. யுத்த தாக்கங்களினால் அழிவுற்ற பல இடங்களில் இன்று நுளம்பு பெருக்கத்துக்கு ஏற்ற இடமாக மாறியுள்ளன. அத்தோடு மக்களின் சுகாதாரக் கேடான நடவடிக்கைகள் உதாரணமாக சட்டவிரோதமான மண் அகழ்வு, கிடங்குகள் வெட்டுதல், காரணமாகவும், மழை வீழ்ச்சி காலங்களில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள், இயற்கைச் சூழல் மாற்றங்கள் காரணமாகவும் மலேரியா பரவுதலுக்கான காரணிகளாக மாறியுள்ளன.

இலங்கையில் மலேரியாவின் தாக்கம் வெகுவாகக் குறைக்கப்பட்டுள்ளது. எனினும் வரலாற்றை நோக்கும்போது இந்த நோய் முற்றாக அழிந்து விட்டதாக நாம் கவனமின்றி இருத்தலாகாது. திடீரென இந்தநோய்த் தாக்கம் தீவிரமாகலாம்.

இந்தநோயைப் பூரணமாக ஒழிப்பதற்கு மலேரியாத் தடைப்பகுதியினருடன் பொதுமக்களும் கைகோர்த்து நிற்க வேண்டும். மலேரியா ஒழிப்புத் திட்டத்தில் முக்கியமானது காவிக்கட்டுப்பாடு . இதன்போது மருந்து விசிறல், புகையடித்தல் என்பது எமது ஊழியர்களால் நடைமுறைப்படுத்தப்படும் இந்தச் சந்தர்ப்பத்தில் மக்கள் தங்களின் வீடுகளுக்கு முழுமையாக மருந்து விசிற ஒத்துழைப்பு வழங்க வேண்டும். பூச்சி கொல்லி தெளிப்பதன் முக்கியத்துவத்தை பலர் உணராமல் தங்கள் வீடுகளுக்கு மருந்து விசிற அனுமதிப்பதில்லை. அல்லது பகுதியாக மருந்து விசிறும் படி கூறுகிறார்கள். இரத்தம் குடித்த நுளம்பு அறைகளின் இருட்டான பகுதிகளில் ஒய்வில் இருந்த பின்பே நோய்காவியாக வெளியில் செல்லும் அல்லது இன்னொருவரை கடிக்கும். இந்த நிலையில் பலர் தங்கள் படுக்கைஅறை, சமையல் அறைகளுக்கு மருந்து அடிக்க மறுப்பதன் மூலம் இந்நோய்க் காவி பரவுவதற்கு வழிசமைத்துக் கொடுக்கிறார்கள். இதனால் நுளம்பை அழிப்பதற்கு மலேரியா தடை இயக்கத்தினரால் மட்டும் முடியாது என்பது தெளிவாகின்றது.

இதே போன்று காய்ச்சல் வந்த நோயாளிகள் இரத்தப் பரிசோதனை மூலம் மலேரியா என உறுதிப்படுத்தினால் முழுமையான சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள வேண்டும். பலர் மலேரியாவுக்கு பாவிக்கும் மாத்திரைகளை முழுமையாகப் பாவித்து முடிப்பதில்லை. காய்ச்சல் நின்றவுடன் எஞ்சிய மருந்துகளை வீசிவிடுகின்றார்கள். இதனால் மீண்டும் மீண்டும் ஒருவருக்கு மலேரியா ஏற்படுகின்றது.

மலேரியா காவி நுளம்புகள் மாலை 6 மணி தொடக்கம் இரவு 10 மணி வரைக்கும் அதிகாலை 4-6 மணி வரையும் அதிகமாக இரத்தம் குடிக்கும். எனினும் இரவில் மற்ற நேரங்களிலும் கூட இவை குருதியை குடிக்க வாய்ப்புள்ளது.

செல்லத்துரை மதியழகன்,
பொதுசுகாதார வெளிக்கள உத்தியோகத்தர்.
மலேரியா தடுப்பு இயக்கம், கிளிநொச்சி.

இவை தூய, தெளிவான, ஆழமற்ற, மெதுவாக ஓடக்கூடிய அல்லது சலனமற்ற நன்கு சூரிய ஒளி படக்கூடிய நீரில் முட்டைகளை இடும். முட்டை குடம்பியாகி கூட்டுப் புழுவாகி நிறைவுடலியாக மாறி குருதியுறிஞ்சப் புறப்படும்.

எமது வன்னிப் பிரதேசத்தைப் பொறுத்த வரையில் இந்த நோய்த் தாக்கம் சில இடங்களில் இனங்காணப்பட்டுள்ளது. மக்கள் மீண்டும் வந்து குடியேறும் போது ஏற்கனவே ஆடு, மாடுகளில் குருதியை குடித்து வாழ்ந்த நுளம்புகள் மக்களை கடிக்கத் தொடங்குகின்றன. இந்நிலையில் தகுந்த பாதுகாப்புப் பெறத் தவறும் பட்சத்தில் இந்தநோய் மீண்டும் பெருகுவதைத் தடுக்க முடியாதுபோகும்.

எதிர்காலத்தில் எமது சமுதாயத்தின் சிறார்களும், கர்ப்பிணித் தாய்மார்களும் பாதுகாக்கப்படவேண்டும். சிசு மரணங்களும், நிறைகுறைவான பிறப்புக்களும் ஏற்படாமல் பாதுகாக்கவேண்டும்.





இஸ்ரேல், மேற்குக் கரையில் ஈஸ்டர் திருநாளை முன்னிட்டு நடந்த அணிவகுப்பில், பலஸ்தீனப் பிரதமர் சலாம் பயத் கலந்துகொண்டார்.

# ஏமன் ஜனாதிபதி சலேஷ் பதவியிலிருந்து விலக முடிவு

சானா, ஏப். 25

ஏமனில் ஜனாதிபதி பதவியிலிருந்து விலகுவதாக ஜனாதிபதி அலி அப்துல்லா சலேஷ் தெரிவித்துள்ளார். வளைகுடா நாடுகளின் ஆலோசனையின் படி தாம் இம்முடிவை எடுத்திருக்கிறார் என்று அவர் தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் தான் வகித்து வந்த பொறுப்புகள் அனைத்தும் துணை ஜனாதிபதியிடம் ஒப்படைப்பதாக ஜனாதிபதி தெரிவித்துள்ளார். இதன் மூலம் 32 ஆண்டு காலமாக பதவி வகித்து வந்த ஜனாதிபதி பதவி விலகக் கோரி கடந்த 30 நாட்களுக்கும் மேலாக பல்வேறு போராட்டங்கள் நடைபெற்று வந்தது.

போராட்டத்தில் சுமார் 120 பேர் வரை கொல்லப்பட்டனர். ஜனாதிபதியின் பதவி விலகல் முடிவை அமெரிக்கா வரவேற்றுள்ளது.

பதவி விலகல்குறித்து கருத்துத் தெரிவித்துள்ள ஏமன் எதிர்க்கட்சித் தலைவர் யூாசின் நோமன் உடனடியாக தேசிய ஐக்கிய அரசு பதவி ஏற்க இயலாது என்று தெரிவித்துள்ளார்.

பதவி இழந்த டுனீஷிய ஜனாதிபதி ஜினி அல் அபிதினி பென் அலி, எகிப்து ஜனாதிபதி ஹோசினி முபாரக் ஆகியோர் வரிசையில் தற்போது ஏமன் ஜனாதிபதியும் இணைந்துள்ளார்.

ஐக்கிய அரபு எமிரேட் நாடுகள் ஏமன் ஜனாதிபதி பதவி விலக ஒப்பந்தங்கள் செய்திருந்தன. அதன்படி துணை ஜனாதிபதியிடம் அதிகாரத்தை ஒப்படைப்பது, இடைக்கால அரசு மூலம் ஜனாதிபதித் தேர்தலை நடத்துவது, ஜனாதிபதி, அவரது குடும்பத்தினர் ஆகியோருக்கு உரிய பாதுகாப்பு அளிப்பது ஆகிய ஒப்பந்தங்கள் செய்திருந்தன.

# சீன ஞானி கன்பூசியஸ் சிலை திடீரென அகற்றம்

பீஜிங், ஏப். 25

சீனத் தலைநகர் பீஜிங்கில், கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய அருங்காட்சியகத்தின் முன் வைக்கப்பட்டிருந்த சீன ஞானி கன்பூசியஸ் சிலை திடீரென அகற்றப்பட்டுள்ளது.

பீஜிங்கில், தியானன்மென் சதுக்கத்தின் அருகில் கம்யூனிஸ்ட் கட்சியின் தேசிய அருங்காட்சியகம் உள்ளது. இதன் வடக்கு வாசலில் கடந்த ஜனவரி மாதம், சீன ஞானி கன்பூசியஸ் சிலை நிறுவப்பட்டது.

இந்த விவகாரம் குறித்து கடந்த சில மாதங்களாக, இணையதளங்களில் பலர் காரசாரமாக விவாதித்து வந்தனர். 17 தொன் எடையும், 30 அடி உயரமும் கொண்ட கன்பூசியஸ் சிலை, அருங்காட்சியகத்தின் முன் நிறுவப்பட்டதன் மூலம், 1960 - 70ஆம் ஆண்டுகளில் சீனாவில் மாவோ ஆட்சியில் நடந்த கலாசாரப் புரட்சியில், அவருக்கு இழைக்கப்பட்ட அவமரியாதை துடைத்து எறியப்பட்டது என்று சிலர் கூறினர்.

ஆனால், கன்பூசியசையோ, அவரது கருத்துகளையோ கம்யூனிஸ்ட் கட்சி பயன்படுத்தக் கூடாது என்று சிலர் கூறினர். அருங்காட்சியகத்தின் முன் நின்றிருந்த கன்பூசியஸ் சிலை திடீரென அகற்றப்பட்டுவிட்டது. இந்த விவகாரமும் இப்போது சர்ச்சைக்குரியதாகி விட்டது.

சில பத்திரிகைகள், அவர் பொருளாதாரக் குற்றத்தில் ஈடுபட்டதால் பொலிஸார் அவரை தூக்கிச்சென்று விட்டனரோ என்றும், அவர் கம்யூனிஸ்ட் இல்லை என்பதால் அவரை அகற்றி விட்டனரோ என்றும் கிண்டலடித்துள்ளன.

கம்யூனிஸ்ட் ஆதரவு பத்திரிகைகள், இந்தச் சிலை அகற்றத்தை வரவேற்றுள்ளன.

# 70 இற்கும் மேற்பட்டோர் படுகொலை: சிரியா அரசுக்கு பான் கீ-மூன் கண்டனம்

நியூயோர்க், ஏப். 25

சிரியாவில் வெள்ளிக்கிழமை அரசுப் படைகளால் 70 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கொல்லப்பட்டதற்கு ஐ.நா. செயலாளர் நாயகம் பான் கீ-மூன் கண்டனம் தெரிவித்துள்ளார்.

சிரியா, அமைதியான முறையில் போராடும் தனது மக்கள் மீது வன்முறையை பிரயோகிப்பதை முதலில் நிறுத்தவேண்டும் என்று பான் கீ-மூன் வலியுறுத்தியுள்ளார்.

நடைபெற்ற படுகொலைகள் குறித்து வெளிப்படையான, சுதந்திரமான விசாரணை நடத்த வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார் என ஐ.நாவின் செய்தித் தொடர்பாளர் பர்ஹான் ஹக் தெரிவித்தார்.

சிரியா அரசு சர்வதேச மனித உரிமைகளை மதித்து நடப்பதுடன் மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்று பான் கீ-மூன் கூறியுள்ளார் என்றும் பர்ஹான் தெரிவித்தார்.

பத்திரிகைச் சுதந்திரத்தையும் சிரியா அரசு மதித்து நடக்க வேண்டும் என்று பான் கீ-மூன் கேட்டுள்ளார் என்றும் அவர் மேலும் கூறினார்.

இதற்கிடையில் உலகின் பல்வேறு நாடுகளின் தலைவர்களும் இந்தப் படுகொலை குறித்து கண்டனம் தெரிவித்துள்ளனர். அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா இத்தகைய வன்முறைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று தமது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மக்களின் போராட்டங்களை ஈரானின் உதவியுடன் சிரியா நசுக்குவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார். இந்தப் படுகொலைகளுக்குக் காரணமானவர்கள் கண்டறியப்பட்டு நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்று பிரான்ஸும் தனது கண்டன அறிக்கையில் வலியுறுத்தியுள்ளது.

**புதிய வெள்ளிரும்பு கொள்கலன் செய்வதற்கான கூறுவிலை கோரல்**

மேற்படி வடமராட்சி திக்கம் வடிசாலைத் தேவைக்காக 13400 லீற்றர் அளவுடைய புதிய வெள்ளிரும்புக் கொள்கலன்கள் இரண்டு செய்யவேண்டியிருப்பதால் அதனை செய்வதற்கான கூறுவிலைகள் கோரப்படுகின்றன. மேற்படி வேலையை செய்வதற்கான கூறுவிலையைத் தருவதற்கு வடிசாலைக்கு வருகை தந்து எம் மால் வழங்கப்படும் படிவத்தைப் பூர்த்தி செய்து 10.05.2011 ஆம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தலைவர்,
வடமராட்சி ப.தெ.வ.அ.கூ.ச. கொத்தணி. (சி/577923)

**கோழிக்குஞ்சு விநியோகம்**

தடுப்பு மருந்து போடப்பட்ட தரமான பிறிமா No. 1 புறொயிலர் கோழிக்குஞ்சுகள் நியாயமான விலையில் (100/=). 28.04.2011 காலை விநியோகிக்கப்படும். முன் பதிவுசெய்யவும்.

★ சுட்டி பாம் சென்ரர், வட்டுக்கோட்டை 0778996085
★ சன்னதி பாம் சென்ரர், தொண்டமனாறு 0776904590
★ நெல்லியடி பல்பொருள் விற்பனை நிலையம், நெல்லியடி 0774656377
★ முகுந்தன், பருத்தித்துறை 0771392593

திருப்பி கோழிகள் கொள்வனவு செய்யப்படும்.

நல்லூர் பாம் சென்ரர் 19, முருகேசர் லேன், நல்லூர்,
தொ.பே இல:- 021 222 6944.

**தந்தை செல்வநாயகம் அவர்களின் 34 ஆவது ஆண்டு நினைவு நாள்**

**அஞ்சலி நிகழ்ச்சி**



காலம்: நாளை (26.04.2011) செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணி
இடம்: தந்தை செல்வா நினைவிடம் தந்தை செல்வா சதுக்கம், யாழ்ப்பாணம்.
தலைவர்: அருட்கலாநிதி சு.ஜெபநேசன் அவர்கள் -தலைவர், தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழு

**சர்வமத பிரார்த்தனை**

வரவேற்புரை: பேராசிரியர் ச.சத்தியசீலன் அவர்கள் செயலாளர், தந்தை செல்வா நினைவு அறங்காவற்குழு
சர்வமதப் பிரார்த்தனை:
நினைவுரை : பேராசிரியர் இ.சிவச்சந்திரன்
நன்றி : திரு.பெ. கனகசபாபதி தந்தை செல்வா அறங்காவற் குழு உறுப்பினர்

தமிழ்த் தேசியத்தின் தந்தை அவர்களை நினைந்து இந்த அஞ்சலி நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ்ப்பாணம். (சி/577924) தந்தை செல்வா நினைவு அறங்காவற் குழு.

**சனிக்கிழமை அதிர்ஷ்டம்**

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2217 திகதி 23 - 04 - 2011

ஆங்கில எழுத்திற்கும் Q

வெற்றி எண்கள் 09 14 36 38

போனஸ் இல: 01

ஜக்பொட் பரிசு ரூ. 21,172,025/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 165829 | 20/- | 3,316,580/- |
| 2 இல | 11852 | 100/- | 1,185,200/- |
| 3 இல | 235 | 1,000/- | 235,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 6715 | 40/- | 268,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 471 | 1,000/- | 471,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 15 | 10,000/- | 150,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 21,172,025/- | - |
| 1 இல + போனஸ் இல | 7860 | 100/- | 786,000/- |
| 2 இல + போனஸ் இல | 369 | 500/- | 184,500/- |
| 3 இல + போனஸ் இல | 03 | 100,000/- | 300,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 313 | 200/- | 62,600/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 15 | 1,500/- | 22,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000/- | - |
| மொத்தம் | | | 8,981,980/- |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 10 | 60,000/- | 600,000/- |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 193689 | | 9,581,980/- |

ரூ. 60,000/- வீதம் பணப்பரிசுகளை வெற்றிபெற்ற 10 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| அம்பாறை | 303100047-3-14 |
| மொனராகலை | 303092546-8-33 |
| மாத்தளை | 303106335-3-18 |
| பதுளை | 303109020-7-45 |
| அம்பாந்தோட்டை | 303094343-0-38 |
| திருகோணமலை | 303096027-8-26 |
| கொழும்பு | 303097286-8-46 |
| யாழ்ப்பாணம் | 303099119-3-08 |
| கம்பஹா | 303096385-4-16 |
| பொலன்னறுவை | 303096800-5-33 |

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு
ரூ.21,625,700/-

ஊதா நிற டிக்கட்டுகள் 2011 ஏப்ரல் 27 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு
அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிலேஸ், கொழும்பு - 02
தொ.பே. 2333546/7

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்கப் பயிலும் வரையான முழுக்கட்டணம் 5000/= By விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302) K.K.S. வீதி, யாழ்ப்பாணம்.
(3494) Tel: 0776751649 (44-)

**மணமகள் தேவை**

1981 இல் பிறந்த MBBS டாக்டர் மகனுக்கு பெற்றோர் மணமகளை எதிர்பார்க்கின்றனர். MBBS டாக்டர் 28 வயதுக்குக் குறைந்த RC மணமகள் தேவை.
தொடர்பு: 0213219124
0772850795
(3496) (44-)

**கோண்டாவில் கிழக்கில் வீடு விற்பனைக்கு**

பலாலி வீதிக்கு அண்மையில் கோண்டாவில் கிழக்கில் இராசவீதியையும் பலாலி வீதியையும் இணைக்கும் கோட்டைக்காடு வீதியில் பரப்பு 1½ நிலத்தில் அமைந்துள்ள வீடு, சுற்று மதிலுடன் உடன் விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.
தொடர்புகளுக்கு: 0779633993.

# ஒபாமா பேசிய கூட்டத்தில் ஆர்ப்பாட்டம்: பிரேட்லியை விடுவிக்குமாறு கோரிக்கை

வாஷிங்டன், ஏப். 25

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா கலந்துகொண்ட ஒரு கூட்டத்தில், 'விக்கிலீக்ஸ்' வழக்கில் கைதாகியுள்ள இராணுவச் சிப்பாய் பிரேட்லி மேனிங்கை விடுதலை செய்யவேண்டும் என்று சிலர் ஆர்ப்பாட்டம் செய்ததால் அங்கு சிறு சலசலப்பு ஏற்பட்டது.

அமெரிக்காவில் அடுத்தாண்டு, ஜனாதிபதித் தேர்தல் நடக்கவுள்ளது. அதில் மீண்டும் போட்டியிடுவதற்கான ஆரம்பக்கட்ட முயற்சிகளில் ஜனாதிபதி ஒபாமா இறங்கியுள்ளார். அதற்காக நிதி திரட்டும் கூட்டங்களை நடத்தி வருகிறார்.

கலிபோர்னியா மாகாணத்தில் சான்பிரான்சிஸ்கோவில் சனிக்கிழமை நிதி திரட்டும் கூட்டம் ஒன்றில் அவர் கலந்துகொண்டார். அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள வேண்டுமானால், 15இலட்சத்து 75 ஆயிரம் ரூபாய் கட்டணமாகச் செலுத்த வேண்டும்.

கூட்டத்தின் பின் பகுதியில் பலர் மேசைகளைச் சுற்றி அமர்ந்திருந்தனர். அவர் பேசிக்கொண்டிருந்தபோது, ஒரு மேசையின் அருகில் உட்கார்ந்திருந்த ஒரு பெண் எழுந்து, ''ஜனாதிபதி அவர்களே! தேர்தலில் எங்கள் வாக்கு உங்களுக்குத்தான். உங்களுக்காக நாங்கள் ஒரு பாடல் இயற்றியுள்ளோம்'' என்று கூறினார்.

ஒபாமா பதில் கூறுவதற்குள், அந்தப் பெண்ணும் அவரைச் சுற்றியிருந்த 10 பேரும் சேர்ந்து அவர்கள் எழுதிய பாடலைப் பாடினர். அப் பாடல், 'விக்கிலீக்ஸ்' விவகாரத்தில் கைதாகியுள்ள அமெரிக்க இராணுவச் சிப்பாய் பிரேட்லி மேனிங்கை விடுதலை செய்ய வேண்டும் என்ற பொருளில் எழுதப்பட்டிருந்தது.

தொடர்ந்து, ''மேனிங்கை விடுதலை செய்'' என்று எழுதப்பட்ட சிறிய பதாதைகளையும், அவரது புகைப்படங்களையும் காண்பித்தனர். அந்தப் பெண் தனது மேல்கோட்டைக் கழற்றி அதற்குள் அணிந்திருந்த டீ சேர்ட்டையும் கழற்றினார்.

பரபரப்படைந்த பாதுகாப்புச் சிப்பாய் ஒருவர் அவர் அருகில் வந்தார். அப்போது அந்தப் பெண் உள்ளுக்குள் அணிந்திருந்த மற்றொரு பனியனில் மேனிங் படம் பொறிக்கப்பட்டிருந்தமை தெரியவந்தது.

திடீரென்று எழுந்த இந்தக் குழப்பத்தால் சிறிதுநேரம் ஒபாமா திகைத்தபடி நின்றிருந்தார். அதற்குள், பாதுகாப்புச் சிப்பாய்கள் சிலர், 10 பேரையும் அந்த இடத்திலிருந்து அகற்றினர்.

அவர்கள் சென்ற பின் பேசிய ஒபாமா, ''நல்ல பாடல்! என்னை விட இவர்களின் குரல் வளம் நன்றாக இருக்கிறது! படைப்புத் திறனுக்கு இது ஒரு நல்ல எடுத்துக்காட்டு!'' என்று கூறி சமாளித்தபடி தனது உரையை விட்ட இடத்திலிருந்து ஆரம்பித்தார்.



கம்போடியா தலைநகர் ப்நோம்பெனில் நடந்த விழாவில் கலந்துகொள்வதற்காக பிரதமர் ஹன் சென்(வலது), வியட்நாம் பிரதமர் நக்யான் டன்டங் ஆகியோர் வருகின்றனர்.

# மர்லின் மண்ட்ரோ எழுதிய கடிதம் ஏலத்தில் விற்பனை

லொஸ் ஏஞ்சல்ஸ், ஏப். 25

பிரபல ஹொலிவுட் நடிகை மர்லின் மண்ட்ரோ தனது 16 ஆவது வயதில் தனது திருமண வாழ்க்கை குறித்து தனது வளர்ப்புத் தாய்க்கு எழுதிய கடிதம் தற்போது 52 ஆயிரத்து 460 அமெரிக்க டொலர்களுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளது.

மர்லிண் மண்ட்ரோ தனது கைப்பட எழுதிய 8 பக்கங்களைக் கொண்ட இந்தக் கடிதம் ஏப்ரல் 20ஆம் திகதி யன்று சாள்ஸ் வில்லியம்சன் என்பவரால் 1.53 மில்லியனுக்கு வாங்கப்பட்டது. இந்தக் கடிதம் தற்போது மீண்டும் ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

சுமார் 600 சொந்தக் கடிதங்கள், ஆவணங்கள், புகைப்படங்கள், ஓவியங்கள் உள்ளிட்ட பொருட்கள் இந்த ஏலத்தில் இடம்பெற்றன. இதில் மர்லின் மண்ட்ரோவின் கடிதம் அதிகபட்சமாக 52 ஆயிரத்து 460 டொலர்களுக்கு விற்பனை செய்யப்பட்டது. இந்தக் கடிதம் 25 ஆயிரம் முதல் 35 ஆயிரம் டொலர்களுக்கு விற்பனையாகும் என முதலில் எதிர்பார்க்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வெனிசுலாவில் வெள்ளம்; 6 குழந்தைகள் மரணம்

கரகாஸ், ஏப். 25

வெனிசுலாவின் வடமேற்குப் பகுதியில் தொடர் மழை காரணமாக வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது. இதில் 6 குழந்தைகள் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு பலியாகி உள்ளனர். வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்ட பெரியவர்கள் 3 பேரை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

வெள்ளம் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.பாதிக்கப்பட்ட மக்கள் தற்காலிக முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

# ஆளில்லா விமானம் மூலம் குண்டு வீச அமெரிக்கா திட்டம்

திரிபோலி, ஏப். 25

போராட்டம் நடத்தும் மக்கள் மீது தாக்குதல் நடத்தும் கடாபியின் இராணுவத்தை யும் இராணுவ தளத்தையும் குண்டு வீசி அழிக்க அமெரிக்கா அதிரடி திட்டத்தை மேற்கொண்டுள்ளது. அதற்கான ஆளில்லா விமானங்கள் மூலம் குண்டுகளையும் ஏவுகணைகளையும் வீச திட்டமிடப்பட்டுள்ளது.

ஆப்கானிஸ்தான்,பாகிஸ்தான் மலைப்பகுதியில் பதுங்கியிருக்கும் தீவிரவாதிகள் இது போன்று தான் குண்டு வீசி அழிக்கப்பட்டு வருகின்றனர். அதேபோல் இங்கும் பயன்படுத்தப்படவுள்ளது. அதற்கான ஒப்புதலை ஒபாமா அரசு அளித்தது.

இந்தத் தகவலை இராணுவ அமைச்சர் ரொபர்ட் கேட்ஸ் தெரிவித்தார். ஆரம்பத்தில் 2 ஆளில்லா விமானங்கள் மட்டுமே பயன்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு, லிபியா அரசு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

ஆளில்லா விமானங் களைப் பயன்படுத்துவதன் மூலம் ஏராளமான பொதுமக்களும் பலியாக நேரிடும் எனத் தெரிவித்துள்ளது.

# தாய்லாந்து-கம்போடியா எல்லையில் சண்டை

தாய்லாந்து இராணுவத்துக்கும் கம்போடிய இராணுவத்துக்கும் இடையிலான சண்டை இரு நாடுகளின் எல்லையில் மீண்டும் ஆரம்பமாகியுள்ளது. எல்லையை ஒட்டி கம்போடிய பகுதியிலுள்ள ஆலயத்தை தனதாக்கிக்கொள்ள தாய்லாந்து இராணுவம் தொடர்ந்து போராடி வருகிறது. இதனால் இரு நாடுகளுக்குமிடையே அடிக்கடி மோதல் நடைபெறுகிறது.

ஒரு நாள் இடைவெளிக்குப் பின்னர் வெள்ளிக்கிழமை நடைபெற்ற மோதலில் 6 இராணுவச் சிப்பாய்கள் உயிரிழந்தனர். இதனால் எல்லைப் பகுதியை ஒட்டி அமைந்துள்ள இடங்களில் வாழும் ஆயிரக்கணக்கான பொதுமக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு அப்புறப்படுத்தப்பட்டனர்.

பல ஆண்டுகளாக நீடித்துவரும் இந்தப் பிரச்சினை காரணமாக இரு நாடுகளின் இராணுவத்தினரிடையே 2008ஆம் ஆண்டிலிருந்து மோதல் அதிகரித்துள்ளது. கடந்த பெப்ரவரி மாதம் 4 நாள்கள் தொடர்ந்து மோதல் நீடித்தது. இதற்குப் பின்னர் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற மோதலில் இராணுவச் சிப்பாய்கள் உயிரிழந்தனர்.

கம்போடியாவின் எல்லைப் பகுதியில் அமைந்துள்ள ஆலயம் ஒன்று 11ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்டது. இதை உலக புராதன சின்னமாக ஐக்கிய நாடுகள் சபை அறிவித்தது. இதனால் இதைக் கைப்பற்ற தாய்லாந்து முயற்சிக்கிறது. இதனால் அடிக்கடி எல்லைப் பகுதியில் சண்டை ஏற்பட்டு வருகிறது. (ம)

# மனித உரிமை மீறல்கள் ; அமெரிக்கா - சீனா பேச்சு

வாஷிங்டன், ஏப். 25

சீனாவில் மனித உரிமை மீறல்கள் அதிகரித்து வருவது குறித்து, அமெரிக்காவும், சீனாவும் அடுத்த வாரம் பேச்சுகள் நடத்தத் திட்டமிட்டுள்ளன.

சீனாவில், ஆளும் கம்யூனிஸ்ட் கட்சிக்கு எதிராக யார் போர்க்கொடி தூக்கினாலும் அவர்களின் கதி அதோ கதிதான். அரசுக்கு எதிராகப் போராடியவர்கள் பலர் காணாமல் போய்விட்டனர்; பலர் கைது செய்யப்பட்டுள்ளனர்; பலர் தண்டனை பெற்றுள்ளனர்.

இதுகுறித்து, சர்வதேச நாடுகள் பல தடவைகள் கண்டனம் தெரிவித்துள்ளன. எனினும், சீனா அதை கண்டுகொள்ளாமல், தனது மனித உரிமை மீறல்களை நடத்தி வருகிறது எனக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

சீனாவின் பிரபல ஓவியக் கலைஞரான அய்(வயது - 53) தற்போது சிறையில் உள்ளார். இதனால், சீனாவில் மனித உரிமை மீறல்கள் அதிகரித்து வருகின்றனர் குறித்து அமெரிக்கா கவலை கொண்டுள்ளது.

இதுகுறித்து, இம்மாதம் 27ஆம், 28ஆம் திகதிகளில் பேச்சுகள் நடத்த அமெரிக்கா திட்டமிட்டுள்ளது. இதற்கு சீனாவும் ஒப்புதல் தெரிவித்துள்ளது.

# விசா இல்லாத பயணத்தை ரத்து செய்ய பிரான்ஸ் தீவிரம்

விசா இல்லாமல் சுதந்திரமாக செனகன் பகுதியில் பயணிக்கும் முறையை தற்காலிகமாக ரத்து செய்ய பிரான்ஸ் தீவிரமாக முயற்சிக்கிறது.

பாதுகாப்பு காரணங்களுக்காக இந்த நடவடிக்கையை மேற்கொள்ள பிரான்ஸ் விரும்புகிறது.

டுனிஷியா மற்றும் லிபியா உள்நாட்டுப் போராட்டங்களால் அந்த நாடுகளைச் சேர்ந்த மக்கள் பிரான்சுக்கு இடம் பெயர்ந்து வருகிறார்கள்.

ஆபிரிக்க தேச மக்கள் அதிக அளவில் ஊடுருவி வருவதைத் தடுக்க பிரான்ஸ் விரும்புகிறது. இந்த ஆண்டில் இது வரை டுனிஷியா, லிபியா, எகிப்து பகுதியில் இருந்து 26 ஆயிரம் பேர் இடம் பெயர்ந்து வந்துள்ளதாக இத்தாலி கூறுகிறது.

பிரான்ஸ் சமீபத்தில் இத்தாலி ரயிலில் வந்த டுனிஷியர்களை வரவிடாமல் எல்லையை மூடியது. இதனால் இத்தாலி ரயில் பிரான்சில் நுழைய முடியவில்லை. இதனால் இத்தாலி-பிரான்ஸ் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் செனகன் விசா இல்லாத பயண ஒப்பந்தத்தை பிரான்ஸ் மீறுகிறது என இத்தாலி குற்றம் சாட்டியது. போராட்டக்காரர்கள் ரயிலில் வந்ததால் பாதுகாப்பு காரணங்களுக்காக பிரான்ஸ் மூடியது. அது தவறு இல்லை என ஐரோப்பிய ஒன்றியமும் கூறியது.

செனகன் பகுதி 25 நாடுகளை உள்ளடக்கியது. இதில் 22 நாடுகள் ஐரோப்பிய உறுப்பினர் நாடுகள் ஆகும். இந்த எல்லைப் புகுதி நுழைவு மற்றும் வெளியேற்றக் கட்டுப்பாடுகளைக் கொண்டுள்ளது.

ஒலிம்பிக் போன்ற சர்வதேச விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் போது பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படும். அது போன்ற தருணத்தில் தற்காலிக எல்லைக் கட்டுப்பாடுகளை மேற்கொள்ளலாம் என ஐரோப்பிய ஒன்றியம் கூறியுள்ளது.

# ஈழத் தமிழர்களைப் படுகொலை செய்து அழித்த இலங்கை அரசுக்கு தண்டனை கொடுக்க வேண்டும்

## இந்திய அரசிடம் ராமதாஸ் வேண்டுகோள்

சென்னை, ஏப்ரல்.25

ஈழத் தமிழர்களைக் கொன்று குவித்த இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு நீதிமன்றத்தில் தண்டனை பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக விடுத்துள்ள அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

ஈழத்தில் நடந்த இனப் படுகொலைகள் மற்றும் மனிதஉரிமை மீறல்கள் உலகமே அறிந்தவைதான் இருந்த போதிலும், இப்போது ஐ.நா. அமைப்பின் மூலமாக அதிகார பூர்வமாக அம்பலத்திற்கு வந்திருக்கின்றன. இது பற்றி விசாரணை நடத்திய ஐ.நா. குழு, இலங்கைப் போரின்போது பாதுகாப்பு வலயம் என்று அறிவிக்கப்பட்ட பகுதிகளுக்கு தமிழ் மக்களை இடம் பெயரச் செய்து, செயற்கைக்கோள் உதவியுடன் அவர்களை இலங்கைப் படையினர் குறி வைத்து தாக்குதல் நடத்தி கொலை செய்தமையை உறுதி செய்திருக்கிறது.

தமிழ்ப் பெண்கள் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டமை, அரசை எதிர்ப்போர் கடத்திச்செல்லப்பட்டு கொடுமைப்படுத்தப்பட்டமை ஆகிய வற்றுக்கும் ஆதாரங்கள் இருப்பதாக ஐ.நா. குழு கூறியுள்ளது. தமிழர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட இந்தக் கொடுமைகள் குறித்து முழுமையாக விசாரணை நடத்த சர்வதேச விசாரணை ஆணையம் ஒன்றை அமைக்க வேண்டும் என்றும் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூனுக்கு அந்தக்குழு பரிந்துரைத்துள்ளது.

ஐ.நா. குழுவின் அறிக்கையைத் தொடர்ந்து ராஜபக்ஷ மீது போர்க்குற்ற நடவடிக்கை எடுக்க மனிதஉரிமை அமைப்புகள் வலியுறுத்தியுள்ளன. உலகின் செல்வாக்குள்ளோர் பட்டியலில் ராஜபக்ஷவை 4 ஆவது இடத்தில் தெரிவுசெய்திருந்த டைம்ஸ் பத்திரிகை அவரை அந்தப் பட்டியலிலிருந்து நீக்கியுள்ளது.

ஐ.நா. குழு பரிந்துரைத்தவாறு இலங்கைப் போர்க்குற்றங்கள் பற்றி சர்வதேச விசாரணை ஆணையத்தை அமைத்து விசாரணை நடத்த வேண்டும். தமிழர்களைக் கொன்று குவித்த இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கூண்டில் ஏற்றி தண்டனை பெற்றுத்தரவேண்டும்.

ஐ.நா. குழுவின் அறிக்கை வெளியிடப்பட்ட பின்னர் இதற்காக எழும் முதல் குரல் இந்தியாவினுடையதாக இருக்க வேண்டும். ஏழு கோடி இந்தியத் தமிழர்களின் தொப்புள் கொடி உறவான ஈழத் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்காக குரல் கொடுத்து ராஜபக்ஷவிற்கு தண்டனை பெற்றுத்தருவதன் மூலம் மனித உரிமைகளை பாதுகாப்பதில் இந்தியா எந்த நாட்டிற்கும் சளைத்த தல்ல என்பதை மத்திய அரசு நிரூபிக்க வேண்டும்.



ஐ.நா. அறிக்கை வெளியான பிறகும் இலங்கையில். தமிழர்களுக்குத் துன்பம் தொடர்கிறது. இன்னும் 16 ஆயிரம் தமிழர்கள் அகதி முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களை விடுதலை செய்து அவர்களது சொந்த ஊர்களில் குடியமர்த்தவும் இந்தியா நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு அவர் கூறியுள்ளார். (வ)

# மறுகளத்தில் வெற்றியடைவோம்; நம்பிக்கை கூறுகிறார் வைகோ

ஒரு களத்தை இழந்தால் மறுகளத்தில் வெற்றிபெறுவோம் என்ற நம்பிக்கை எனக்கு எப்போதும் உண்டு என்று ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ கூறியுள்ளார்.

ஆலங்குளத்தில் ம.தி.மு.க மாவட்ட பிரதிநிதி இல்ல திருமண விழாவில் கலந்து கொண்டு அவர் பேசியபோது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசுகையில்:

தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலை விடயத்தில் ஒரு தர்ம யுத்தம் நடந்து வருகிறது. நாக்பூர் சுற்றுச்சூழல் ஆய்வு மையம் மேற்கொண்டு வரும் ஆய்வில் பங்கேற்று விட்டு தான் இந்த விழாவுக்கு வந்துள்ளேன்.

எனது பேரன் டென்னிஸ் விளையாட்டுப் போட்டியில் பங்கேற்கப் போவதாகக் கூறினான். அவனுக்கு வயது 9. அவனிடம் நான் கூறியது ஒன்றே ஒன்று தான். ஒருவேளை போட்டியில் தோற்றாலும் துவண்டுவிடக்கூடாது என்று. உன் தாத்தா பார்க்காத தோல்வியா, ஒரு களத்தை இழந்தால் மறுகளத்தில் வெற்றிபெறுவோம் என்ற நம்பிக்கை எப்போதும் எனக்கு உண்டு என்றேன்.

பெருந்தலைவர் காமராஜரை தேடிப் பதவி வந்தது. தனிப் பெரும்பான்மையோடு இருந்தபோதிலும் மக்கள் நலனுக்காக பதவியை துச்சமென நினைத்துத் தூக்கி எறிந்தார். ஆனால் இன்று எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை கிடைக்காது என்ற பேச்சு எழுந்துள்ளது. இந்த விடயத்தை மையப்படுத்தி 500 கோடி ரூபா வரை பந்தயம் நடப்பதாக செய்திகள் வருகின்றன.

முல்லைப் பெரியாறு, ஸ்டெர்லைட் என மக்கள் நலனுக்காக போராடி வரும் இயக்கம் மதிமுக. எமது இனத்திற்கு தீங்கு விளைவித்து வரும் ராஜபக்ஷ இந்தியா வருகையின் போது ராஜ உபசாரம் நடந்தது.

கிரிக்கெட்டில் இந்தியா வெற்றி பெற்றதுக்கு கிரிக்கட் ரசிகர்கள் வாழ்த்துத் தெரிவிக்கின்றனர்.

அதே நேரம் இலங்கை தோல்வியால் 4 தமிழக மீனவ குடும்பங்கள் நிலை குலைந்து போனதே, இதையேல்லாம் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும் என்றார் அவர். (வ)



கொறண
சுடு நீர் சவர்
ஒரு வருட உத்தரவாதம்
ரூ- 5450/-
டயிட்டஸ் ஸ்டோர்ஸ்
கோட்டை 2439422 லிபர்ட்டி பிளாஸா

# மேற்கு வங்கத்தில் சட்டம், ஒழுங்கு சீர்குலைவு

## பிரதமர் குற்றச்சாட்டு

மேற்கு வங்காள மாநிலத்தின் சட்டம், ஒழுங்கு நிலைமை மோசமாக இருப்பது மிகவும் கவலை அளிக்கிறது. தேர்தலுக் குப் பின்னர் காங்கிரஸ்- திரிணாமுல் காங்கிரஸ் கூட்டணி ஆட்சிக்கு வந்தால் அமைதியை நிலை நாட்டு வதே முதல் பணியாக இருக்கும். இவ்வாறு தெரிவித்தார் பிரதமர் மன் மோகன் சிங்.

முதன் முதலாக பிரதமர் மன்மோகன் சிங் நேற்று முன்தினம் சூறாவளி பிரசாரம் மேற்கொண்டார். கத்வா நகரில் நடந்த தேர்தல் பிரசார கூட்டத் தில் அவர் மேற்கண்டவாறு கூறினார்.

பிரசாரத்தின் போது அவர் மேலும் கூறுகையில்:

நிர்வாகச் சக்கரம் முற்றிலுமாக ஸ்தம்பித்து விட்டது. விவசாயம், முதலீடு, கல்வி, சுகாதாரம் என அனைத்துத் துறைகளும் சேற்றில் விழுந்ததுபோல மீள முடியாமல் சிக்கித் தவிக்கின்றன. மேலும் அனைத்து மட்டங்களிலும் வளர்ச்சியைக் காண நடவடிக்கைகள் எடுக்கப்படும். இது மாற்றத்துக்கான நேரம். காங்கிரஸ்-திரிணாமுல் காங்கிரஸ் கூட்டணியால் மட்டுமே மாநிலத்துக்கு புதிய வாழ்க் கையை அளிக்க முடியும். தொழில் வளர்ச்சி மூலமாக வேலைவாய்ப்புகளை உருவாக்க மாநில அரசு தவறிவிட்டது. ஏனைய மாநிலங்களை விட மேற்கு வங்காளத்தில் அரசு பணிகளில் முஸ்லிம்களின் எண்ணிக்கை குறைவாக உள்ளது என்று அவர் கூறினார். (வ)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் - 111
திகதி - 26.03.2011
ஜாதிக சம்பத Jathika Sampatha
உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றியீட்டும் ஆங்கில எழுத்து Y அதிர்ஷ்ட இலக்கம் 10 வெற்றி இலக்கம் 7 5 7 4 8

வலமிருந்து இடமாக பரிசு அமைப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| சுப்பர் பரிசு | Y 10 7 5 7 4 8 | ரூ. | 13,854,148.00 | பரிசு - |
| 1 பரிசு | 10 7 5 7 4 8 | ரூ. | 2,000,000.00 | பரிசு - |
| 2 பரிசு | 7 5 7 4 8 | ரூ. | 100,000.00 | பரிசு 03 |
| 3 பரிசு | 5 7 4 8 | ரூ. | 10,000.00 | பரிசு 29 |
| 4 பரிசு | 7 4 8 | ரூ. | 1,000.00 | பரிசு 285 |
| 5 பரிசு | 4 8 | ரூ. | 50.00 | பரிசு 2769 |
| 6 பரிசு | 8 | ரூ. | 20.00 | பரிசு 26717 |

இடமிருந்து வலமாக பரிசு அமைப்பு

| | | | | |
|---|---|---|---|---|
| 7 பரிசு | 7 5 7 4 | ரூ. | 1,000.00 | பரிசு 29 |
| 8 பரிசு | 7 5 7 | ரூ. | 100.00 | பரிசு 276 |
| 9 பரிசு | 7 5 | ரூ. | 50.00 | பரிசு 2792 |
| 10 பரிசு | Y | ரூ. | 20.00 | பரிசு 11031 |
| 11 பரிசு | Y 10 | ரூ. | 100.00 | பரிசு 1257 |

இம்முறை வெல்லப்பட்டுள்ள மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,090,310.00

தேசிய லொத்தர் சபை
2342, காலி வீதி, கொழும்பு 03.
இணையத்தளம் www.nlb.lk
அடுத்த புதன் கிழமை சுப்பர் பரிசு
ரூ.14,280,281.00

நீங்காத நினைவுகளுடன்...

ஆறாம் ஆண்டு | ஒன்பதாம் ஆண்டு | இருபத்தோராம் ஆண்டு





அமரர்
இளையதம்பி
சுப்பிரமணியம்
தோற்றம் : 03.02.1911
மறைவு : 01.05.2005
திதி : 25.04.2011
(சித்திரை அபரபக்க அட்டமி)

திருமதி
கனகாம்பிகை
அருணாசலம்
தோற்றம் : 07.08.1924
மறைவு : 04.05.2002
திதி : 25.04.2011
(சித்திரை அபரபக்க அட்டமி)

அமரர் செல்லத்துரை
வரதலிங்கம்
தோற்றம் : 25.09.1929
மறைவு : 12.05.1990
திதி : 20.04.2011
(சித்திரை அபரபக்க திருதியை)

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார் பண்பு பாராட்டும் உலகு"
என்ற வள்ளுவர் வாக்கிற்கமைவாக வாழ்க்கைப் பாதையில் - என்றும்
தங்கள் நினைவுப் பதிவுகளின் வழிகாட்டல்கள்.

சு. கந்தஞானி,
117/4. அம்பலவாணர் வீதி, அத்தியடி, யாழ்ப்பாணம்.

தி. அருணாசலம்,
117/4. அரசடி, வீதி,கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
(3486) (39-27-23)

இரண்டாம் ஆண்டு நினைவலைகள்




அமரர்
சின்னத்தம்பி
சுந்தரம்
அன்னை மடியில்
11.07.1929
ஆண்டவன் அடியில்
25.04.2009
திதி: 04.05.2011

சுந்தரமேனியும் மௌனமான பேச்சும்
கொண்டு உதித்த ஐயா- நீங்கள்
எங்கள் வாழ்க்கையைப் பார்த்து
மகிழாமல் சென்று விட்டீர்களே!

மிருசுவில் வடக்கு,
மிருசுவில்.
0779007463.

நீங்கா நினைவுகளுடன்:
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(சி/577922) (38-27-23)

# மரணமடைந்த சத்தியசாயி பாபாவுக்கு அரசியல் தலைவர்கள் இரங்கல்



புட்டபர்த்தி,ஏப்.25

உலகம் முழுவதும் லட்சக்கணக்கான பக்தர்களை தன்வசம் கொண்ட ஸ்ரீசத்யசாயி பாபா நேற்றுக்காலை 7.30 மணி அளவில் மரணம் அடைந்து விட்டதாக மருத்துவமனை வட்டாரங்கள் தகவல் வெளியிட்டுள்ளன. மறைந்த சத்தியசாயிபாபாவுக்கு உலகம் முழுவதும் உள்ள அரசியல்தலைவர்கள், அவரது பக்தர்கள் ஆகியோர் மறைவுக்கு கண்ணீர் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இந்த வகையில் அவரது மறைவுக்கு இந்திய ஜனாதிபதி பிரதிபா பாட்டீல் இரங்கல் தெரிவித்துள்ளனர். ஆந்திர அமைச்சர்கள் நேரில் அஞ்சலி செலுத்தி வருகின்றனர். இதேவேளை அரசியல் தலைவர்கள் தமது இரங்கல் செய்திகளை தெரிவித்துள்ளனர்.

பாபாவின் உடல் சாய் குல்வந்த் மண்டபத்தில் இன்றும், நாளையும் வைக்கப் பட்டிருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது. அந்த மண்டபத்தில் நேற்று மாலை 6 மணிக்குப் பின்னர் அஞ்சலி செலுத்துவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அர்த்தமுள்ள வாழ்வுக்கு வழிகாட்டியவர் சத்தியசாயி பாபா; பிரதமர் இரங்கல்



நேற்று மரணமான சத்திய சாயி பாபாவுக்கு பிரதமர் மன்மோகன்சிங் இரங்கல் செய்தி அனுப்பியுள்ளார்.

இரங்கல் தெரிவித்து அவர் எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:

சத்திய சாயிபாபாவின் ஆன்மிக அறிவை ஆழமாகப் புரிந்துகொண்டவன் நான். சத்தியசாயி பாபா, உலகில் இருக்கும் பலகோடி மக்களின் ஆன்மிகத் தலைவர். ஒழுக்கமான அர்த்தமுள்ள வாழ்க்கைக்கு வழிகாட்டியவர். அவருடைய போதனைகள் உண்மை, அமைதி, அன்பு, அகிம்சை போன்றவற்றை வலியுறுத்துவதாக இருந்தன. ஒவ்வொரு மனிதருடைய கௌரவமும் அனைவரின் வாழ்க்கைக்குத் தேவையானவற்றை நிறைவு செய்வதாகும் என்று நம்பினார்.

அவருடைய மறைவு ஈடு செய்ய முடியாத இழப்பாகும். அவருடைய சீடர்களுக்கும், பக்தர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்று குறிப்பிட்டுள்ளார். (வ)

## ஆன்மிக வரலாற்றில் தனக்கென முத்திரை பதித்தவர்; விஜயகாந்த் இரங்கல்



சென்னை, ஏப்.25

சத்திய சாயிபாபா மறைவுக்கு தே.மு.தி.க. நிறுவனத் தலைவர் விஜயகாந்த் இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட இரங்கல் அறிக்கை வருமாறு:

நேற்றுக்காலை ஆன்மிக குரு சத்திய சாயிபாபா உயிரிழந்தார் என்ற செய்தி அறிந்து வேதனையடைந்தேன். எத்தனையோ ஆன்மிக வாதிகளிடையே மனித குலத்திற்குத் தொண்டாற்றுபவர்கள் ஒரு சிலரே உண்டு. அத்தகையோரில் சிறந்தவராக சாயிபாபா திகழ்ந்தார்.

ஆன்மிக வழிபாட்டில் தனக்கென ஒரு முத்திரை பதித்தார். அவரது ஆன்மிக நெறியால் ஈர்க்கப்பட்டவர்கள் உலகெங்கும் உள்ளனர். ஆன்மிகவாதிகளுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்த சாயிபாபாவின் மறைவு ஆன்மிக உலகிற்கு பேரிழப்பாகும். சாய்பாபா தனக்கென மட்டும் வாழாமல் இந்த நாட்டுக்காகவும், மக்களுக்காகவும் பல நற்பணிகளை ஆற்றியுள்ளார். அவரது இழப்பு எமக்கும், நம்முடைய நாட்டிற்கும் ஈடு செய்ய முடியாத இழப்பாகும். இவ்வாறு அவர் தனது இரங்கல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

## ஆன்மிகத் தலைவர்களில் சிறந்தவர்: நரேந்திரமோடி இரங்கல்



உலகில் உள்ள ஆன்மிகத் தலைவர்களில் சாயிபாபா தன்னிகரற்றவர். மனித உலகத்துக்கு மருத்துவ சேவைகளையும், ஊரகப் பகுதிகளுக்கு குடிதண்ணீர் மற்றும் கல்வி வழங்கியும் தனது வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்ட அவர் ஒரு சிறந்த மனிதர்.

தனிப்பட்ட முறையில் அவரது அன்பு மற்றும் தெய்வ கிருபையால் நான் ஆசிர்வதிக்கப்பட்டவன். அவரது பூத உடலுக்கு என்னுடைய அஞ்சலியைச் சமர்ப்பிக்கிறேன் என நரேந்திரமோடி தனது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார். (வ)

## சென்னை குடிதண்ணீர் பிரச்சினையைத் தீர்த்தவர் பாபா இரங்கல் செய்தியில் கலைஞர் கருணாநிதி



சென்னை, ஏப். 25

சத்தியசாயி பாபாவின் மரணத் துக்கு கருணாநிதி இரங்கல் தெரிவித் துள்ளார். அவர் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறி இருப்பதாவது:

எமது அன்பிற்கும் பாசத்துக்கும் உரிய புட்டபர்த்தி அருள்திரு சத்ய சாய்பாபா அவர்கள் மறைந்து விட்டார் என்ற செய்தி கேட்டு பெரிதும் துன்புறுகிறேன். இறுதி அஞ்சலி செலுத்திட எமது துணை முதலமைச்சர், மு.க. ஸ்டாலின் நேற்றுச் சென்றுள்ளார்.

தமிழகத்திற்கு தண்ணீர் வழங்கிட சில மாநில அரசுகளே மறுத்த நிலையிலே கூட நான் கேட்காமலேயே தானாகவே என் இல்லத்துக்கே வருகை தந்து சென்னைக்குக் குடிதண்ணீர் கிடைக்க 200 கோடி ரூபாவுக்குமேல் உதவி செய்து, தமிழ் மக்களின் உள்ளங்களில் எல்லாம் தக்கதொரு இடத்தைப் பிடித்துக்கொண்டவர் சாயிபாபா.

நான் ஒரு நாத்திகவாதி என்ற போதிலும், சிறந்த ஆத்மிகவாதியான பாபா என்பால் மிகுந்த அன்பு கொண்டிருந்தார். 2007ஆம் ஆண்டு தொடக்கத்தில் அவருக்கு நன்றி தெரிவிக்கும் நிகழ்ச்சி சென்னையிலே நடைபெற்ற போது, அவரைப் பற்றி நான் பேசும் போது, மனிதனுக்குச் செய்யும் சேவை கடவுளுக்குச் செய்யும் சேவை என்றும் அதாவது மக்கள் நலப்பணிக்காக அரசியல் வாதியும் ஆன்மிகவாதியும் ஒன்று சேர்வதில் தவறில்லை என்றும் கூறினேன்.

இத்தனை விரைவில் அவர் எம்மை யெல்லாம் விட்டு மறைந்து விடுவார் என்று நான் நினைக்கவே இல்லை. அவரது மறைவால் வருந்தும் எண்ணற்ற அவருடைய சீடர்களின் துயரத்தில் நானும் பங்கேற்பதோடு, என்னுடைய தனிப்பட்ட ஆழ்ந்த இரங்கலையும் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு கலைஞர் இரங்கல் செய்தியில் கூறி உள்ளார். (வ)

## ஏழை, எளியோருக்கு அரும்பணியாற்றியவர் ஜெயலலிதா இரங்கல்



சென்னை, ஏப்.25

சத்திய சாயிபாபா மறைவுக்கு அ.தி.மு.க. பொதுச்செயலர் ஜெயலலிதா இரங்கல் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட இரங்கல் அறிக்கை வருமாறு:


அன்பையும், மனிதநேயத்தையும் மக்கள் மத்தியில் வேரூன்றச் செய்ய தனது வாழ்நாளை அர்ப்பணித்த புட்டபர்த்தி ஸ்ரீ சத்திய சாயிபாபா உடல் நலக்குறைவு காரணமாக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில், இறைவனடி சேர்ந்தார் என்ற செய்தி அறிந்து மிகுந்த வருத்தமுற்றேன்.

எண்ணற்ற இலவச கல்வி நிலையங்களையும், மருத்துவமனை களையும், மக்கள் நலப் பணியாற்றும் அமைப்புகளையும் உருவாக்கி கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக இந்திய மக்களுக்கும், உலகெங்கும் உள்ள ஏழை, எளியோருக்கும் அரும்பணியாற்றியவர் சாயிபாபா. அவருடைய மறைவு மனித குலத்திற்கு பேரிழப்பு.

புட்டபர்த்தி ஸ்ரீ சாய்பாபாவை இழந்து வாடும் அவரது பக்தர்கள் அனைவருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன். இவ்வாறு அவர் தனது இரங்கல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.(வ)

# இலங்கை அரசை பன்னாட்டு நீதிமன்றத்தில் நிறுத்துமாறு இந்திய அரசை வலியுறுத்தி 28 ஆம் திகதி ஆர்ப்பாட்டம்

### தி.க.தலைவர் கி.வீரமணி அறிவிப்பு



இலங்கை ஜனாதிபதி ராஜபக்ஷவை பன்னாட்டு நீதிமன்றத்தில் நிறுத்த இந்திய அரசு முயற்சிக்க வேண்டும் என வலியுறுத்தி எதிர்வரும் 28 ஆம் திகதி ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளதாக திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:

ஈழத் தமிழர்களின் வாழ்வுரிமைக்காக நடைபெற்ற உரிமைப்போரை தனது ராணுவத்தாலும், வெளி ஆதிபத்திய சக்திகளின் ராணுவம் மற்றும் பல்வேறு நிதி ஆதாரம் பெற்று தமிழின அழிப்பு வேலையை இலங்கை அரசு நடத்தியதை ஐ.நா. மன்றத்தால் ராஜபக்ஷ போர்க்குற்றவாளி என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்மீது அவரை போர்க் குற்றவாளியாக பன்னாட்டு நீதிமன்றத்தின் முன் நிறுத்திடச் செய்து, அதன்மீது நடவடிக்கை எடுக்கவும் உடனடியாக இந்திய அரசு முன்வர வேண்டும்.

அத்துடன் அந்த அரசின் நடவடிக்கைகளை நியாயப்படுத்த முயன்ற மத்திய அரசு தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து, ஈழத்தமிழர்கள் வாழ்வுரிமையை மீண்டும் உறுதிப்படுத்த, உரிமைகளைப் பெற்றுத்தர முயலுவது தான் அதன் செயலுக்கு ஒரே நடவடிக்கையாகும்.

தமிழர்களின் பூர்வீக இடங்களில் சிங்களக் குடியேற்றங்களை சிங்கள அரசு திட்டமிட்டே செய்யும் கொடுமை நடந்தேறி வருகிறது. ஈழத் தமிழர்களின் கண்ணீரும், செந்நீரும் வழிந்தோடும் நிலைக்கு முற்றுப்புள்ளி இல்லை. எமது அரசுகள் கொடுத்த நிதி உதவிகள் இலங்கை அரசின் கொடுங்கரங்களை வலிமைப் படுத்தத்தான் உதவின போலும். மத்திய அரசின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படவில்லை எனில் இனி மேல் காங்கிரஸ் கட்சி தமிழ் மண்ணை அறவே மறந்திட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டே தீரும். புதிய அணுகுமுறை மிகுந்த மனிதாபிமானத்துடன் கடைப்பிடிக்க முன்வர வேண்டும். இதனைவலியுறுத்திஎதிர்வரும் 28 ஆம் திகதி தமிழ்நாட்டின் மாவட்டத் தலைநகரம் அல்லது முக்கிய நகரங்களில் திராவிடர் கழகத்தின் சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெறும். இதேவேளை சென்னையில் எனது தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெறும். கட்சிக் கண்ணோட்டம் இன்றி அனைத்துத் தமிழ் உறவு களும் இதில் கலந்து கொள்ளவேண் டுகிறோம் என்று அந்த அறிக்கையில் அவர் கூறியுள்ளார். (வ)

# தமிழகத்திலுள்ள இலங்கை அகதிகளில் ஒரு தொகுதியினர் தாயகம் திரும்ப விருப்பம்

இலங்கையில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக தஞ்சம் கோரி இந்தியா சென்று தமிழகத்தின் வேலூர் மாவட்டத்தில் அகதிகள் முகாமில் இருக்கும் தமிழ் அகதிகள் மீண்டும் நாடு திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1983 கறுப்பு ஜூலை மற்றும் அதன் பின்னரான யுத்தத்தை அடுத்து இலங்கையில் இருந்து இலட்சக்கணக்கான தமிழ் அகதிகள் இந்தியாவின் தமிழ்நாட்டில் அகதிகளாக குடியேறியுள்ளனர்.

இவ்வாறு குடியேறியவர்களின் நன்மை கருதி தமிழக மாநிலம் முழுவதிலும் அவர்களுக்கு அகதி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

தமிழகத்தின் வேலூர் மாவட்டத்தில் மட்டும் வேலூர் மேல்கொணவூர், வாலாஜா அணைக்கட்டு, பாணாவரம், குடியாத்தம், ஆம்பூர், சின்னப்பள்ளிக்குப்பம், மின்னூர் ஆகிய 06 முகாம்களில் மொத்தம் நான்காயிரம் வரையான இலங்கை அகதிகள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை இராணுவத்துக்கும் இடையேயான யுத்தம் கடந்த 2009 ஆம் ஆண்டு முடிவுற்றதைத் தொடர்ந்து தமிழகத்தில் இருக்கும் அகதிகளைப் பொறுப்பேற்க இலங்கை அரசு சம்மதம் தெரிவித்திருந்தது.

இந்திய அரசும் விரும்பியவர்கள் திரும்பிப் போகலாம் என்று அறிவித்துள்ளது.

இதேவேளை அவர்கள் இலங்கை திரும்புவதற்கான செலவை தமிழக அரசு ஏற்றுக் கொள்ளும் என்று எதிர்பார்க்கப் படுகின்றது. (வ)

---

உ

## இதயத்தை நெருடும்

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 19 . 01 . 1952



விண்ணில் 26 . 03 . 2011

அமரர்

## கார்த்திகேசு சபாரத்தினம்

நேற்றுவரை!
குடும்ப விருட்சத்தின் ஆணிவேராய்
போற்றுதற்குரிய நல்ல கணவனாய்
அழைத்திடும் உறவுகளுக்கு விடிவிளக்காய்
புகழ் பூத்த பெருமகனாய் வாழ்ந்திருந்தீர்
இன்று
வாழ்க்கையெல்லாம் கானல் நீராய்
தேற்ற முடியாத சோகத்துடன்...
ஆன்ம சாந்திக்காய்
இறைவனிடம்....

*'ஈஸ்வரி இல்லம்',*
*மீசாலை மேற்கு, மீசாலை.*

**மனைவி,**
**குடும்பத்தினர்.**

(3503) (38-20-27)

---

## மரண அறிவித்தல்



## மரியதாசன் பபியன் டென்சிஸ்

இளவாலையைப் பிறப்பிடமாகவும், நெதர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்ட மரியதாசன்- பபியன் டென்சிஸ் கடந்த 19-04-2011 செவ்வாய்க் கிழமை நெதர்லாந்தில் காலமானார்.

அன்னார், மரியதாசன் மேரிரோசலின் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற விஜயராஜா மற்றும் பெனடிற் தம்பதியரின் அன்பு மருமகனும், சர்மிளாவின் பாசமிகு கணவரும், டியோநிலா, சிவோனிலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பசிலா, றெஜியன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், லோறா, ரகு, மேகலை ஆகியோரின் அன்பு மைத்துனரும், சசியின் அன்புமிகு சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 22.04.2011 வெள்ளிக்கிழமை தொடக்கம் 26-04-2011 செவ்வாய்க்கிழமை மாலை 6:00 மணிதொடக்கம் இரவு 8:00 மணி வரை Kruidenweg -1, 1312- SR, Almere Stad என்ற முகவரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, 27.04.2011 புதன்கிழமை முற்பகல் 11:00 மணியளவில் Goede Rede, Kerk Gracht - 60, Almere - Haven என்ற முகவரியில் திருப்பலிப் பூஜை ஒப்புக்கொடுக்கப்பட்டு, பின்னர் Kruidenweg- 3, 1312 SR. Almere Stad என்ற முகவரியில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்**
**Kornwierde - 122**
**1353 KL Almere Haven Netherland.**
0031365311101, 0031639846631.

*Owner:*
**Prem Jeriy**
**Youth Hostel Meeting Point,**
**Amsterdum, Netherland.** (49,20,23)

---



## 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

## வீட்டுக்கிருத்திய அழைப்பும்

## திருமதி
## கனகசபாபதி புஸ்பராசமணி

மலர்வு
**15.10.1931**

உதிர்வு
**26.03.2011**

வாழ்வாங்கு வாழ்ந்து 26.03.2011 இல் மண்ணுலக வாழ்வை நீத்து அமரத்துவ மெய்திய எமது குடும்பத்தலைவியின் இறுதி நிகழ்வுகளில் கலந்தும் மற்றும் பலவழிகளிலும் துயர்பகிர்ந்தும் ஆறுதல் தந்த நல்லுள்ளம் கொண்ட அனைவருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (25.04.2011) திங்கட்கிழமை மு.ப.10 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். இந்த நிகழ்விலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

★ இதனைத் தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.

என்றும் நினைவில்:
**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள்.**

மயிலு வீதி,
ஆறுகால்மடம்.

(3498) (20,22)

### கொல்சிம் வெற்றிக் கிண்ண உதைபந்தாட்டம் :

# வதிரி டயமன்ஸ்சை எதிர்த்து மோதவுள்ளது மன்னார் அணி

யாழ்ப்பாணம்,ஏப்.25

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனம் நடத்தும் கொல்சிம் வெற்றிக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி.

சுற்றுப்போட்டித் தொடர் ஆட்டம் ஒன்றில் பருத்தித்துறை வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மன்னார் சென்.லூசியஸ் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

இந்த ஆட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை மன்னார் பொது விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

வதிரி டயமன்ஸ் விளையாட்டுக்கழக அணி இந்தத் தொடரில் பாடும்மீன் விளையாட்டுக்கழக அணியை ஒரு கோலினாலும் மருதமுனை ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தை 2 கோலினாலும் வெற்றிபெற்றது குறிப்பிடத்தக்கது. (எ-23)

# பெண்களுக்கான எல்லே போட்டியில் கனகபுரம் மகா வித்தியாலயம் சம்பியன்

யாழ்ப்பாணம்,ஏப்.25

கிளிநொச்சி மாவட்ட மட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான 19 வயதுப் பிரிவு பெண்களுக்கான எல்லேப் போட்டியின் இறுதியாட்டத்தில் கனகபுரம் மகாவித்தியாலய அணி சம்பியன் ஆனது.

கடந்தவாரம் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற எல்லே போட்டியின் இறுதியாட்டத்தில் கனகபுரம் மகாவித்தியாலய அணியை எதிர்த்து தர்மபுரம் மகாவித்தியாலய அணி மோதியது.

கனகபுரம் மகாவித்தியாலய அணி எதிர்த்து விளையாடிய தர்மபுரம் மகாவித்தியாலய அணியை 1:0 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்று சம்பியனானது. (எ-23)

# நெடுந்தீவில் கடந்த புது வருட தின விளையாட்டுப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஏப்.25

தமிழ் சிங்கள புதுவருட தினத்தை முன்னிட்டு நெடுந்தீவு கடற்படையும் பொதுமக்களும் கூட்டாக நடத்திய விளையாட்டுப் போட்டிகள் கடந்த 20 ஆம் திகதி நெடுந்தீவு கடற்படை அதிகாரி சி.ரணதுங்க தலைமையில் நடைபெற்றது.

இந்தப் போட்டிகளில் வெற்றி பெற்றவர்கள் வருமாறு:

துவிச்சக்கரவண்டி (ஆண்கள்) - ஆர். விஜித்குமார்- முதலாம் இடம், எம்.பகீரதன்- இரண்டாமிடம், எம்.இருதயராஜ்- மூன்றாம் இடம்.

துவிச்சக்கர வண்டி (பெண்கள்) -- ரி.ஹேமதர் சினி- முதலாமிடம், பி.சிவ ரஞ்சினி- இரண்டாமிடம், பி.வனஜா - மூன்றாமிடம்.

மரதன் ஓட்டம் (ஆண்கள்) - எஸ்.ஞானேஸ்வரன்- முதலாமிடம், ஆர். சண்முககுமார்- இரண்டாமிடம், ஏ.பப்குமார்- மூன்றாமிடம்.

மரதன் ஓட்டம் (பெண்கள்) - எம்.வினோசியலா - முதலாமிடம், ஜே.மேரிலினே- இரண்டாமிடம், ஏ.யசோதினி- மூன்றாமிடம்.

நீச்சல் - எஸ்.கனிஸ்வதாஸ்- முதலாமிடம், ய.என்டாரியோண்- இரண்டாமிடம், ஏ.சகாயசீலன்- மூன்றாமிடம்.

சறுக்குமரம்- ஜெகசீலன்.

குதிரை ஓட்டப் - ம.உருத்திரேஸ்வரன்- முதலாமிடம், செ.சத்யசீலன்- இரண்டாமிடம், கேதீஸ்வரன்- மூன்றாமிடம்.

முட்டி உடைத்தல் - ஏ.அருள்ராஜ்.

**சிறுவர்களுக்கான போட்டிகள்**

பலூன் உடைத்தல் - என்.கிருஷிகன்- முதலாமிடம், ஜானி ஜலான்- இரண்டாமிடம், அமீரா- மூன்றாமிடம். (எ-7)



மிதிவெடி செயற்பாட்டின் விழிப்புணர்வுக்கும் உதவிக்குமான சர்வதேச தினத்தை முன்னிட்டு மிதிவெடிகள் சம்பந்தமான ஒருங்கிணைந்து செயற்படும் நிறுவனங்களுக்கு இடையே நடத்தப்பட்ட மென்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் சம்பியனான 'ஹலோ ரஸ்ட்' மிதிவெடி அகற்றும் அணியினர். (எ-23)

# விளையாட்டுப் பொருள்கள் கண்ணகை கழகத்துக்கு அன்பளிப்பு

சாவகச்சேரி,ஏப்.25

மட்டுவில் வடக்கு கண்ணகை விளையாட்டுக்கழகத்துக்குப் பிரான்ஸில் வசிக்கும் சீ.சிவச்செல்வன், சீ.கர்ணன் ஆகிய சகோதரர்கள் சீருடைகள் மற்றும் விளையாட்டுப் பொருள்களையும் கழகத் தலைவர் சி.சஞ்சீவனிடம் அன்பளிப்பாக வழங் கினர். (எ-131)

# கனகபுரம் ம.வி. கரம் போட்டியில் சம்பியன்

யாழ்ப்பாணம்,ஏப்.25

கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளுக்கு இடையிலான ஆண், பெண் இருபாலாருக்கும் இடையிலான 15,19 வயதுப் பிரிவு கரம் போட்டியில் கனகபுரம் மகா வித்தியாலய அணி சம்பியன் ஆனது. (எ-23)

# காந்திஜி - இருதயராசா வி.க. அணிகள் உதைபந்தாட்ட இறுதிப் போட்டிக்கு தெரிவு

ஊர்காவற்றுறை பிரதேச செயலக வருடாந்த விளையாட்டுப் போட்டிகளில் உதைபந்தாட்டப் போட்டி அண்மையில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த உதைபந்தாட்டப் போட்டியில் முதலாவது அரையிறுதிப் போட்டியில் தம்பாட்டி காந்திஜி விளையாட்டுக் கழகமும் கரம்பொன் ஞான ஒளி விளையாட்டுக் கழகமும் மோதிக்கொண்டன.

விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்தப் போட்டியில் இரு அணிகளும் கோல் போடாத நிலையில் சமநிலை தவிர்ப்பு உதை மூலம் தம்பாட்டி காந்திஜி வி.க. 4:3 என்ற கோல் கணக்கில் ஞான ஒளி விளையாட்டுக்கழகத்தைத் தோற்கடித்து இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது.

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் மெலிஞ்சி முனை இருதயராசா வி. கவும் நாரந்தனை அண்ணா வி. கவும் மோதிக் கொண்டன.

விறுவிறுப்பாக இடம்பெற்ற இந்தப் போட்டியில் மெலிஞ்சி முனை இருதயராசா வி.க 1:0 என்ற அடிப்படையில் நாரந்தனை அண்ணா வி. கவைத் தோற்கடித்து இறுதிப் போட்டிக்குத் தெரிவாகியது. (எ-305)

# அராலி சரஸ்வதி மூன்றாமிடம்

வலி.வடக்கு,ஏப்.25

வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற மூன்றாம் இடத்துக்கான வலைப்பந்தாட்டப் போட்டியில் 17 வயதுப் பிரிவில் கடும் போட்டியின் பின்னர் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் மூன்றாம் இடத்தைப் பெற்றுக் கொண்டது.

மல்லாகம் மகா வித்தியாலய மைதானத்தில் இடம்பெற்ற மூன்றாம் இடத்துக்கான போட்டியில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியும் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயமும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் கடுமையாக மோதிக் கொண்டன.

முதல் பாதி ஆட்டத்தில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் 08:07 புள்ளிகள் என்ற நிலையில் முன்னிலை பெற்றது.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் களமிறங்கிய இரு அணிகளும் புதிய உத்வேகத்துடன் மோதிக் கொண்டன.

இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் வேகமாக புள்ளிகளைப் பெற்ற நிலையில் விக்ரோறியாக் கல்லூரி 12:11 புள்ளிகள் என்ற நிலையில் முன்னிலை பெற்றது.

இரண்டாம் பாதி ஆட்டம் முடிவடைந்த போது இரு அணிகளும் தலா 19 புள்ளிகளைப் பெற்று சமநிலையில் காணப்பட்டன.

வெற்றி தோல்வியைத் தீர்மானிப்பதற்கு மேலதிகமாக வழங்கப்பட்ட நேரத்தில் அராலி சரஸ்வதி மகா வித்தியாலயம் 06:03 புள்ளிகள் என்ற அடிப்படையில் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியை வெற்றி பெற்று மூன்றாம் இடத்தைப் பெற்றது. (த-86)

# கண்ணகை விளையாட்டுக்கழகம் கிரிக்கெட்டில் வெற்றி பெற்றது

சாவகச்சேரி,ஏப்.25

வரணி நண்பர்கள் விளையாட்டுக்கழகம் தென்மராட்சிப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையே அண்மையில் நடத்திய கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் மட்டுவில் வடக்கு கண்ணகை விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்றது. (எ-131)

# ஹாட்லி, வட இந்து மகளிர் சதுரங்கப் போட்டியில் முதலிடம்

பருத்தித்துறை,ஏப்.25

வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்தினால் பாடசாலைகளுக்கிடையே நடத்தப்பட்ட சதுரங்கப் போட்டியில் ஆண்களில் சகல பிரிவுகளிலும் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் பெண்களின் சகல பிரிவுகளிலும் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியும் முதலிடத்தைப் பெற்றுச் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

ஆண்களில் 15 வயதுப் பிரிவில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி முதலாமிடத்தையும் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் இரண்டாமிடத்தையும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி மூன்றாமிடத்தையும் பெற்றன.

19 வயதுப் பிரிவில் முதலாமிடத்தைப் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியும் இரண்டாமிடத்தை உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியும் மூன்றாமிடத்தை கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியும் பெற்றன.

பெண்களில் 15 வயதுப் பிரிவில் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி முதலாமிடத்தையும் பருத்தித்துறை மெதடிஸ்த உயர் பாடசாலை இரண்டாமிடத்தையும் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி மூன்றாமிடத்தையும் பெற்றன.

19 வயதுப் பிரிவில் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரி முதலாமிடத்தையும் வட மத்திய மகளிர் கல்லூரி இரண்டாமிடத்தையும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரி மூன்றாமிடத்தையும் பெற்றுள்ளன. (த-190)

# தமிழருக்கான தீர்வை தீர்மானிப்பது....

(6 ஆம் பக்கத் தொடர்ச்சி)
வேண்டும் என்பதை தீர்மானிப்பவர்களும் நாங்கள்தான். ஆனால் இது குறித்து இந்தியாவின் ஆலோசனையை நாம் பெறுவோம்.

அதனை நாம் உதாசீனம் செய்ய மாட்டோம்.

ஆனால் நான் நூற்றுக்கு நூறுவீதம் சிறந்ததொரு தீர்வாக அது அமையும் என்று சொல்ல மாட்டேன். ஆனால் எங்களுடைய மக்களின் அத்தியாவசியமான தேவைகளான பாது காப்பு, சட்ட ஒழுங்கு, காணி, மருத்துவம், நீர்ப்பாசனம், கல்வி மற்றும் அதனை நடைமுறைப்படுத்துவதற்கான வெளிநாட்டு உதவிகளை பெற்றுக்கொள்வதற்கான ஒழுங்குகள் என்று, பல விடயங்களை உட்கொண்டதொரு தீர்வாக அது இருக்க வேண்டுமென்றே நாங்கள் விரும்புகின்றோம்.

**அரசை நம்ப முடியாது**

அதாவது பல்லின சமூகங் கள் வாழுகின்ற நாடுகளில் நிலவும் அதிகாரப் பகிர்வு முறைமையின் கீழான தீர்வொன்றையே நாம் கோருகின்றோம். உதாரணமாக இந்தியாவின் மாநில ஆட்சி முறைமைக்கு ஒப்பான ஒன்று எனலாம். இன்று அந்த மாநில ஆட்சி முறைமையின் கீழ் பலவிதமான கருமங்கள் சுயாதீனமாக முன்னெடுக்கப்படுகின்றன. இது தொடர்பில் இந்தியாவுடன் பேசி வருகின்றோம். இது தொடர்பில் அரசை நம்ப முடியாது. அதற்காக எல்லோரையும் சந்தேகத்துடனும் நோக்க முடியாது. இதில் நாங்கள் குழம்பாமல் நிதானமாகப் பயணிக்க வேண்டும். பயணிப்போம்.

**கேள்வி:** நீங்கள் பல முயற்சிகளை எடுத்து வருவதாக குறிப்பிடுகின்றீர்கள் குறிப்பாக இலங்கைக்குள் ஓர் தீர்வைப் பெறும் வகையில் செயலாற்றி வருகின்றீர்கள் ஆனால் புலம்பெயர் சூழலில் முற்றிலும் மாறுபட்ட வகையிலான செயற்பாடுகள் அரங்கேறிக் கொண்டிருப்பதை அவதானிக்க முடிகின்றது. உங்களது செயற்பாடுகளுக்கும் அவர்களது செயற்பாடுகளுக்கும் இடையில் ஓர் இடைவெளி தொடர்வதாகத் தெரிகிறதே! இது பற்றிய உங்கள் அவதானம் என்ன?

**சம்பந்தன்:** புலம்பெயர் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் அவர்கள் பலர் என்னோடு தொடர்பிலிருக்கின்றனர். எல்லோரும் கடும் போக்கை எடுக்கவில்லை. நிச்சயமாக இல்லை. கணிசமான மக்கள் எங்களது சமகால முன்னெடுப்புக்கள் சரியானது, நியாயமானது, நிதானமானது, அதனை நீங்கள் தொடர வேண்டும் என்றே கூறி வருகின்றனர்.

இதனால் நாங்கள் மற்றவர்களை மதிக்கவில்லை என்றும் பொருள் அல்ல. ஆனால் சிலர், குறிப்பாக நாடு கடந்த அரசு , உலகத் தமிழர் பேரவை போன்ற அமைப்புக்கள், அரசை நம்ப முடியாது, அவர்கள் இறுதியில் உங்களை ஏமாற்றுவார்கள் என்று குறிப்பிடுகின்றனர். எனவே நாங்கள் எங்களது நிலைப்பாட்டில் இருந்து விலக முடியாது என்பதே அவர்களது வாதமாக இருக்கின்றது.

ஆனால் அவ்வாறானவர்களும் கூட எங்களது முயற்சிகளை நிராகரிக்கவில்லை. குறை சொல்லவில்லை. அவர்கள் அவர்களது வழியில் செல்கின்றனர். நாங்களும் எங்களுக்குச் சாத்தியமான வழிகளில் செல்கின்றோம். பார்ப்போம் இவைகள் எல்லாம் எங்கு போய் முடியுமென்று.

நான் சகலருடனும் தொடர்பிலேயே இருந்து வருகின்றேன் ஆனால் என்னால் நிச்சயமாகச் சொல்ல முடியும், புலம்பெயர்ந்த மக்களில் பெரும்பாலானவர்கள் நாட்டில் நிதானமான, நிரந்தரமான தீர்வு குறிப்பாக, இங்கிருக்கும் மக்கள் வாழ வேண்டும் என்பதில் அவர்கள் மிகுந்த அக்கறையாக இருக்கின்றனர்.

நாங்கள் விரைவில் இந்த நாடுகளுக்குச் செல்ல இருக்கின்றோம். அங்கு மக்களையும் சந்தித்துப் பேசுவதற்கு எண்ணியுள்ளோம் மேலும் எங்களது பேச்சுவார்த்தை முன்னேற்றங்களை அவதானித்து சகல நாடுகளின் அரசியல் சக்திகளுடனும் பேச இருக்கின்றோம். இந்தியாவிலும் மத்திய அரசை மட்டுமல்ல சகல மாநிலங்களிலும் பல்வேறு அரசியல் தலைவர்களையும் சந்தித்து, எங்களது பிரச்சினைக்கானதொரு தீர்வைக்காணும் நோக்கில் கலந்துரையாடவும் திட்டமிட்டுள்ளோம்.

**கேள்வி:** கடந்த முப்பது ஆண்டுகளில் எத்தனையோ தீர்வுத் திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. உதாரணமாக நீலன்திருச் செல்வத்தின் தீர்வாலோசனை அல்லது ஆனந்தசங்கரி முன்வைத்த யோசனை. இப்படி பலவாறான தீர்வு யோசனைகள் ஏலவே இருக்கின்றன. எனவே புதிதாக ஒரு தீர்வுத் திட்டத்தை முன் வைப்பதைவிட ஏற்கனவே இருப் பதைக் கொண்டே பேச முடியும். குறிப்பாக நீலனின் ஆலோசனைக் கூட முன் வைக்க முடியும். சிலரது அபிப்பி ராயத்தின் படி குறிப்பாக் புலம் பெயர் தேசியவாத அமைப்புக்கள், இலங்கை அரசு பேச்சு வார்த்தை என்ற பேரில் காலத்தை இழுத்தடிக்கும் வகையில் செயற்படுவதாகக் குறிப் பிட்டு வருகின்றனர். அதனை எதிர்கொள் வதற்கான பொறிமுறையற்று நீங்கள் செயலாற்றிவருதாகவும் குறிப்பிடுகின்றனர். இது பற்றி என்ன கருதுகின்றீர்கள்.

**சம்பந்தன்:** நாங்கள் இப்போது பழைய விடயங்களைப் பேசுவதில் பயன் இல்லை. நீலன்திருச்செல்வத்தின் தீர்வுத் திட்டத்தில் நானும் கடினமாக உழைத்திருக்கின்றேன். இப்போது அதனையும் உள்ளடக்கித்தான் நாம் பேசிவருகின்றோம்.

அரசு காலத்தை இழுத்தடிக்கின்றது அல்லது ஏமாற்றப் பார்க்கின்றது என்பதற்காக நாங்கள் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளாமல் இருக்க முடியாது. எங்களைப்பொறுத்தவரைபேச்சுக்களில் பங்கு கொள்ள வேண்டிய கட்டாய நிலைமையில் நாங்கள் இருக்கின்றோம். ஏனென்றால் விடுதலைப்புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட போதிலும் கூட சர்வதேச சமூகத்தைப் பொறுத்தவரையில் புலிகளின் சமாதான ஈடுபாடு என்பது உதட்டளவில் இருக்கின்றதேயன்றி அது உண்மையானதல்ல. அவர்கள் தமிழ் ஈழம் என்னும் இலக்கிலேயே ஒன்றித் திருக்கின்றனர்- இதுவே சர்வதேச சமூகத்தின் அபிப்பிராயமாக இருந்தது.

இன்று நிலைமை வேறு, அதாவது மக்களுடைய ஜனநாயக ரீதியான அங்கீகாரத்தைப் பெற்ற மிதவாதத் தலைவர்கள், ஓர் அரசியல் தீர்வைக் காணும் நோக்கில் விசுவாசத்துடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டு வருகின்றனர் என்பதை நாம் நிரூபிக்க வேண்டும். இதில் நாங்கள் உண்மையாக இருக்க வேண்டும். இங்கு அரசினது போக்கு வேறொன்றாக இருக்கலாம். அது எமக்கும் தெரியும். நாங்கள் ஏமாறாமல் இருந்தால் அவர்களால் எங்களை ஏமாற்ற முடியாது. அவர்கள் இழுத்தடிக்க முயற்சிக்கலாம் நாங்கள் அதனை நிறுத்தலாம். அவர்கள் தீர்வு தொடர்பில் ஒரு முடிவுக்கு வராவிட்டால் பின்னர் இழுத்தடிப்பதில் என்ன பயன் இருக்க முடியும்?

எனவே நாங்கள் எதனைச் செய்ய முயல்கின்றோம் என்பதை அறிந்து செயற்பட்டால் அரசின் எண்ணம் எதுவாக இருப்பினும் அது குறித்துக் கவலைப்படாமல், எங்களது இலக்கை அடைவதற்கான அனைத்தையும் நாம் செய்து கொண்டிருக்க முடியும்.

அதில் ஒன்று நாங்கள் விசுவாசமாகப் பேச்சுவார்த்தையில் பங்கு கொள்ள வேண்டும். எங்களது நிலைப்பாட்டில் நாங்கள் தெளிவாக இருக்க வேண்டும். நாங்கள் நாளை இந்தியாவுக்கோ, அமெரிக்காவுக்கோ அல்லது ஐரோப்பிய ஒன்றியத்துக்கோ சொல்லக் கூடியதாக இருக்கும் - இதுதான் நாங்கள் முன்வைத்த தீர்வாலோசனை. இதில் என்ன தவறு இருக்கிறது?

இதனை ஏன் அவர்கள் ஏற்கவில்லை? இது ஏற்கப்படாமல் இருப் பதற்கு யார் பொறுப்பாளி ? இது குறித்து நீங்கள் என்ன செய்யப் போகின்றீர்கள்? மறுபடியும் ஒரு வன்செயல் ஊடாக எமது மக்களை அழிக்கப் போகின்றீர்களா? அல்லது ஒரு முடிவைக் காணும் வகையில் செயலாற்றப் போகின்றீர்களா? இப்படியான கேள்விகளை எழுப்பக் கூடிய சாதகமான நிலையில் நாங்கள் இருக்க வேண்டும். எனவே இப்படியான அக புறநிலைமைகளைக் கருத்தில் கொண்டே, நாங்கள் செயற்பட்டு வருகின்றோம் என்பதை அனைவரும் விளங்கிக் கொள்ள வேண்டும். **

## மரண அறிவித்தல்

### வல்லிபுரம் திருநாவுக்கரசு



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், ஆஸ்திரேலியா, சிட்னியை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் திருநாவுக்கரசு 22.04.2011 வெள்ளிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் வல்லிபுரம் - பத்தினிப் பிள்ளை தம்பதியினரின் அன்புமகனும், பவளரத்தினம் அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சுப்பையா, இராஜதுரை, குமாரலிங்கம், பொன்னம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை மற்றும் ஞானதுரை (நியூசிலாந்து) ஆகியோரின் மைத்துனரும், திருச்செல்வகுமாரி (சிட்னி), திருநந்தகுமார்(சிட்னி- கம்பன் கழகம்), திருநந்தகுணாளன் (ஜேர்மனி), திருகுகசக்தி (சிட்னி) ஆகியோரின் அன்புத் தந்தை யும், ஜனநாயகம், தயாநந்தி, உதயகுமாரி, அருணாசலம் ஆகியோரின் அன்பு மாமனாரும், ராகுலன், சாயிபிரியா, ஆதவன், வியாசன், கபிலன், அபிராமி, ஆதித்தன், கஜானனி, விஸ்ணுகர், வித்துகன், அட்சயன், சுபானு, திபியன், திவாரகா, திவாசினி ஆகியோரின் அன்புப் பேரனும், ஆரியன் அவர்களின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (27.04.2011) புதன் கிழமை முற்பகல் 10 மணிக்கு Rookwood Gardens Crematorium West Chappel, Lidcombe NSW 2141 இல் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
M.இராசநாயகம்
0779530496.

தொடர்புகளுக்கு:

| | |
|---|---|
| குகசக்தி அருணாசலம் | +61298637773 |
| திருநந்தகுணாளன் | +492315655458 |
| திருநந்தகுமார் | +61286778278 |
| திருமதி ஜனநாயகம் | +61296367846 |

(49,20,22)

## மரண அறிவித்தல்



### மயில்வாகனம் மகேந்திரராஜா
(மகேந்திரம்)

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் நுணாவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் மகேந்திரராஜா கடந்த (22.04.2011) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம்- மகேஸ்வரி தம்பதியரின் அன்புமகனும் காலஞ்சென்ற கணேசமூர்த்தி மற்றும் கனகம்மா தம்பதியரின் பாசமிகு மருமகனும் கலாநிதியின் அன்புக் கணவரும், சாலினி, ஜீவிதன் ஆகியோரது அன்புத் தந்தையும், வள்ளிநாயகி, தெய்வநாயகி (ஜேர்மனி), வரதராஜா (ஜேர்மனி), சதானந்த ராஜா (நகரசபை உத்தியோகத்தர், சாவகச்சேரி) ஆகியோரது அன்புச் சகோதரனும் சூரியகுமார் (ஜேர்மனி), விநோதினி (ஜேர்மனி), ராஜகுமாரி(மாலா, கலைமகள் முன்பள்ளி ஆசிரியை) ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரதீபன் (ஜேர்மனி), பிருந்தா (ஜேர்மனி), லவீனா (ஜேர்மனி), ஸ்ரீவித்தியா, விசாகன், வித்தகன் ஆகியோரின் பெரிய தகப்பனாரும் நிரோஜன் (ஜேர்மனி),நிரோஜா (ஜேர்மனி) ஆகியோரது பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2011) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
T.P: 0212270329.

கல்வயல் வீதி,
நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.

(49,22)

## சர்வதேச மேடைகளில் ....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

கூறுவதென்னவென்றால் போர்க் குற்றங்களுக்கான விசாரணைக்குழுக்கள் தொடர்பான ரோம் நகர சாசனத்தில் இலங்கை கையெழுத்திடாமலிருப்பதனால் போர்க் குற்றம் தொடர்பான விசாரணை எதுவும் நடத்தப்படமுடியாது என்பதாகும்.

2001 - 2004 காலப்பகுதியில் ஐ.தே.க. பதவியிலிருந்த காலத்தில் ரோம் நகர சாசனத்தில் கையெழுத்திடாததின் மூலம் அரசியல் தலைவர்களும் சிரேஷ்ட இராணுவத் தலைவர்களும் சர்வதேச நீதி விசாரணைகளின் முன் நிறுத்தப்படுவதிலிருந்து காப்பாற்றியிருப்பதாக ஐ.தே. கட்சி பெருமை கொள்கின்றது. என்றாலும் ஜி.எஸ்.பிளஸ் போன்ற பொருளாதாரப் பிரச்சினைகள் எழும்போது ஐ.நா. நிபுணர் குழுவின் கண்டுபிடிப்புகள் இலங்கைக்கு எதிராக மேற்கு நாடுகளால் ஆயுதமாகப் பயன்படுத்தப்படலாம் என்றும் அக்கட்சி சுட்டிக்காட்டுகின்றது.

### ஜனாதிபதியின் யாழ். வருகை

மே தினத்தில் பெரும் எடுப்பில் தேசப்பற்றினை சிங்கள மக்கள் வெளிப்படுத்துவதானது வேறு பல பிரச்சினைகளைத் தோற்றுவித்து விடலாம் என்று ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வட்டாரங்களில் கவலை எழுந்துள்ளது. அப்படியான ஒரு நிலைமையில் தமிழ் மக்களுக்கு இருக்கக் கூடிய பிரச்சினைகளைக் கவனிப்பதில் சங்கடங்கள் ஏற்படலாம், மத்தியில் சிங்கள அதிகாரப் பலம் மிஞ்சும்போது தமிழ் சிறுபான்மையினர் பிரச்சினைகள் கவன மற்றுப் போகலாம் என்பது அவர்களின் கவலை. ஆனால் இந்த நிலைபற்றி ஜனாதிபதி கவனத்தில் கொள்ளாமலுமில்லை என்று அவர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். தமிழ் சமூகத்தினரின் நம்பிக்கையை வென்றெடுப்பதற்கு பல திட்டங்களை அவர் செயற்படுத்த எண்ணியிருக்கிறார் என்கிறார்கள் அவர்கள். அதில் ஒன்று தான் ஜனாதிபதியின் யாழ்ப்பாண விஜயத்துக்கான திட்டம். யாழ்ப்பாணத்தில் சில நாள்கள் தங்கியிருந்து பொது மக்களை தினந்தோறும் சந்தித்துப்பேச அவர் திட்டமிட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. ஜனவரியில் ஒரு தடவை அவர் இவ்வாறு செய்திருந்தார். இந்த முறையும் அவ்வாறு தங்கியிருந்து அரசின் நோக்கங்களையும் வளர்ச்சித்திட்டங்களையும் மக்களுக்கு அவர் விளக்குவார் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

### இலங்கை - இந்திய உறவுகளில் விரிசல்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அமைச்சர்களில் பலரும் ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை இலங்கையை சீர்குலைப்பதற்கான மேற்கு நாடுகளின் சதி நடவடிக்கை என்று குற்றஞ் சாட்டியிருக்கிறார்கள் இது அந்த நாடுகளுக்கும் இலங்கைக்கும் ஏற்கனவே விரிவடைந்துள்ள உறவுகளை மேலும் மோசமாக்கக் கூடிய நிலைப்பாடாகும்.

இதே விதமானதொரு நிலைமை இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலும் உருவாகியிருப்பது தெரியவந்துள்ளது. புலிகள் இயக்கத்தை அழித்தொழிப்பதற்கான போரின்போது ராஜபக்ஷ அரசுக்கு இந்தியா முழு ஆதரவை வழங்கியிருந்தது என்பது சந்தேகமில்லை. இதனால் தமிழ் நாட்டில் இந்திய அரசுக்கு சில பகுதிகளில் அதிருப்தியையும் ஏற்படுத்தியிருந்தது. அதன் பின்னர் ராஜபக்ஷவும் இந்திய பிரதமர் மன்மோகன் சிங்கும் தனித்தனியே சந்தித்து கொண்ட போதும் மற்றும் ராஜ்தந்திர நடவடிக்கைகள் ஊடாகவும் இலங்கைத் தமிழர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும்படியாக இந்தியா வற்புறுத்தியிருந்த அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை ஆரம்ப நிலையாக்கிக் கொள்ளும்படி இந்தியா வற்புறுத்தியது. கொழும்பை இவ்வாறு நெருக்கிய அதே வேளை தமிழ்க் கட்சிகளையும் இதனை ஓர் ஆரம்பமாகக் கொண்டு மேலும் தேவைகளுக்காக பேச்சுவார்த்தைகளைத் தொடரும்படி இந்தியா கேட்டிருந்தது.

இருந்தபோதிலும் போரின் பின்னர் நிகழ்ந்த சம்பவங்கள் கொழும்புக்கும் புதுடில்லிக்குமிடையிலான உறவுகளில் சீர் குலைவை ஏற்படுத்தியுள்ளன. சீனாவுக்கு இலங்கையில் அதிகவாய்ப்புகள் வழங்கப்படும் அதே சமயம் இந்தியாவினால் முன்னெடுக்கப்பட்ட சில திட்டங்கள் தாமதப்படுத்தப்பட்டுள்ளன. இதுவே முக்கியமான ஒரு காரணம் என்று கொழும்பிலுள்ள ராஜதந்திர வட்டாரங்களில் பேசப்படுகின்றது. இந்தியா முன்னெடுக்கும் திட்டங்களால் வடக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு 50,000 வீடுகளைக் கட்டித்தருவதும் மூதூரில் மின்சார உற்பத்தி செய்யும் திட்டங்களும் அடங்கும்.

நிபுணர்குழுவின் அறிக்கை தொடர்பாக இந்தியத் தலைவர்களுக்கு விளக்குவதற்கு மூவர் அடங்கிய குழு வொன்று போகவிருப்பதாகத் தெரிகின்றது.

பங்களாதேஷுக்கு விஜயம் மேற்கொள்வதற்கு முன்னர் ஜனாதிபதி ராஜபக்ஷ இந்திய பிரதமர் மன்மோகன் சிங்குடன் டெலிபோனில் தொடர்பு கொண்டு நிபுணர் குழு அறிக்கை தொடர்பாக பேசியதாகத் தெரிகின்றது.

இப்போது உறவுகளில் ஏற்பட்டுள்ள 'மந்த' நிலை காரணமாக நிபுணர்குழு தொடர்பாக இந்தியா ஒரு 'நடுநிலை'ப் போக்கை கடைப்பிடிக்கலாம் என்று கருதப்படுகின்ற - அதாவது இலங்கைக்காக சர்வதேச அரங்கில் பரிந்து பேசவும் செய்யாது ஆதரித்து நிற்கவும் மாட்டாது என்றே தோன்றுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது இலங்கைக்குப் பெரும் பின்னடைவாகவே இருக்கப் போகின்றது. போர் ஓய்ந்த கையோடு மனித உரிமை மீறல் தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலில் மேற்குலக நாடுகள் தீர்மானம் கொண்டு வர முயன்ற வேளை அது கைவிடப்பட்டமைக்கு இந்தியா இலங்கையை ஆதரித்து நின்றமையும் ஒரு காரணமாகும்.

(ப)

## கொழும்பு சாயிபாபா மத்திய நிலையத்தில் சமாதி அஞ்சலி

கொழும்பு, ஏப்.25

பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபா மகா சமாதியடைந்ததை முன்னிட்டு, கொழும்பு ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையத்தின் ஏற்பாட்டில், கொழும்பு புதுச்செட்டித்தெருவிலுள்ள சாயிநிலையத்தில் ''சாயி மகா சமாதி அஞ்சலி''க்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மேற்படி கொழும்பு சாயி நிலையத்தில் தொடர்ந்து 3 நாள்கள் காயத்திரி ஜெபத்துடன் சாயிபஜனை காலை 5 மணி தொடக்கம் மாலை 8 மணி வரை இடம்பெறும்.

புட்டபர்த்தி சென்று மகாசமாதி அஞ்சலியில் கலந்துகொள்ள முடியாத சாயி பக்தர்கள் இங்கு மலர்கள் வைத்து அஞ்சலி செலுத்தலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

(ஒ-சி)


### சேவைகள்

வீட்டு மின் இணைப்பு (House wiring) உங்கள் வீடு மற்றும் காரியாலயங்களுக்கு மிக விரைவாகவும் மலிவாகவும் வீட்டு மின் இணைப்புக்களைச் செய்துகொள்வதற்கு உடனே தொடர்புகொள்ளவும்.

தொ.பே. : 0778449170, 0750391214 (3508)

### வீடு வாடகைக்குண்டு

மின்சார நிலைய வீதி, 3 ஆம் ஒழுங்கை (சி.பொன்னம்பலம் வீதி)யில் சகல வசதிகளுடன் சிறிய குடும்பம் வசிக்கக்கூடிய வீடு வாடகைக்குண்டு.

(3504) தொடர்பு:0776184568

### T.V விற்பனைக்குண்டு

வெளிநாட்டிலிருந்து கொண்டு வரப்பட்ட பிலிப்ஸ்HD LCD,45" அளவுடைய T.V விற்பனைக்குண்டு. கொள்வனவு செய்பவர்களுக்கு BLU-RAY Player இலவசமாக வழங்கப்படும்.

நிர்ணயிக்கப்பட்ட விலை 140000/=

(3506) தொடர்பு:0777570599

### மரண அறிவித்தல்

#### செல்லத்துரை மகேஸ்வரன்



மஞ்சவனப்பதி வீதி, கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை மகேஸ்வரன் நேற்று (24.04.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2011) திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மு.ப. 11 மணிக்கு தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில். (3505)

தகவல்:
பிள்ளைகள்.

### 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
04
★
11
★
1942



விண்ணில்
21
★
04
★
2006

அமரர் நாகலிங்கம் கணபதிப்பிள்ளை(J.L.S லொறி உரிமையாளர்)

அன்பாகக் குடும்பம் காத்தே
ஆற்ற லோக செயல் ஆற்றி
இன்முகத்தோடு என்றும் இருக்கும்
ஈடிணையற்ற தெய்வத்தை இழந்தே
உருகித் தினம் அழுகின்றோம்.
ஊருலகில் உத்தமனாய் வாழ்ந்த
எம் உயிர் போன்றவரை
ஏற்ற முற என்றும் நினைத்தே
அப்பாவின் நினைவில் அஞ்சலிக்கின்றோம்.

பொன். கந்தையா வீதி,
நெல்லியடி, கரவெட்டி. (சி/577927)

குடும்பத்தினர்.

### மரண அறிவித்தல்

#### திருமதி இராஜேஸ்வரி தியாகராஜா



வட்டுக்கோட்டையைச் சேர்ந்த திருமதி இராஜேஸ்வரி தியாகராஜா நேற்று (24.04.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரேசு தியாகராஜாவின் (முன்னாள் ஊழியர் உப்புக் கூட்டுத்தாபனம்) அன்பு மனைவியும், சித்தன்கேணியைச் சேர்ந்த பொன்னம்பலம்-மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும், கதிரேசு-சரஸ்வதி, தம்பதியரின் பாசமிகு மருமகளும் மகேந்திரராஜா, குபேந்திரராஜா (இராஜேந்திரம்) ஆகியோரின் அன்புச் சகோதரியும், நடராஜா, தவராஜா, பூபாலராஜா, கமலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும், திருமதி பேபிறோஜா ஸ்கந்தகுமார், திருமதி அனுஷா சர்வேஸ்வரன் (கனடா), சங்கர்(கனடா) ஆகியோரின் பாசமிகு தாயும், குகதர்சிகா, எழிலரசி, அனுறோஜினி, கணானன், ஆரபி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2011) திங்கட்கிழமை மூளாய் வீதி, வட்டுக்கோட்டையிலுள்ள அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மு.ப. 10 மணியளவில் வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை. (c/577926)

தகவல்:
குடும்பத்தினர்.

### முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சின்னத்தம்பி மகேஸ்வரன்
(ஓய்வூதியர், இலங்கை வங்கி, யாழ்ப்பாணம்)

ஆண்டொன்று ஆனாலும் எங்கள் உள்ளங்கள்
ஆறுதில்லையே அலைகடல் போல்
ஆர்ப்பரிக்கின்றதப்பா ராசாவே
உன்துணையாள் துடிதுடிப்பதை
ஒரு தரம் வந்து பாரய்யா?
அப்பா நீ திரும்பி வருவாய் என்று
தான் நம்பி இருந்தோம்
ஏன் அப்பா வர மறுத்தாய் நீ
இல்லாமல் நாங்கள் துடிக்கின்றோம் அப்பா
பாசத்துடன் வளர்த்த பேரப்பிள்ளைகள் கூட
மறக்கவில்லை அப்பா
அப்புச்சியை கோயிலுக்குக் கொண்டுசென்று விட்டீர்கள்
கூட்டிக்கொண்டு வருமாறு கேட்கின்றார்கள் அப்பா
என்ன செல்வது என்று தெரியாமல் துடிதுடிக்கின்றோம் அப்பா
அழைத்த குரலுக்கு வந்து நிற்பாயே நீ
இல்லை என்று நினைத்தால் எங்களால் தாங்கமுடியவில்லையே
பாரினிலே எங்களை வாழவைத்துவிட்டு நீ மட்டும்
ஏன் அப்பா சென்றாய்- எம்முடன் வாழ
மீண்டும் ஒரு தடவை வரமாட்டாயா?
எத்தனை ஆண்டுசென்றாலும் எம்முடன் நிலைத்திருப்பாய்.

தோற்றம் 25.09. 1946
மறைவு 06. 05. 2010

எமது குடும்பத்தின் ஆணிவேராய் விளங்கிய அமரர் சின்னத்தம்பி மகேஸ்வரன் அவர்களின் முதலாம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் மதிய போசனமும் இன்று (25.04.2011) திங்கட்கிழமை நடைபெறவுள்ளன. இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள், மருமகள், பேரப்பிள்ளைகள். (3507)

உதயன் தொடர்புகளுக்கு

ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: admin@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




| நகரம் | வானிலை | பகல் | இரவு | காற்று |
| --- | --- | --- | --- | --- |
| பா | | 30°c | 25°c | |
| மன் | | 30°c | 27°c | |
| வவு | | 32°c | 24°c | |
| முல் | | 31°c | 26°c | |
| கிளி | | 31°c | 26°c | |

அனைத்து மாவட்டங்களிலும் மழை பெய்வதற்கான சாத்தியம் உள்ளது.

# ஆசிரியர் இடமாற்றத்தை அமுல் செய்யும்வரை முன்னைய பாடசாலைகளைப் புறக்கணிப்போம்

## பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் தீர்மானம்

யாழ்ப்பாணம், ஏப்.25

யாழ்.மாவட்டத்தில் இடமாற்றம் வழங்கப்பட்டுப் பின்னர் ரத்துச் செய்யப்பட்ட ஆசிரியர் இடமாற்றத்தை அமுல்படுத்தும்வரை கடமையாற்றிய பாடசாலைகளுக்குச் சமுகமளிப்பதில்லை என்ற தீர்மானத்தை எடுத்துள்ளனர் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள்.

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் யாழ்.மாவட்டத்துக்கு அதிக எண்ணிக்கையான ஆசிரியர்களுக்கு அண்மையில் இடமாற்றம் வழங்கப்பட்டது.

இந்த நிலையில் வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரனால் அந்த இடமாற்றம் அனைத்தும் இரத்துச் செய்யப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் மருதனார் மடத்திலுள்ள வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகத்துக்கு முன்பாக நேற்றுக் காலை ஒன்றுகூடிய சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இவ்வாறு தீர்மானித்துள்ளனர்.

எமக்கு வழங்கப்பட்ட நியாயமான இடமாற்றத்தை இன்று முதல் யாழ்.மாவட்டத்தில் எமக்கு அனுமதிக்கப்பட்ட வலயங்களில் கடமையாற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் நியாயமான பதில் கிடைக்கும் வரை கடமையாற்றிய பாடசாலைகளுக்குச் செல்வதில்லை என்றும் அவர்களால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆசிரியர்கள் நேற்று மதியம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ். நகர அலுவலகத்துக்குச் சென்று தமது நிலைப்பாட்டை விளக்கி மகஜர் ஒன்றையும் கையளித்தனர்.

இதேவேளை-

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தால் யாழ். மாவட்டத்துக்கு இடமாற்றம் பெற்றுப் பின்னர் இரத்துச் செய்யப்பட்டமையால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களை இன்று திங்கட்கிழமை காலை 8.30 மணிக்கு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் யாழ்ப்பாண அலுவலகத்தில் ஒன்றுகூடுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.

இடமாற்றம் இரத்துச் செய்யப்பட்டமையால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் சார்பாக உடனடித் தீர்மானங்கள் எடுக்கப்படவிருப்பதால் அங்கு ஒன்றுகூடுமாறு மேலும் அறிவித்துள்ளனர். (ஐ-14)

## உபதபால் அதிபர்களுக்கு 60 வயது வரை சேவை நீடிப்பு

யாழ்ப்பாணம், ஏப்.25

நிரந்தர நியமனம் பெற்ற உபதபாலதிபர்களுக்கு 60 வயதுவரை சேவை நீடிப்பை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேற்றையதினம் யாழ்.பிரதம தபாலகத்தில் இடம்பெற்ற உபதபாலதிபர்களுக்கான விசேட கலந்துரையாடல் நிகழ்வில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் உபதபால் அதிபர்களின் சேவை நீடிப்பு 55 வயதாக இருந்தது. ஆனால் அவர்களுக்கான நிரந்தர நியமனங்கள் 2000 ஆண்டு தொடக்கமே வழங்கப்பட்டு வருகின்றன.

இதனால் சேவையில் உள்ள தபாலதிபர்கள் நலன் கருதி மேலதிகமாக 5 வருடங்கள் சேவைகளை வழங்குவதற்குத் தபால் அமைச்சிடம் தாம் கோரிக்கை விடுத்துள்ளதால் இது தொடர்பாக அனுமதிகள் கிடைத்தவுடன் நடைமுறைப்படுத்தப்படும் என அகில இலங்கை உபதபால் அதிபர்களின் தொழிற்சங்கத்தின் பிரதான தலைவர் விமலரத்ன தசநாயக்க இந்தக் கலந்துரையாடலில் தெரிவித்தார். (ஐ-313)



உயிர்ப்பு ஞாயிறுதின வழிபாடுகள் நேற்று கத்தோலிக்க மக்களால் அனைத்துத் தேவாலயங்களிலும் நிறைவேற்றப்பட்டன.
பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் உயிர்த்த இயேசுவின் திருச்சொரூபம் பவனியாக எடுத்து வரப்படுகின்றது. (ஐ-135)

## படையினரின் ஏற்பாட்டில்

# வரணியில் இடம்பெற்ற மருத்துவமுகாம்; 900 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள்

வரணி, ஏப்.25

வரணியில் இடம்பெற்ற மருத்துவமுகாமில் கண்பார்வை பாதிக்கப்பட்ட 900 பேருக்கு மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டன.

52ஆவது படைப்பிரிவினர் அபிருத்தி லொத்தர் சபையின் அனுசரணையுடன் இந்த முகாமை நடத்தினர்.

வரணி மகாவித்தியாலயத்தில் பொதுமக்களுக்கு இலவச பரிசோதனையுடன் கூடிய கண்ணாடி வழங்கல், பாடசாலை மாணவர்களுக்குக் கல்வி உபகரணப் பொதி வழங்கல் மற்றும் செவிப்புலன் அற்றவர்களுக்கான சிகிச்சைகள் என்பன இடம்பெற்றன.

இந்த நிகழ்வை அபிவிருத்தி லொத்தர்சபை 52 ஆவது பிரிகேட் படைத்தரப்பினருடன் இணைந்து நடத்தியது. இதற்கு 522 மற்றும் 523 ஆவது படையணியினரும் அனுசரணை வழங்கினர்.

இந்த நிகழ்வு ஆரம்பத்தில் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமானது. வரவேற்புரையை 52ஆவது படைத்தளபதி பிரிகேடியர் அனுர பிரியதர்சன நிகழ்த்தினார். பின்பு அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவர் ஜயலத் ரவி திஸாநாயக்க சிறப்புரை நிகழ்த்தினார்.

சுமார் 900 பேருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகளும் சுமார் 200 பேர் வரையான பாடசாலை மாணவர்களுக்குப் பாடசாலைக் கல்வி உபகரணப் பொதிகளுடன் அபிவிருத்தி லொத்தர் சபைச் சின்னம் பொறிக்கப்பட்ட தொப்பிகளும் வழங்கப்பட்டன.

தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்தின் சகல பிரதேச மக்களும் வடமராட்சிப் பகுதியின் கிழக்கு மற்றும் கரவெட்டிப் பிரதேச மக்கள் ஒரு பகுதியினரும் இந்த நிகழ்வில் பங்குபற்றி இலவசக் கண்ணாடிகளைப் பெற்றுக் கொண்டனர். இந்த நிகழ்வுக்கு அபிவிருத்தி லொத்தர் சபையின் தலைவர் மேலதிக முகாமையாளர் அனுர ஜெயரட்ன மற்றும் செயற்பாட்டு முகாமையாளர் பிரதீப் விஜேசிறிவர்த்தன ஆகியோர் தமது குழுவினருடன் வருகை தந்து இந்த நிகழ்வுக்கு ஊக்கம் கொடுத்தனர்.

இந்த நிகழ்வுக்குத் தூரப் பிரதேசங்களில் இருந்து வருகை தந்திருந்த மக்களுக்குப் போக்குவரத்து வசதியைப் பாதுகாப்புத் தரப்பினர் ஒழுங்கு செய்து கொடுத்திருந்தனர்.

பிரதேசப் பாதுகாப்புத் தரப்பினர் பாதுகாப்பு ஒழுங்குகள் உட்பட மக்களுக்கான சகல ஒழுங்குகளையும் கவனித்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-122)

## கல்விமாணி பரீட்சை முடிவுகள் வெளியாகின

யாழ்ப்பாணம், ஏப்.25

தேசிய கல்வி நிறுவக கல்விமாணிப் பட்ட நெறி மூன்றாம் வருடப் பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்தவர்களின் விவரங்கள் தேசிய கல்வி நிறுவகத்தால் வெளியிடப்பட்டுள்ளன. மேற்படி விவரங்களை யாழ். தேசிய கல்வியியற் கல்லூரியில் பார்வையிடமுடியும்.

மூன்றாம் வருட மீள் பரீட்சைக்குத் தோற்றவிரும்புபவர்களை இன்று திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரிக்குச் சமுகமளிக்குமாறு தேசிய கல்வி நிறுவக இணைப்பாளர் எஸ்.ஆர். சத்தியேந்திரம் பிள்ளை அறிவித்துள்ளார்.

# நிகழ்வுகள்

### விழிப்புணர்வுக் கருத்தரங்கு

தென்மராட்சி, ஏப்.25

தென்மராட்சிப் பிரதேச ஆயுர்வேதப் பாதுகாப்புச் சபையால் நடத்தப்படும் பிரதேச பாலர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகளுக்கான ஆயுர்வேத மூலிகைப் பயன்பாடு தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு தென்மராட்சிப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது என சபைச் செயலாளர் அறிவித்துள்ளார். (ற-207)

### சனசமூக நிலைய சமாசக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஏப்.25

வலி.கிழக்குப் பிரதேச சபையின் கீழ் இயங்கும் சனசமூக நிலையங்களுக்கான சமாசக் கூட்டம் நாளை செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்குப் பிரதேச சபையின் தலைமை அலுவல மாநாட்டு மண்ட பத்தில் நடைபெறும் என்று செயலாளர் திருமதி சோ.ஜெயந்தா அறிவித்துள்ளார். (ஐ-15)

### அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம்

வரணி, ஏப்.25

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி செ. சுந்தரேசன் தலைமையில் நடைபெறவுள்ளது என சங்கத்தலைவர் அறிவித்துள்ளார். (ற-122)

# மண்டேலா தலைமையிலான உலகளாவிய அமைப்பு இலங்கையின் போர்க் குற்ற விசாரணைக்கு வலியுறுத்து

நெல்சன் மண்டேலா தலைமையிலான உலகளாவிய ஜனநாயக அமைப்பு இலங்கையின் போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணைக்கு வலியுறுத்துகின்றது.

சர்வதேச நாடுகளின் முக்கிய தலைவர்கள் பலர் ஒன்று சேர்ந்து தென்னாபிரிக்க முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா தலைமையில் ''த எல்டர்ஸ்'' எனும் பெயரிலான அமைப்பொன்றை உருவாக்கிக் கொண்டுள்ளனர்.

அந்த அமைப்பின் ஒட்டு மொத்த உறுப்பினர்களும் இலங்கையில் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறப்படும் போர்க்குற்றங்கள் தொடர்பில் முறையான விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

அது தொடர்பில் உத்தியோக பூர்வ அறிக்கையொன்றையும் வெளியிட அவர்கள் தீர்மானித்துள்ளனர்.

''த எல்டர்ஸ்'' அமைப்பில் நெல்சன் மண்டேலா, அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதியும் இந்த நூற்றாண்டின் மிகப் பெரும் இராஜதந்திரியுமான ஜிம்மி கார்ட்டர், மியன்மாரின் ஜனநாயகத் தலைவி அவுன்சான் சூகி, முன்னைனாள் ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனான், முன்னாள் பின்லாந்து ஜனாதிபதியும் நோபல் பரிசு பெற்றவருமான மார்டி அதிசாரி, முன்னைனாள் ஐ.நா வின் மனித உரிமைகள் ஆணையாளரும், முன்னாள் அயர்லாந்து ஜனாதிபதியுமான மாரி ரொபின்சன், தென்னாபிரிக்காவின் பிரபல பிஷப் டெஸ்மன் டுட்டு ஆகியோரும் அங்கத்துவத்தைக் கொண்டுள்ளனர்.

இலங்கையின் போர்க் குற்றங்கள் குறித்து சுயாதீன விசாரணையொன்றின் அவசியம் குறித்து அவர்களால் விடுக்கப்படவுள்ள அறிக்கையானது, சர்வதேச அளவில் இலங்கை மீதான போர்க்குற்ற விசாரணைகளுக்கு இன்னுமோர் உந்து சக்தியாக அமையும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (ஒ-10) (தமிழ்வின்)

## உலகின் மிகக்குறைந்த புவியீர்ப்பு மையமாக இலங்கை

உலகில் புவியீர்ப்புச் சக்தி மிகவும் குறைவாகக் காணப்படும் மையமாக அது தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்ட விஞ்ஞானிகளால் இலங்கை கணிப்பிடப்பட்டுள்ளது.

உலகின் புவியீர்ப்பு சக்தி பிரிந்து செல்லும் பரம்பல் முறை குறித்து அண்மையில் விஞ்ஞானிகள் ஆய்வொன்றை மேற்கொண்டிருந்தனர். அதன் போதே இலங்கையானது மிகவும் குறைந்த புவியீர்ப்பைக் கொண்ட மையமாக அடையாளம் காணப்பட்டுள்ளது.

இலங்கையிலும் தென் மாகாணமும் அதன் கடலோரப் பகுதிகளுமே கூடுதலான அளவில் புவியீர்ப்பு சக்தி குறைவாகக் காணப்படும் பிரதேசங்களாகும். அதற்கான காரணம் குறித்து விஞ்ஞானிகளால் இதுவரை கண்டறிய முடியாமற் போயுள்ளது.

பொதுவாகக் கடலோரப் பிரதேசங்களில் அதிகூடிய புவியீர்ப்பு சக்தி காணப்படுவது இயல்பாக இருந்த போதிலும், தென்னிலங்கையின் கடலோரப் பிரதேசங்கள் அதற்கு எதிர்மாறான பண்பைக் கொண்டுள்ளன.

உலகின் அதிகூடிய புவியீர்ப்புச் சக்தி வலயமாக பிரிட்டன் மற்றும் கிரீண்லன்ட் தீவுகளுக்கிடையிலான கடல் பகுதி காணப்படுவதுடன் அங்கு 60-100 வரையான மிலிகல் (புவியீர்ப்புச் சக்தி அளவீடு) புவியீர்ப்புச் சக்தி நிலவுவதாக கண்டறியப்பட்டுள்ளது.

அதே நேரம் தென்னிலங்கையில் புவியீர்ப்புச் சக்தி மறை பெறுமதியில் 60-120 அளவில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ-10) (தமிழ்வின்)

## இணையச் செய்திகள்

### பல்கலைக்கழக பிரச்சினைகளை ஆராய ஐ.தே.க. குழு

பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சி குழுவொன்றை நியமித்துள்ளது.

இந்தக் குழு பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களுடன் கலந்துரையாடி, பல்கலைக்கழக ஆசிரியர்கள் எதிர்நோக்கும் சம்பளப் பிரச்சினை மற்றும் ஏனைய பிரச்சினைகளை ஆராய்ந்து கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிடம் அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்கவுள்ளது.

## புலிகளின் முக்கிய தலைவர்கள் சரணடைவதை மஹிந்த, கோத்தபாய ஏற்றுக்கொண்டிந்தார்கள்

இறுதிக்கட்ட யுத்தத்தின் போது விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்கள் சரணடைவது குறித்து பாதுகாப்புச் செயலாளரும், ஜனாதிபதியும் ஏற்றுக் கொண்டிருந்தார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்கள் பலர் அதன் அரசியல் பிரிவுத் தலைவர் நடேசனின் தலைமையில் சரணடையத் தயாராக இருப்பதாக சர்வதேச நாடுகள் மற்றும் முக்கிய அமைப்புகளுக்கு அறியப்படுத்தப்பட்டிருந்தது. ஐக்கிய அமெரிக்கா, நோர்வே, ஐக்கிய நாடுகள் சபை மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் என்பன அவற்றில் முக்கியமானவையாகும்.

### நிபுணர் குழு அறிக்கை

பிரஸ்தாப சரணடைதல் விவகாரம் தொடர்பில் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரைத் தொடர்பு கொண்டு விசாரித்த போது அவர்களும் அதனை ஏற்றுக் கொண்டிருந்தனர் என்று நிபுணர் குழு தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

ஆயினும் நடேசன், புலித்தேவன், ரமேஷ் ஆகியோர் தங்களுக்குக் கிடைக்கப்பெற்ற அறிவுறுத்தல்களின் பிரகாரம் சரணடையச் சென்றிருந்த போதிலும் அவர்கள் போர்க்களத்தில் நடைபெற்ற மோதல்களில் கொல்லப்பட்டு விட்டார்கள் என அறிவிக்கப்பட்டிருந்தது.

அவர்களின் சரணடைதல் விவகாரம் வெற்றியடைந்திருக்கும் பட்சத்தில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனும் சரணடையத் தயாராக இருந்தார் எனவும் நிபுணர் குழு அறிக்கை சுட்டிக்காட்டுகின்றது.

ஆயினும் விடுதலைப் புலிகளின் உயர்மட்டத் தலைவர்களின் படுகொலைகள் தொடர்பில் போதுமான சாட்சியங்கள் கிடைக்கப்பெறவில்லை என்றும் நிபுணர் குழு தனது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளது. (ஒ-10) (தமிழ்வின்)

### சீர்திருத்தம்...



கொழும்பு, புறக்கோட்டை சட்டவிரோத இறுவட்டு விற்பனை நிலையங்களை நேற்று ஞாயிற்றுக்கிழமை முற்றுகையிட்ட பொலிஸார் அங்கு விற்பனைக்காக வைத்திருந்த இறுவட்டுக்கள் பலவற்றையும் பரிசோதிப்பதைப் படத்தில் காணலாம். (ஒ-10) (தமிழ்மிரர்)

## புலிகள் அமைப்பு ஒழுக்கம் நிறைந்தது – கோத்தபாய சீற்றம்

பிரபாகரனின் தேவைதான் பான் கீ மூனின் நிபுணர்கள் குழுவின் அறிக்கையில் உள்ளது. அத்துடன், விடுதலைப்புலிகள் ஒழுக்கம் நிறைந்த அமைப்பு எனவும் அதில் கூறப்பட்டுள்ளது என இலங்கை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

பான் கீ மூனின் நிபுணர்கள் குழுவின் அறிக்கை தொடர்பில் வெளிவிவகார அமைச்சு அறிக்கையொன்றை வெளியிடுவதற்கு முன்னர், நீங்கள் ஏன் அது குறித்துக் கருத்து வெளியிட்டீர்கள் என இரிதா லங்கா பத்திரிகையின் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். நான் நினைத்ததைச் செய்பவர் எனவும் எவரும் கூறும் வரை பார்த்துக்கொண்டிருப்பவர் அல்லர். இலங்கையில் உள்ள எவருக்கும் எதிராகப் பான் கீ மூனின் அறிக்கை எதனையும் செய்ய முடியாது எனவும் பாதுகாப்புச் செயலாளர் கூறியுள்ளார். விடுதலைப்புலிகளின் தேவைக்கு அமையயே நிபுணர்கள் குழுவின் அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. யுத்த காலத்தில் கூட விசேட பொறுப்புடன் செயற்பட்ட நாடு இலங்கை.

நிபுணர்கள் குழுவின் அறிக்கை சர்வதேச சட்டத்திற்கு முரணாகத் தயாரிக்கப்பட்ட அறிக்கை என அண்மையில் ரஸ்ய தூதுவர் தெரிவித்தார்.

பிரபாகரனின் தேவைதான் அறிக்கையில் உள்ளது. இலங்கையை அடிப்படைவாத பௌத்த நாடாக மாற்றப் போவதாக அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அத்துடன், விடுதலைப்புலிகள் ஒழுக்கம் நிறைந்த அமைப்பு எனவும் அதில் கூறப்பட்டுள்ளது எனவும் கோத்தபாய கூறியுள்ளார். (ஒ-10) (பதிவு)

## ஐ.நா. நிபுணர்குழு அறிக்கையால் பெரும் தர்மசங்கடத்தில் இந்தியா

ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பாக இந்திய அரசின் நிலைப்பாடு எவ்வாறு இருக்கும் என்ற கேள்விக்கு இந்தியா பெரும் தர்மசங்கடத்தை எதிர்கொள்ளும் என்று கருத்துத் தெரிவித்துள்ளார் டில்லியில் உள்ள ஜவகர்லால் நேரு பல்கலைக் கழகத்தின் தெற்காசியவியல் துறை பேராசிரியர்களுள் ஒருவராக இருக்கின்ற பி. சகாதேவன்.

ஐ.நா நிபுணர் குழுவின் அறிக்கை தொடர்பாக பி.பி.சி தமிழோசை கருத்துக் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் முக்கியமாகத் தெரிவித்துள்ள விடயங்கள் வருமாறு,

இந்தியா தன் மீதான குற்றச்சாட்டுக்கள் வலுவடைவதை விரும்பாது.

ஆனால் இனப்பிரச்சினைக்குத் தீர்வுத் திட்டமொன்றை இலங்கை கொண்டுவருதற்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஒன்றை தமிழ் நாட்டிலிருந்து எழக்கூடிய அழுத்தங்கள் ஏற்படுத்தலாம்.

ஆனாலும் இலங்கையின் உறவை இழக்க இந்தியா விரும்பாது.

தெற்காசியப் பிராந்தியத்தில் இலங்கை வேறு நட்பு நாடுகளையும் கொண்டிருக்கின்ற நிலையில், இலங்கை மீது நேரடியாக ஓர் அழுத்தத்தைக் கொடுத்து உறவில் கசப்புணர்வுகளை ஏற்படுத்திக் கொள்ளும் நிலையிலும் இந்தியா இல்லை. (ஒ-10) (புதினப்பலகை)

## யாழில் தொடரும் படுகொலைகள்; பின்னணியில் கபில கெந்தவிதாரண

யாழ். குடாநாட்டில் தொடரும் கொலை, பாலியல் வன்புணர்வுகளின் பின்னணியில் இலங்கை இராணுவ உளவுத் துறை மேஜர் ஜெனரல் கபில கெந்தவிதாரணவே செயற்படுகின்றார் என ஸ்ரீலங்கா கார்டியன் செய்தி வெளியிட்டுள்ளது.

இது தொடர்பாக அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு :- அண்மையில் யாழ். குடாநாட்டில் திருமதி அனித்தா அன்னலிங்கம் என்ற பெண் வன்புணர்வின் பின்னர் கொல்லப்பட்டார்.

இதனை இலங்கை இராணுவ உளவுத்துறையினரே மேற்கொண்டிருந்ததுடன் அதன் பணிப்பாளராக இருந்த கபில கெந்தவிதாரணவே இதனை செயற்படுத்தி இருந்தார்.

### ஸ்ரீலங்கா கார்டியன் தகவல்

குறித்த இராணுவப் புலனாய்வுப் படையணி வன்னியிலும் செயற்பட்ட வருகிறது. குறித்த படையணியை வழி நடத்துவது முகமட் எனவும் முகமட்டின் பெயரை மறைத்து கபில கெந்தவிதாரண அவருக்கு றஞ்சித் என்ற பெயர் வைத்துள்ளனர் எனவும் ஸ்ரீலங்கா கார்டியன் தெரிவித்துள்ளது.

மேலும் தம்மிடம் குறித்த முகமட் குழுவின் உறுப்பினர்களின் ஒளிப்பட ஆதாரங்கள் இருப்பதாகவும் ஸ்ரீலங்கா கார்டியன் தெரிவித்துள்ளது.

இதேவேளை, வன்னி பிராந்திய இராணுவப் புலனாய்வுத் தளபதி யாக முகமட் என்ற அதிகாரி செயற்பட்டு வருகின்றார் என்பது உறுதியாகத் தெரியவந்துள்ளது.

முகமட் என்ற இந்த அதிகாரி கடந்த 2009 ஆம் ஆண்டு இறுதி காலம் வரை இலங்கையின் பிரான்ஸ் நாட்டுத் தூதுவராலயத்தில் பாதுகாப்பு பிரிவின் புலனாய்வுத் தலைமை அதிகாரியாகக் கடமையாற்றியுள்ளார்.

அதன்பின்னர் முகமட் அங்கிருந்து தனது சேவைக்காலத்தை முடித்துக்கொண்டு வன்னி சென்று அங்குபிராந்திய புலனாய்வுப் பிரிவை பொறுப்பேற்றுள்ளார்.

(ஒ-10) (தமிழ் சி.என்.என்.)

## இணங்கி வரா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிபுணர் குழுவின் போர்க் குற்ற அறிக்கை ஐ.நா. பாதுகாப்புச் சபையில் அல்லது மனித உரிமைகள் சபையில் விவாதத்துக்குக் கொண்டுவரப்படலாம் என்ற நிலைமை இருப்பதால், இந்த விடயத்தில் இந்தியாவின் ஆலோசனையையும் உதவியையும் பெறுவதற்காகவே இலங்கைக்குழுவை இந்தியாவுக்கு அனுப்ப ஜனாதிபதி முடிவு செய்திருந்தார்.

ஆனால், கடந்த சில ஆண்டுகளில் இலங்கை நடந்துகொண்ட விதம் மற்றும் ஏற்கனவே புதுடில்லிக்கு வழக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றக் கொழும்பு தவறி இருப்பது ஆகியவற்றால் ஐ.நா. விவகாரத்தில் இலங்கைக்கு உடனடியாக எந்த உதவிகளையும் வழங்குவதில்லை என்ற முடிவை புதுடில்லி எடுத்திருப்பதாக இராஜதந்திரி ஒருவர் தெரிவித்தார். குறிப்பாகத் தமிழர்களுடனான பிரச்சினைக்கு விரைவில் அரசியல் தீர்வு காணப்படும் என்று போருக்கு முன்னர் வழங்கிய உறுதிமொழியை நிறைவேற்ற கொழும்பு தவறியிருப்பதால் புதுடில்லித் தலைமை விசனம் அடைந்துள்ளதாகத் தெரிகிறது. எனவே ஐ.நா. விடயத்தை கொழும்பு மீது அழுத்தம் கொடுப்பதற்கான சந்தர்ப்பமாகப் பயன்படுத்த இந்திய ஆட்சியாளர்கள் விரும்புகின்றனர் என்று அந்த இராஜதந்திரி மேலும் தெரிவித்தார்.

இந்த விடயம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் புதுடில்லி செய்திகள் கூறுகின்றன. ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை இலங்கை அரசிடம் கையளிக்கப்பட்ட ஒரு சில தினங்களில் அது தொடர்பில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குடன், ஜனாதிபதி தொடர்பு கொண்டு பேசினார். அப்போது இந்தியாவின் தற்போதைய நிலைப்பாடு குறித்து அவருக்குத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

போர் முடிந்த பின்னர் உடனடியாக ஓர் அரசியல் தீர்வு காணப்படும் என்று தமக்கு வழங்கப்பட்ட உறுதிமொழி நிறைவேற்றப்படவில்லை, போரின் பின்னர் தமிழர் பகுதிகளை மீளக் கட்டியெழுப்பும் நோக்கோடு இந்தியாவால் ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களுக்கு முட்டுக்கட்டைகளை ஏற்படுத்திக் கொண்டிருப்பது, குறிப்பாக 50,000 வீடுகளை அமைத்துக் கொடுக்கும் திட்டம் மற்றும் கிழக்கில் நுரைச்சோலைத் திட்டம், கொழும்பு - தூத்துக்குடி படகுச் சேவை என்பவற்றைத் தாமதப்படுத்துவது என்று இந்தியாவுக்கு எதிரான போக்கையே கொழும்பு மேற்கொண்டிருக்கும் போது எப்படி புதுடில்லியால் தொடர்ந்தும் சர்வதேச அரங்கில் இலங்கையைப் பாதுகாக்க முடியும் என்று இந்தியப் பிரதமர் அந்தச் சந்தர்ப்பத்தில் கேள்வி எழுப்பினார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்தியப் பிரதமருடனான பேச்சில் சாதகமான சமிக்ஞை கிடைக்காததை அடுத்து, புதுடில்லிக்கு உயர் மட்டக் குழுவை அனுப்பி நிலைமையைச் சமாளிப்பதற்கு ஜனாதிபதி முயற்சி எடுத்துள்ளார். ஆனால் அதற்கும் இந்தியா சாதகமான சமிக்ஞை காட்டவில்லை. மே மாத இறுதிவரைக்கும் இலங்கைக் குழுவைச் சந்திக்க நேரமில்லை என்று தெரிவித்துவிட்டது இந்தியா.

வன்னியில் போர் தீவிரமாக நடைபெற்ற காலத்தில் மனித உரிமை விவகாரங்களைக் காட்டி கொழும்பு மீது அழுத்தங்கள் கொடுக்கப்படுவதை இந்தியா தடுத்து வந்தது. இரண்டு முக்கிய காரணங்களுக்காக இந்தியா இந்த இராஜதந்திர உதவிகளை கொழும்புக்கு வழங்கியது. முதலாவது விடுதலைப் புலிகள் இயக்கத்தை போராட்டக் களத்தில் இருந்து அகற்றுவது; இரண்டாவது புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் உடனடியாக தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றைக் காணப்படும் என்ற கொழும்பின் உறுதி மொழி. ஆனால் போர் முடிவடைந்து இரண்டு வருடங்களாகிவிட்ட போதும் அரசியல் தீர்வு ஒன்று காண்பதற்கான முயற்சிகளை கொழும்பு அரசு எடுக்கவில்லை. அது தொடர்பில் புதுடில்லி அழுத்தங்களைக் கொடுக்கும் போதெல்லாம் வெவ்வேறான காரணங்களைக் சொல்லி இலங்கை தட்டிக்கழித்து வந்தது.

அதேசமயம் போரைக் காரணம் காட்டி சீனாவுடன் உறவுகளை வளர்த்துக் கொண்ட இலங்கை, போர் முடிவடைந்த பின்னரும் சீனாவுடனான உறவுகளை மேலும் பலப்படுத்தி வருகிறது. இது எதிர்காலத்தில் இந்தியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் என்ற அச்சம் புதுடில்லி மூலோபாய வகுப்பாளர்களிடம் ஏற்பட்டள்ளது. இந்தயா இந்த அச்சத்தை கொழும்பிடம் வெளிப்படுத்தும் போதெல்லாம், இந்தியாவை மீறி எதுவும் செய்ய மாட்டோம் என்று கூறிச் சமாளிக்கும் போக்கையே கொழும்பு கொண்டிருக்கிறது. இந்தப் போக்கு ஆபத்தானது என்று கருதும் புதுடில்லி மூலோபாய வகுப்பாளர்கள் அதனை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும் என்று இப்போது கருதுகிறார்கள்.

(உ-ஐ)

## இலங்கைக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எந்தவொரு பிரேரணையும் ரஷ்யா, சீனா ஆகிய நாடுகள் தமது வீட்டோ அதிகாரத்தைப் பயன்படுத்தி செல்லுபடியற்றதாக்க முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

(ஒ-சி)

## 10 லட்சம் விவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு-

இலங்கை தொடர்பாக ஐக்கிய நாடுகள் சபையின் நிபுணர் குழுவின் அறிக்கையானது தமிழீழ விடுதலைப் புலிகளின் நிழலாக காணப்படுகின்றது. இலங்கை அரசையும், நாட்டையும் இழிவுபடுத்தும், அவமதிக்கும் நோக்கிலேயே இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. இந்த நிலையில் தேசிய மற்றும் சர்வதேச ரீதியாக இந்த அறிக்கைக்கு எதிராக குரல் எழுப்புவதற்கு விவசாயிகளைக் கொண்டு இந்த ஆர்ப்பாட்டத்தை நடத்தவிருக்கின்றோம் - இப்படி அவர் தெரிவித்துள்ளார்.

(சி)

## இராஜதந்திரிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதில் சீனத் தூதுவர் பங்குபற்றுகின்றமையைத் தவிர்த்துவிட்டார். ஆனால் அழைப்புக் கிடைத்தமையை மட்டும் தூதரகம் வெளிவிவகார அமைச்சுக்கு உறுதிப்படுத்தி இருந்தது.

சீனத் தூதுவர் இதில் பங்குபற்றாதமை குறித்து இராஜதந்திரிகள் மத்தியில் ஆச்சரியம் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையின் நட்பு நாடான சீனா, ஐ.நாவின் அறிக்கை தொடர்பான முக்கிய இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டு தனது எதிர்ப்புத் தெரிவிக்கும் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில், அந்த நாட்டுப் பிரதிநிதி கலந்து கொள்ளவில்லை என்று கொழும்பு ஊடகம் ஒன்று தெரிவித்தது.

(ஒ-ஐ)

## நிபுணர்குழு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார்.

196 பக்கங்களைக் கொண்ட இந்த அறிக்கை, மாற்றங்கள் எவையும் செய்யப்படாமல் திட்டமிட்டபடி இன்று வெளியிடப்படும் என்று அவர் மேலும் கூறினார்.

இந்த அறிக்கை இந்த மாதம் 12 ஆம் திகதி பான் கீ மூனிடம் ஐ.நா நிபுணர் குழுவால் ஒப்படைக்கப்பட்டது.அதே தினத்தன்று அதன் பிரதி ஒன்று இலங்கை அரசுக்கும் வழங்கப்பட்டது.

இந்த அறிக்கைக்கு இலங்கை அரசு கடும் எதிர்ப்பைத் தெரிவித்தது. ஐ.நா நிபுணர் குழுவையும், அந்தக் குழுவால் தயாரிக்கப்பட்ட அறிக்கையையும் தம்மால் ஏற்க முடியாது என்றும் இந்த அறிக்கையை வெளியிடக் கூடாது என்றும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் கூறினார்.

மே தினத்தில் மக்கள் இந்த அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்க வேண்டும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டு மக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

இந்த அறிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இலங்கை அரசு நாட்டு மக்களிடம் கையெழுத்திடும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது. அதேபோல் சமயத் தலைவர்களும் இந்த அறிக்கைக்கு தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

அத்தோடு ரஷ்யா மற்றும் சீனா போன்ற நாடுகளும் இந்த அறிக்கைக்கு எதிர்ப்பு தெரிவித்துள்ளன.

இந்த அறிக்கைக்கு எதிராகப் பல்வேறுபட்ட தரப்பினரிடமிருந்தும் எதிர்ப்புகள் வருகின்ற போதிலும் திட்டமிட்டபடி இந்த அறிக்கை இன்று வெளியிடப்படும் என்று ஐ.நாவின் பதில் பேச்சாளர் பர்ஹான் ஹக் தெரிவித்துள்ளார்.

## சத்திய சாயிபாபா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திருவுடல் புட்டபர்த்தி ஆச்சிரம வளாகத்திலேயே நல்லடக்கம் செய்யப்படும்.

உலகம் முழுவதுமுள்ள 114 நாடுகளில் 1,200 க்கும் மேற்பட்ட சாயி நிலையங்கள் அமைந்துள்ளன. ஆந்திர பிரதேசத்தில் சத்ய சாயி பாபா நம்பிக்கை நிதியம், வைத்திய சாலை, பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் என பல அமைப்புகள் பொதுத் தொண்டுகளை மேற்கொண்டு வருகிறது.

பாபாவின் செய்தி கேட்டு பாபாவின் பக்தர்கள் பெரும் துயரம் அடைந்துள்ளனர். இலட்சக்கணக்கான பக்தர்கள் புட்டபர்த்தி ஸ்ரீ சத்ய சாயி ஆச்சிரமத்துக்கு விரைந்தனர்.

ஆந்திர அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில்; சாய்பாபாவின் உயிர் பிரிந்துவிட்டது, அவர் நம்மிடையே இல்லை. பக்தர்களும், தொண்டர்களும் அமைதி காக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாயிபாபாவின் மரணம் குறித்து அறிந்த அரசியல்வாதிகள், தொழிலதிபர்கள் உள்ளிட்ட அவரது ஆதரவாளர்கள் அனைவரும் பிரசாந்தி நிலையத்தில் குழுமியுள்ளனர்.

ஆந்திர முதல்வர் கிரண்குமார் ரெட்டியும் ஹைதராபாத்தில் இருந்து புட்டபர்த்திக்கு விரைந்துள்ளார்.கூட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்காக ஏராளமான பொலிஸார் அப்பகுதியில் குவிக்கப்பட்டுள்ளனர். ஆங்காங்கே தடுப்புகளையும் வைத்து பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

சாயிபாபா மரணம் அடைந்த தகவலை சாயி டிரஸ்டும் தனியாக அதிகாரபூர்வமாக அறிவித்தது. சாயிபாபாவின் மரணச் செய்தி அறிந்ததும் ஆந்திரா முழுவதும் பதற்றம் ஏற்பட்டது. சாயிபாபாவின் பக்தர்கள் துக்கம் தாங்காமல் கண்ணீர் விட்டுக் கதறி அழுதனர். கிராமங்கள் தோறும் சாயிபாபா படத்தை வைத்து பக்தர்கள் கண்ணீர் அஞ்சலி செலுத்தினார்கள். சாயிபாபாவின் படத்துக்கு மாலை அணிவித்து பஜனைப் பாடல்கள் பாடினார்கள்.

ஆந்திர முதல்வர் கிரண்குமர் ரெட்டி தனது சுற்றுப்பயணத்தை ரத்துச் செய்தார். மாநில மந்திரிகள், தெலுங்கு தேசம் கட்சித் தலைவர் சந்திரபாபு நாயுடு உள்ளிட்ட தலைவர்களும், தங்களது நிகழ்ச்சிகளை ரத்துச் செய்துவிட்டு புட்டபர்த்திக்கு விரைந்துள்ளனர்.

ஆந்திர மாநிலம் முழுவதும் கடைகள் அடைக்கப்பட்டன. போக்குவரத்தும் நிறுத்தப்பட்டது. சாயிபாபாவின் மறைவுக்கு பிரதமர் மன்மோகன்சிங் மற்றும் முக்கிய தலைவர்கள் அனுதாபம் தெரிவித்துள்ளனர்.

சாயிபாபாவின் உடலுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக நேற்றுக் காலை முதலே ஏராளமான தலைவர்கள், பிரமுகர்கள், பக்தர்கள் புட்டபர்த்தி நோக்கிச் சென்ற வண்ணம் இருந்தனர்.

(ஒ-சி)

## மரண அறிவித்தல்

### கதிரிப்பிள்ளை பழனிவேல்

(ஓய்வு பெற்ற A.M.C ஓவசியர்)



வீமன்காமம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், குரும்ப சிட்டியை வதிவிடமாகவும், பத்தைமேனி வைரவர் கோயிலடி, அச்சுவேலியைத் தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட கதிரிப்பிள்ளை பழனிவேல் (A.M.C ஓவசியர்) கடந்த (22.04.2011) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரிப்பிள்ளை- வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், இராசேந்திரம்- அருமைமுத்து தம்பதியரின் மருமகனும், நிர்மலாதேவியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற நாகேஸ்வரியின் அன்புச் சகோதரனும், மாணிக்கத்தின் மைத்துனரும், கீதா (நோர்வே), கஜேந்திரன் (சுவிஸ்), செந்தூர்வாசன், ஜயமளா (பிரான்ஸ்), வினோதினி (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ராசலிங்கம் (நோர்வே), தயா(சுவிஸ்), தயாநிதி, சிவநாதன் (பிரான்ஸ்), ராஜன்(சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் அஜாந், ஆதுர்ஷன், அஷ்னி, அஞ்ஜே, சூரியகுமார், நித்திகா, தளிர், பிரனுஜா, சுகன், வினுஷாந் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.04.2011) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில் அவரது பத்தைமேனி இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காகப் பத்தைமேனி தீத்தாங்கேணி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வைரவர் கோயிலடி,
பத்தைமேனி, அச்சுவேலி.

தகவல்:
குடும்பத்தினர்.

(577930)

**ICT வகுப்புக்கள்**

Gr10, Gr 11, A/L மாணவர்களுக்கான ICT, GIT பாடங்கள் குழுக்களாகவும் தனி யாகவும் யாழ் நகர், நகரை அண்மித்த பகுதிகளில் கற்பிக்கப்படும்.
(3497) தொடர்பு:0718214898

**THE SCIENCE CORNER**
CLOCK TOWER LANE - JAFFNA.
COMBINED MATHEMATICS
(ENGLISH MEDIUM)
TRIGONOMETRY
COMMANCE ON - 26.04.2011 (TUE.)
TUE - THU - 6.30 - 7.30 AM
BY:- SIVAGARAN B.Sc.

**இலங்கை வங்கி**
வேலை வாய்ப்பு விண்ணப்பம்
பல்கடமை உதவியாளர், சாரதிகள், எழுது வினைஞர் பதவிகளுக்கு இணையத்தளத்தின் ஊடாக விண்ணப்பிக்கலாம்.
முடிவு திகதி 27.04.2011
ARRUL GLOBAL EXPRESS
NO.1, BROWN ROAD, NAVALAR ROAD JUNCTION, JAFFNA. 0212226113.

**வடமாகாண பட்டதாரிகள் ஆள்சேர்ப்பு பரீட்சைக்கான விசேட கருத்தரங்கு**
★இன்று (திங்கள்) 2.30 - 5.30 மணி,
★புதன் 2.30 - 5.30 மணி,
வியாழன், தினங்களில் மொத்தம் 12 மணித்தியாலய வகுப்புக்கள் நடைபெறும்.
D.M.I. ஆரியகுளம் சந்திக்கு அருகில்.

**BRILLIANT ACADEMY & ENGLISH COLLEGE**
சுதுமலை அம்மன் கோயிலடி, மானிப்பாய்.
இப்பொழுது மானிப்பாயில்.... யாழ். முன்னணி ஆங்கில ஆசிரியர்களின் ஒன்றிணைவில்
Intensive Spoken English Course (3months)
அதிகமான உரையாடல் பயிற்சிகள், அடிப்படை இலக்கணத்துடன் கூடிய பேச்சுப் பயிற்சி, உச்சரிப்பு பயிற்சிகள், ஒவ்வொரு பிரிவிலும் குறைந்தளவு மாணவர்களே உள்வாங்கப்படுவது டன் பயிற்சி முடிவில் சான்றிதழ். இலவச கையேடு.
பிரிவு 1- சனி,ஞாயிறு காலை 8-10 மணிவரை ★ஆரம்பம்: 01.05.2011 ஞாயிற்றுக்கிழமை
குறிப்பு:- பிரிவு 1 இல் உள்வாங்கப்படுபவருக்கே விசேட கட்டணக் கழிவு.
தரம்3 முதல் தரம்11 வரையான வகுப்புக்கள், கலை, வர்த்தகம், கணிதம், உயிரியல் வகுப்புகள் விசேட கணித வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
அனுமதிகளை பதிவு செய்திட:
0773451147, 0774432182, 0774118950.
Sky Line net city சுதுமலை தெற்கு, தாவடி றோட், மானிப்பாய். (3474) நிர்வாகம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.04.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.